www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

தொழிலாளர் பேராளர் மாநாடு

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத் துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்

ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் –
இளம் சோசலிஸ்டுகள்

புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் வெளிநாட்டுக்கிளை "தொழிலாளர்பாதை" தொகுப்பு இலக்கம் இதழின் முன்பக்கத்தில் பிராங்போர்ட் மகாநாட்டு செய்தியை பிரசுரிக்கின்றது. ஏனைய கட்டுரைகள் இதழ் 446, 448 ,449 இலிருந்து பிரசுரமாகின்றன.August 1994.

விலை 2-

# சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்தை நோக்கிய திசையில் ஓரடி முன்னால்.

யூன்மாதத்தின் முதலாவது கிழமை முடிவில் (4, 5ம் திகதிகளில்) நான்காவதுஅகிலத்தின் ஐரோப்பிய தொழிலாளர்மகாநாடு பிராங்பேட் (Frankfurt am main) ல் நடைபெற்றது. தொழிலாளவர்க்கத்தையும், முழுமனிதசமுதாயத்தையும் பயமுறுத்தும் வேலையில்லாத்திண்டாட்டம், பாசிசம், போர் ஆகியவற்றிற்கெதிராக போராடுவதற்காக இந்த மகாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.


சமீபகால நிகழ்வுகள் இந்தப்பயமுறுத்தல் எந்தமட்டத்திற்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது என்பதை நிரூபித்துக்காட்டுகின்றன. இறுதியில் இத்தாலியின் அரசாங்கத்தில் பாசிசவாதிகளை அனுமதித்ததிலும் ஜெர்மனியில் பாசிசக்குண்டர்கள் வெளிநாட்டுக்காரர்களுக்கெதிராக தெருக்களில் பயங்கரவாதம் செய்வதிலும், பொஸ்னியாவின் சகோதரயுத்தத்திலும் இது தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த ஆபத்துக்களுக்கான மூலகாரணம் முதலாளித்துவஅமைப்பு முறையின் மீளமுடியாத நெருக்கடியிலிருக்கின்றது. இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரேவழி தொழிலாளவர்க்கத்தை இந்த அமைப்புமுறைக்கு எதிராக அணிதிரட்டுவதிலிருக்கின்றது. இதுதான் இந்த மகாநாடு முன்வைத்த பிரதானமான செய்தியாகும்.

இந்த மகாநாடு ஐரோப்பா முழுமையும் முன்னணிக்குவரும் வலதுசாரி பாசிச சக்திகளுக்கெதிராக தொழிலாளவர்க்கத்தை ஒரு புதியஅரசியல் வேலைத்திட்டத்தினால் ஆயுதமயமாக்கி அணிதிரட்டுவதை தனது இலக்காக தீர்மானித்துள்ளது.

பல மாதங்களாக ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, அயர்லாந்து, பிரித்தானியா ஜெர்மனியில் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான அரசியல் வேலைகளின் உச்சக்கட்டமாக இந்த மகாநாடு உருவாகியது.

ஜேர்மனியிலும், பிரித்தானியாவிலும் நான்காவதுஅகிலத்தின் பிரிவுகளான சோசலிசத்தொழிலாளர்கழகமும் (BSA) , சர்வதேசகம்யூனிஸ்ட்கட்சியும் (ICP) ஆறு வேட்பாளர்களை யூன்மாதம் 12ம் திகதி நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத்தேர்தலில் நிறுத்தியிருந்தன. இந்த அரசியல் வேலையின் அடித்தளமாக இருந்த "ஐரோப்பியஅறிக்கை" பத்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல




மகாநாட்டு மேடை.

ஆயிரக்கணக்கான பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. இந்த அறிக்கை சோசலிசவேலைத்திட்டத்தின் அடிப்படையிலான சர்வதேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்தை மத்தியபுள்ளியாகக் கொண்டிருந்தது. இந்த வேலைத்திட்டத்திற்கிருந்த ஆதரவினை மகாநாடு பிரதிபலித்தது. பல நாடுகளிலிருந்து வந்திருந்த நான்காவதுஅகிலத்தின் அங்கத்தவர்களுடன் பிரித்தானியாவிலிருந்தும், ஜேர்மனியிலிருந்தும் EKO Stahl, Buderus, Opel போன்ற பிரதானமான தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர்களும் பங்குபற்றினர். இவர்களுடன் இலங்கை, துருக்கி, ஈரான், மொறோக்கோ நாடுகளைச்சேர்ந்தவர்களும் பங்குகொண்டனர்.

இந்த மகாநாட்டின் பிரதானமான பேச்சுக்களும், தீர்மானங்களும் நான்காவதுஅகிலத்தின் அனைத்துப்பிரிவுகளினதும் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன.

இரண்டுநாள் நடைபெற்ற இந்த மகாநாட்டினதும், கலந்துரையாடல்களினதும் முக்கியத்துவம் பற்றி நான்காவதுஅகிலத்தின் அனைத்துலகக்குழுவின் காரியாளர் பீற்றர்சுவாட்ஸ் (Perter Schwarz) தனது முடிவுரையில் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்.

"தொழிலாளவர்க்கத்தின் அரசியல்நெருக்கடியைத் தீர்க்கும் திசையில் இந்த மகாநாடு முக்கியமான அடியினை முன்வைத்திருக்கின்றது. இது வளர்ச்சியடையும் தேசியவாதம், இனவாதம், போர் ஆகியவற்றிற்கு ஒரு மாற்றீடாக சர்வதேசத்தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம் இருக்கின்றதென்பதைக்காட்டியிருக்கின்றது.

தொழிலாளவர்க்கத்தினால் மட்டும்தான் தேசியமுரண்பாடுகளை முடிவிற்கு கொண்டுவரமுடியும். ஏனெனில் தொழிலாளவர்க்கம் ஏற்கனவே கார்ல் லீப்னெக்ட் (Karl Liebknect) கூறியமாதிரி தந்தை நாட்டைச் சொந்தமாக வைத்திருக்கவில்லை. இதை நடைமுறையில் செயற்படுத்துவதற்கான ஒரேஒரு கட்சி நான்காவதுஅகிலம் மட்டுமேயாகும்."

## தொழிலாளவர்க்க இயக்கத்தின் நெருக்கடி.

இந்த மகாநாட்டின் ஒரு மத்திய அம்சமாக பழைய சீர்திருத்தவாத, ஸ்டாலினிச கட்சிகளினதும், தொழிற்சங்கங்களினதும் முழுமையான வங்குரோத்து அமைந்திருந்தது. இந்த ஸ்தாபனங்கள் தொழிலாளவர்க்கத்தின் மிகவும் அடிப்படையான நலன்களைத்தன்னும் பாதுகாக்கும் விருப்போ அல்லது தகமையையோ அற்றவைகளாகும். ஜேர்மனியில் SPDயின் அரசியல் பெரியபிரித்தானியாவில் தொழிற்கட்சியின் அரசியல் ,இத்தாலியிலும், பிரான்சிலும் கம்யூனிஸ்ட்கட்சிகளது அரசியல் எந்தவொரு முதலாளித்துவக்கட்சியினது அரசியலிலிருந்தும் வித்தியாசப்படவில்லை. இந்தக் கட்சிகள் தொழிலாளவர்க்கத்தின் வாழ்க்கைத்தரத்தின் மீதான தாக்குதல்களுக்கெதிராக முன்வரவில்லை. பதிலாக இத்தாக்குதல்களை நடைமுறைப்படுத்தும் முதலாளித்துவத்தின் கைக்கூலிகளாகத் தொழிற்படுகின்றனர்.

இந்த ஸ்தாபனங்களின் அதிகாரத்துவங்கள் போருக்குப் பிந்திய காலப்பகுதியில் வர்க்கசமரசத்தை நடைமுறைப்படுத்தும் வேலையினை மேற்கொண்டபவை. இன்று முழுமையாக தனியார்மயப்படுத்தப்பட்டதுடன் அங்கத்தவர்களின் நலன்களிலிருந்து தங்களைப்பிரித்துக்கொண்டன. இந்த அதிகாரத்துவங்களினது சிந்தனையும், முழுமையான இருப்பும் முதலாளித்துவ

17 பக்கம் பார்க்க....

**வடக்கு— கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

மாதமிரு இதழ் — 449 ● 1994 ஜூன் 17 வெள்ளிக்கிழமை

**தொழிலாளர் பேராளர் மாநாடு**

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத் துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

**கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்**

**ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

# வர்க்கப் போராட்டத்தின் புதிய கட்டம்

## புரட்சிகர வேலைத்திட்டமும் தலைமையும் வேண்டும்

வர்க்கப் போராட்டத்தின் புதிய அபிவிருத்தியினை கடந்த சில தினங்களாக வெளிப்படத் தொடங்கிய தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும், பிரச்சாரங்களும் காட்டிக் கொண்டுள்ளன.

ஜூன் 4ம் திகதி தொடக்கம் 6ம் திகதி வரையில கொழும்புத் துறைமுகத்தின் 16,000 தொழிலாளர்கள் தீர்க்கமான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சீ. எம். யூ— யூ. என். பி. தொழிற் சங்கத் தலைவர்களினாலேயே தொழிலாளர்கள் வேலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர், விபத்துக்குள்ளான ஒரு தொழிலாளிக்குத் துறைமுக வைத்திய நிலையத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்படாததால் ஏற்பட்ட தீங்கினை எதிர்த்தே தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது தமது சேவை நிலைமையையிட்டு தொழிலாளர்களின் ஆத்திரத்தினை மட்டுமன்றி, யூ என்.பி. அரசாங்கம் தொடுக்கும் தாக்குதல்கள் தொடர்பாக தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்துவரும் கொதிப்பினையும் காட்டிக் கொண்டுள்ளது.

ஜூன் 9ம் திகதி இலங்கை 'ரெலிகொம்' நிறுவனத்தினைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள் ''பாதுகாப்புச் சேவையில்'' ஈடுபடும் பொலிசாரால் ஒடுக்குமுறையை தூண்டும் விதத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலை எதிர்த்து அந்நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து பிரச்சாரத்தில் இறங்கினார்கள். பொலிசாரை கூட்டுத்தாபன பூமியில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக விளங்கியது. பொலிசாரை நீக்கி இராணுவத்தினைப் போடுவதற்கு தொழிற்சங்கத் தலைவர்கள் இணங்கிக் கொண்டு வேலை நிறுத்தத்தினை நிறுத்தினர்.

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கம் ''மேலதிக வேலை செய்ய மறுக்கும்'' எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் சம்பள உயர்வு உட்பட்ட அநேக கோரிக்கைகளை உள்ளடக்கிய பிரச்சார இயக்கத்தினைத் தொடுத்தது.



இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மறியல் போராட்டத்தில்

மருதானை புகையிரத தாபரிப்பு நிலையத்தினைச் சேர்ந்த ஊழியர்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவு பற்றிய கோரிக்கையின் மீது நிர்வாகம் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பியதை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். அவ்வாறே இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் சம்பளம் உட்பட்ட பல கோரிக்கைகளின் மீது வேலை நிறுத்தத்தில் குதிக்க ஆயத்தமாகி வருகின்றார்கள். ஜூன் 10ம் திகதி களுத்தறை ஏ. எம். டபிள்யூ. கம்பனியைச் சேர்ந்த தொழிலாளர்களின் போராட்டம் வெடித்தது. மூன்று தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ய நிர்வாகம் எடுத்த முடிவினை எதிர்த்தே இது வெடித்தது. நாடு பூராவும் தபால் ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். பதுளை மாவட்டத்தில் ஊனுகல தோட்டம் உட்பட்ட பல தோட்டங்களில் தொழிலாளர்கள் நிர்வாகங்களின் பல்வேறு தாக்குதல்களையும் எதிர்த்து போராட்டத்தில் இறங்கியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

இப் போராட்டங்களுடன் கைகோர்த்த வண்ணம் ஏழை விவசாயிகளிடையே பதட்டமும் பிரச்சாரமும் வளர்ச்சி கண்டு வருகின்றது. பொலநறுவை, கிராந்துறு கொட்டேயைச் சேர்ந்த 19 விவசாயிகள் வங்கி விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலும் படுமோசமான வறுமையினாலும் தற்கொலை செய்து எதிர்ப்புக் காட்டிக் கொண்டனர்.விவசாயிகளின் போராட்டம் வெடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு முதலாளித்துவ சி. ல. சு. க.வும் அதைச் சூழ திரண்டுள்ள விவசாயிகள் அமைப்புக்களும் அரசாங்க சார்பு அற்ற அமைப்புக்களும் எதிர்ப்பு இயக்கத்தினை ஏற்பாடு செய்யும் சாட்டில் களத்தில் இறங்கியுள்ளன.

இலவசக் கல்வி வெட்டினை எதிர்த்தும் வேலையின்மைக்கு எதிராகவும் பல்கலைக் கழக மாணவர்களிடையே பிரச்சாரம் வளர்ச்சி கண்டு வருகின்றது. கம்பஹா ஆயுள்வேதக் கல்லூரிக்கு பல்கலைக் கழக அந்தஸ்து கோரி மாணவர்கள் நடாத்தும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக கடந்த வாரம் கொழும்பு, கம்பஹா முதலிய இடங்களில் மறியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதேவேளையில் றுகுணு பல்கலைக் கழக மாணவர்கள் வதிவிட வசதிகள் செய்து தரும்படி கோரி விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும், வங்கிகளும் உலகளாவிய ரீதியில் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதல்களின் ஒரு பாகமாக இலங்கை யூ. என். பி. அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் நடைமுறைப்படுத்தியுள்ள பேரழிவுகளுக்கு எதிராகவே தொழிலாளர் வர்க்கத்தினதும் ஏனைய ஒடுக்கப்படும் மக்களதும் இப்போராட்டங்கள் புதிய சுற்றாக வெடித்துக் கொண்டுள்ளன. தனியார் மயமாக்கத்தினால் தொழில் அழிவும், சமூக நலன்புரி சேவைகளின் வெட்டும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வும் இலாப உழைப்புக் கொள்ளைக்கான நிலைமைகளை மேலும் மேலும் விஸ்தரிக்கின்றது. இதன் மூலம் யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை கசக்கிப் பிழிந்துள்ளது. இந்த வருடத்தின் தொடக்கத்தில் நூற்றுக்கு 11.7 வீதமாக குறைந்துள்ளதாக அரசாங்கம் கூறிக் கொண்ட உத்தியோகபூர்வமான பண வீக்க வீதம் மார்ச்சில் 14.53க்கும் ஏப்பிரலில் 16.98க்கும் ஏறியுள்ளது. இது இவ்வருட இறுதியில் நூற்றுக்கு 22 வீதமாக உயரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலியன் 'பிஸ்னஸ் ஏசியா' சஞ்சிகைக்கு ஜனாதிபதி விஜேதுங்க வழங்கிய பேட்டியில் தனியார் மயமாக்கத்துக்கென பட்டியல் போடப்பட்டுள்ள 69, அரச நிறுவனங்களுள் எஞ்சியுள்ளதையும் மிச்சம் பிடிக்காமல் தனியார்மயப் படுத்துவதாக தெரிவித்துள்ளார். அத்தோடு சுதந்திர வர்த்தக வலயம் என்ற முறையில் ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டு இலாப உழைப்பினைச் சுரண்டும் நிலைமைகளை அபிவிருத்தி செய்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் விதித்துள்ள கட்டளைகளதும் திட்டங்களதும் அடிப்படையில் தொடுக்கப்படும் தாக்குதல்கள் உக்கிரம் அடைகின்றது. இம்முறைத் தேர்தலில் வெற்றிகொள்ளும் சூழ்ச்சியாக விஜேதுங்க சமீபத்தில் வெட்டிய உதவி மானியங்களில் ஒரு பகுதியை வழங்க தீர்மானித்த சமயத்தில் ச. நா. நிதியமும் உலக வங்கியும் பாய்ந்து விழுந்தன. எவ்வளவு கடுமையான தாக்குதல்களை நடாத்தும் திசையில் இலங்கை முதலாளிகளைக் கொண்டு செல்ல ஏகாதிபத்தியவாதிகள் முயல்கிறார்கள் என்பதை இது காட்டியது.

இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்கள் இந்தப் பின்னணியிலேயே அபிவிருத்தி காணத் தொடங்கியுள்ளன. உலகளாவிய ரீதியில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் இராட்சத வங்கிகளும் இவற்றின் ஏஜன்டு அரசாங்கங்களும் தொடுக்கும் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டங்களுடன் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டமும் இணைந்து கொண்டுள்ளது. நீண்ட காலத் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் மூலம் வெற்றி கொள்ளப்பட்ட நலன்புரி வேலைத் திட்டங்களை வெட்டிச் சரிப்பதற்கும் வேலை நீக்கங்களுக்கும், சேவைநிலைமைகள் வெட்டுக்கும் எதிராக ஐரோப்பாவிலும், யப்பானிலும் போராட்டங்கள் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்தியாவின் பொருளாதாரத்தினை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்குத் திறந்து விட்டு உலக வங்கித் திட்டங்களை அமுல் செய்யும் திட்டத்துக்கு எதிராகத் தோன்றும்

5 ம் பக்கம் பார்க்க)

**வடக்கு— கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழுவின் கோரிக்கையும் தமிழ் தேசிய இனப் பிரச்சினையும்

கொழும்பில் வாழும் உயர்மட்ட தமிழ் முதலாளித்துவ அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், உயர்தொழில் நிபுணர்கள் எண்பதின்மரைக் கொண்டு நிறுவப்பட்டுள்ள ''கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழு'' தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படி யூ என் பி, சிலசுக உட்பட்ட சிங்கள முதலாளித்துவக் கட்சிகளைக் கேட்டுக்கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் இனவாத யுத்தம், ஒடுக்குமுறை, ஆத்திரமூட்டல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நாசங்கள் பற்றிக் குறிப்பிடும் இந்த அறிக்கை, தமிழ்மக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழவேண்டும் என ஜனாதிபதி விஜேதுங்க அரசாங்கமும் சிலசுக தலைவர்களும் எழுப்பிவரும் இனவாதக் கர்ஜனைகளை கண்டனம் செய்துள்ளது. இறுதியில் இந்த அறிக்கை, சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் கீழ்க்காணும் நடவடிக்கையை எடுக்க ''சிங்கள மக்கள்'' செயல்பட வேண்டும் எனக் கோருகின்றது.

''தமிழர்களும் தனித்துவ மானவர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களின் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக அங்கீகரிக்க வேண்டும். சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக தமிழர் பிரச்சினைக்கான தமது தீர்வினை உடனடியாகவும் பகிரங்கமாகவும் முன்வைக்க வேண்டும். தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுமுகமாக தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.''

''சிங்கள மக்களின் அரசியல் தலைமைத்துவம்'' என இந்தப் ''பணிக்குழு'' கருதுவது யூ என் பி, சிலசுக உட்பட்ட சிங்கள முதலாளித்துவக் கட்சிகளையே: தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் தலைவர்களும் எங்ஙனம் தாம் 'தமிழ் மக்களை' பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்கின்றனவோ அங்ஙனமே சிங்கள முதலாளித்துவக் கட்சிகளும் தாம் 'சிங்கள மக்களை' பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்கின்றன. ஆதலால் அவர்கள் உரியமுறையில் தமது மகஜரை யூ என் பி, சிலசுக விடம் அனுப்பி வைத்துள்ளன. ஐந்து தசாப்தங்களாக கட்டெட்ட தமிழர் விரோத — சிங்கள இனவாத ஒடுக்குமுறையினதும் ஆத்திரமூட்டல்களதும் சிருஷ்டியாளர்களான இந்த அடக்குமுறை முதலாளித்துவக் கட்சிகள் ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளின் தீர்வாளர்களாகப் பரிணாமம் அடைவது எப்படி? மீண்டும் ஒருமுறை தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் படுவங்குரோத்து இங்கு நிர்வாணக் கோலம் எடுத்துள்ளது.

1948ல் அரசியல் அதிகாரத்தினைத் தமது கரங்களுக்கு மாற்றிக் கொண்டதில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து முதுசமாகப் பெற்ற இனவாதப் பிளவுகள் மூலம் வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்துவது இலங்கை முதலாளி வர்க்கத்தின் முக்கிய அரசியல் விதிமுறையாகிற்று. சிங்கள முதலாளி வர்க்கம் தமிழர் விரோத இனவாதத்தினை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை இனவாதக் கோட்டின் ஊடே பிரித்துப் போடப் பயன்படுத்தினர். முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி உக்கிரம் அடையும் அளவுக்கு இனவாத ஆத்திரமூட்டல்களும், ஒடுக்குமுறைகளும் உக்கிரம் கண்டன.

1977ல் ஆட்சிக்கு வந்த ஜயவர்தன அரசாங்கம் திறந்த பொருளாதாரம் என்ற பேரில் ஏகாதிபத்தியவாதிகளின் புதிய அவசியங்களுடன் பிணைக்கப்பட்ட தமது வர்க்க ஆட்சியை கொண்டு செல்வதற்கு முதலாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தினைப் புதுக்கியமைக்கும் போது தமிழர் விரோத இனவாத அடக்குமுறையை யுத்தத்தின் மட்டத்துக்கு உயர்த்தியது. ஏகாதிபத்தியவாதிகளினால் சிபார்சு செய்யப்பட்ட உக்கிரமான சுரண்டலை ஊர்ஜிதம் செய்தல், தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் வெற்றி கொண்டிருந்த அனைத்து உரிமைகளையும் நாசமாக்குதல், நாற்றமெடுத்த முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியினைத் திணிக்கும் இனவாத இரத்தக் களரிகளைக் கட்டவிழ்த்து விடுதல் மூலம் தொழிலாளர் –ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்துவது முன்னொருபோதும் இல்லாத மட்டத்துக்கு உயர்த்தப்பட்டது. ஒடுக்குமுறைக்கு எதிராக எழுச்சி கண்ட தமிழ் மக்களை நசுக்க 1983ன் இரத்தக் களரியும், நீண்ட யுத்தமும், 1987 இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் பதிலாகியது. ஏகாதிபத்தியத்துடன் பிணைக்கப்பட்டு தொழிலாளர்-ஒடுப்படும் மக்களுக்கு என்றும் கிடுநடுங்கி வாழும் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கம், பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையே சமத்துவத்தினை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் தேசிய ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதிலும் விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணுவதிலும் வெற்றி காணமாட்டாது என்ற உண்மையை இலங்கையின் முதலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினால் தோய்த்து எழுதியுள்ளது.

## எண்ணம்

## தமிழ் முதலாளி வர்க்கம்

தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் தலைவர்களும் இந்த இனவாத நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பவர்களாகினர். ஒரு முறை சிங்கள முதலாளி வர்க்கத்துடனும் மறுமுறை இந்திய முதலாளி வர்க்கத்துடனும் சமரசம் செய்து கொள்வதன் மூலம் தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் சுரண்டலில் தமது பங்கினைச் சாக்க இடைவிடாது முயன்று வந்தனர். இதன் பொருட்டு தமிழ் இனவாதத்தினைத் தூண்டி வந்தனர். அது தமிழ் பேசும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களைத் தமது பிடிக்குள் வைத்திருக்கவும் தீவின் தொழிலாளர் வர்க்கத்தினைப் பிளவுபடுத்தி வர்க்க ஆட்சியை தொடர்ந்து நடாத்த முண்டு கொடுக்கும் முதலாளித்துவ அவசியத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட விதிமுறையாக விளங்கிற்று.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தின் இறுதித் தசாப்தத்திலும், சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர் கழிந்து சென்ற ஒரு தசாப்தத்துக்கும் மேற்பட்ட காலப் பகுதியிலும் இனவாதத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது தொழிலாளர் வர்க்கமே. தொழிலாளர் வர்க்கத்தினைச் சூழ ஏனைய ஒடுக்கப்படும் மக்கள் ஈர்க்கப்பட்டனர், முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் நெருக்கடி உக்கிரம் அடையும் நிலைமையில் 1964ல் முதலாளித்துவ சி. ல. சு. க. வினுள் நுழைந்து கொண்டதன் மூலம் சமசமாஜ கட்சி சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தின் இந்த அனைத்துலகவாத ஐக்கியத்துக்கு இறுதி அடி கொடுத்தது. தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண ஒடுக்கப்படும் மக்கள் மீது தமது ஆதிக்கத்தினை இறுக்கிக் கொள்ளவும் விஸ்தரிக்கவும் வாய்ப்பான நிலைமையை உருவாக்கியது சமசமாஜ பப்லோவாதிகளின் மாபெரும் காட்டிக் கொடுப்பே.

பாரம்பரிய தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின்—தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி வங்குரோத்து முதலாளித்துவ நலன்களுக்கான வேலைத்திட்டங்களும் அம்பலமாகியதைத் தொடர்ந்து 'ஆயுதப் போராட்டத்தின்' தமிழ் குட்டி முதலாளித்துவப் 'பதிலீடு' முன்வைக்கப்பட்டது. பாரம்பரிய தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் தோல்வியைத் தழுவிக் கொண்ட நிலையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றியது.

இன்று இரண்டு தசாப்தங்கள் கழிந்து விட்டன. இலங்கையின் விஜேதுங்க அரசாங்கம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடிய சுரண்டலுக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பலியிடும் நிலைமைகளை காட்டுமிராண்டி மட்டத்துக்கு உயர்த்தும் பொருட்டு இனவாத யுத்தத்தினைத் தூண்டி வருகின்றது. முதலாளி வர்க்கத்தின் மற்றுமோர் பிரிவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவத் தலைவர்களுடன் சமரசம் செய்து கொள்வதன்மூலம் இலங்கை–தமிழ் ஈழம் பிராந்தியங்கள் இரண்டிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கசக்கிப் பிழியும் ஒரு திட்டத்தினைத் தயார் செய்து வருகின்றனர். ஏகாதிபத்தியவாதிகள் இப்பிராந்தியத்தில் சுரண்டலுக்கான நல்ல நிலைமைகளை உருவாக்கும் திசையில் இவர்களை நெறிப்படுத்தச் செயற்படுகின்றனர். மத்திய கிழக்கில் பீ. எல். ஓ—இஸ்ரேல் பாணியிலான சமரசத்தினை விடுதலைப் புலிகள்—இலங்கை அரசாங்கத்தின் இடையே திணிக்க ஏகாதிபத்தியவாதிகள் ப்ரேரித்துள்ளனர். அதே சமயம் அவசியப்படின் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையுடன் வேறான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் ஏகாதிபத்தியம் பின்வாங்காது. இலங்கை முதலாளிகளுடன் சுரண்டலின் பங்கினைப் பகிர்ந்துகொள்ள தமது தயார் நிலையினை வெளிப்படுத்திக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள், ஏகாதிபத்தியத்துடன் தனியான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட வழிமேல் விழிவைத்துள்ளது பற்றி வெளியிட்டது ஒரு தடவை, இரு தடவை அல்ல. நாற்றம் கண்ட ஏனைய தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் முதலாளித்துவ அரசின் கருவியாகியுள்ளன.

''கொழும்புவாழ் தமிழ் மக்களின் பணிக்குழு'' என்ற பேரில் இப்போது அமைக்கப்பட்டுள்ள தமிழ் முதலாளித்துவ அமைப்பு-இலங்கை முதலாளித்துவ வர்க்கம் முகம் கொடுத்துள்ள நெருக்கடியின் மத்தியில் ஏகாதிபத்திய ஏஜன்சியாக ஆட்சிக்குப் போட்டியிடும் சிங்கள முதலாளித்துவக் கட்சியுடன் பேரம் பேசுவதில் இறங்குவதற்கெனத் தயார் செய்யப்பட்ட ஒரு இயக்கமேயன்றி வேறொன்றும் அல்ல. அதன் பேரில் இனவாத ஒடுக்குமுறையினையிட்டு தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே கொதித்துக் கொண்டுள்ள குரோதத்தின் மீது காலூன்றிக் கொள்ள முயலும் ஒரு இயக்கமாகும்.

இந்தத் தமிழ் முதலாளித்துவக் குழு தேடுவது தமிழ் ஒடுக்கப்படும் மக்களதும்—தொழிலாளர்களதும்—ஏழை விவசாயிகளதும் இளைஞர்களதும்-மற்றும் ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரதும் — பிரச்சினைகளுக்கான தீர்வு அல்ல. தமது முதலாளித்துவச் சுரண்டல் அவசியங்களைப் பேணிக் கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வேயாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, புளொட், ஈபீஆர்எல்எப் முதலான அமைப்புக்களதும் விடுதலைப் புலிகளதும் நிலைப்பாடு இதுவே. தமது இயக்கத்தினால் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொணர முடியாது போகுமிடத்து வேறான ஒரு ஆட்சிப் பிராந்தியங்களாக ஏகாதிபத்தியவாதிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள இந்தச் சகல அமைப்புக்களும் தயாராக உள்ளன.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு ஜனநாயக உரிமையைப் பேணவும் இலாயக்கற்ற வங்குரோத்து வர்க்கமாகும். அவ்வாறே இந்த முதலாளி வர்க்கத்தின் சகல பிரிவினரும் ஏகாதிபத்திய ஒடுக்குவோனின் மடியில் பதுங்கிக்கொண்டு இம்மக்களை ஒடுக்குமுறையின் காலடியில் தள்ளிவிடச் செயற்படும் பிற்போக்குச் சக்திகளாகப் பரிணாமம் அடைந்துள்ளன.

இன்று உற்பத்தி பூகோளமயமாகியுள்ள நிலையில் முன்னர் போல் அரச எல்லைக்குள் கட்டுண்டு போய்விடாது, பல்வேறு பிராந்தியங்களினுள்ளும் ஊடுருவி சுரண்டலைத் தொடர ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களால் முடியும். அத்தகைய ஒரு பிராந்தியத்தின் கொம்பிரதோர்களாக செயற்படும் தகுதியும் தேவையும் விஜேதுங்க அரசாங்கத்துக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் மட்டுமன்றி வடக்கு—கிழக்கு மாகாணத் தமிழ் முதலாளிகளுக்கும் உண்டு. ஏகாதிபத்தியவாதிகள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி பெரும் கருணையுடன் இப்போது பேசத் தொடங்கியிருப்பது அனைத்துலக மூலதனத்தின் உக்கிரமடையும் சுரண்டல் தேவைகளுக்குத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்தும் பொருட்டு பிரிவினையின் ஆயுதமாக மட்டுமல்லாது இங்ஙனம் இவற்றை பங்கு போட்டுக்கொள்ளும் தேவையினாலும் ஆகும்.

4-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சந்திரசேகரன், காதர் விடுதலை

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

– ஆனந்த வக்கும்புர –

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்பட்டிருந்த தொழிற்சங்கத் தலைவரும் மலையக மக்கள் முன்னணி தலைவருமான பி.சந்திரசேகரன் பிணையில் விடுதலை செய்யவும் அக்கட்சியின் தலைவரான ஐ. ஏ. காதரை விடுதலை செய்யவும் அரசாங்கத்துக்கு நேரிட்டுள்ளது.

இவர்களின் முதலாளித்துவ அரசியலுடனான ஈடுசெய்ய முடியாத முரண்பாடுகளுக்கு இடையேயும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளும் இவர்களை விடுதலை செய்யக் கோரும் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தது, இந்த அரசியல் படிப்பினையையிட்டு மீண்டும் ஒரு தடவை தொழிலாளர் வர்க்கத்தின் கவனம் திரும்ப வேண்டும்.

கிட்டத்தட்ட இரண்டு வருட காலம் இவர்கள் கைது செய்யப்பட்டும் ஒடுக்குமுறை சிறைகளில் தள்ளப்பட்டும் மிருகத்தனமான சித்திரவதைகளுக்கும் உள்ளாகினர். இப்போது இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட பொய்வழக்கு பொறிந்து வீழ்ந்துள்ளதோடு இந்தச் சித்திரவதைகளின் சிருஷ்டிகர்த்தாக்களான யூஎன்பி அரசாங்கமும், பொலிஸ், இராணுவமும் பொய் புனை வழக்கின் தயாரிப்பாளர்களும் குற்றவாளிகளாகச் சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளனர், எனினும் அரசாங்கம் புதிய அவசரகாலச் சட்டங்களை இயற்றிக் கொள்வதன் மூலம் புதிய தொழிலாளர் அடக்குமுறைகளுக்குத் தன்னை தயார் செய்து கொள்கின்றது.

இந்த வழக்கின் சந்தேக நபர்கள் தொடர்பாக யூ. என்.பி. அரசாங்கம் கையாண்ட கைதுசெய்தல், சித்திரவதை, பொய் வழக்கு விதிமுறைகள் யூஎன்பி அரசாங்கம் தனது கடந்த 17 வருடகால ஆட்சியில் முழுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எதிராகக் கையாண்ட இனவாத, தொழிலாளர் விரோத ஒடுக்குமுறையினை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் செல்வதாய் விளங்கியது. தோட்டத் தொழிலாளர்களை நூற்றுக்கணக்கில் கொன்றும். அவர்களின் லயன் அறைகளை நூறு, ஆயிரக்கணக்கில் தீமூட்டியும், தொழிலாளர் குடும்பங்களை ஆயிரக் கணக்கில் இருப்பிடங்களில் இருந்து துரத்தியும் யூ. என். பி. — இதொகா அரசாங்கம் நடாத்தி வந்த இந்த அடக்குமுறை எவ்வளவுதான் உக்கிரமாக இருந்த போதிலும் அதனை தமது கீழ்ப்படிவான அரசியல் பொலிஸ் படையாளாக கடமைபுரிந்த சந்திரசேகரன் போன்றோருக்கு எதிராகவும் தொடுக்க நேர்ந்தது. இந்தத் தாக்குதல்களுக்கு உள்ளான சந்திரசேகரன் தொண்டமானின் இ.தொ.கா.வின் உயர் அதிகார சபையின் அங்கத்தவராக விளங்கியதோடு, 1977 — 1985 வரை யூஎன்பி அரசாங்கத்தின் கொள்கை, அடக்குமுறைகளின் காவலனாகவும் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அம்சங்கள் சந்திரசேகரனதும் காதரதும் அவர்களது மலையக மக்கள் முன்னணியினதும் பிற்போக்கு அரசியலுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இதொகாவினுள்ளான பிளவின் பின்னர் சந்திரசேகரன் அதில் இருந்து வெளியேறி தனியான ஒரு தொழிற்சங்கத்தினையும் அரசியலமைப்பினையும் அமைத்துக் கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றித் திசைதிருப்பும் வேலையை வேறுவிதத்தில் தொடர்ந்ததே அவரின் கைதுக்கான காரணமாகியது. அவரின் பிளவு இதொகாவைப் போன்றே யூஎன்பி அரசாங்கத்திலும் எதிரொலித்தது.

இதற்குப் பதிலடியாக இதொகா தலைமையின் வழிநடாத்தலுடனும் உதவியுடனும் மலையக மக்கள் முன்னணி தலைமைக்கு ஒடுக்கு முறையைத் தொடுப்பதன் மூலம் சந்திரசேகரன் போன்ற முதலாளித்துவ அரசியல்வாதிகள் தொழிலாளர் முன்நிலையில் துவளும் முதலாளித்துவ தலைவர்களுடன் இணைவதும், குழுக்களை அமைப்பதும் எத்தனை கெடுதியானது என்பதைக் காட்டுகின்றது. அவரின் முதலாளித்துவச் சார்பு நிலைமையைக் கூடக் கணக்கிலெடுக்காமல் யூஎன்பி அரசாங்கம் அவரைக் கைது செய்ததற்குக் காரணம் அத்தகைய முதலாளித்துவச் சார்பு தலைமையின் கீழ்த் தன்னும் தொழிலாளர்கள் அரசாங்கத்திலிருந்து வேறாகப் பிரிந்து அணிதிரள்வதைச் சகித்துக்கொள்ள முடியாத நிலைக்கு அரசாங்கம் சென்றுள்ளதே, சந்திரசேகரனும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களும் யூஎன்பி அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு வழங்கிய ஆதரவு காரணமாகவே யூஎன்பி அரசாங்கம் இந்த ஒடுக்குமுறையைத் திணிக்கும் சக்தியைப் பெற்றது.

மறுபுறத்தில் அரசாங்கம் இவர்களை விடுதலை செய்ததற்குக் காரணம் அது நெருக்குவாரங்களுக்கு குனிந்து போகும் நிலைக்கு வந்துள்ளது அல்ல. முதலாளித்துவ ஆட்சி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்தினை குழப்பியடிப்பதும் அதற்கு உக்கிரமான தாக்குதலை தொடுப்பதற்கான இத்தலைவர்களின் சேவையை உயர்மட்டத்தில் பெற்றுக்கொள்வதுமே அரசாங்கத்தின் திட்டம். இது எதிர்ப்புரட்சிக்கான முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைவர்களினை வழிநடாத்த ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் மேலும் செயற்படுவதும் பிரிவினைத் தேசியவாதத்தினை மேலும் அப்பட்டமான முறையில் சேவைக்கு அழைப்பதுமாகும். இது ஒருபுறத்தில் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான மிலேச்ச பாசிச சர்வாதிகாரம் தலையெடுக்கையில் சிறப்பாகத் தோட்டத் தொழிலாளர்களைத் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரில் இருந்தும் ஒடுக்கப்படும் விவசாயிகளில் இருந்தும் பிரித்துப் போடும் அவசியத்துடன் பிணைந்து கொண்டுள்ளது. ஏனெனில் சந்திரசேகரனதும் அவரது சகாவான காதரதும் கோட்பாடும் வேலைத்திட்டமும் இனவாத பிளவுகளின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களை வர்க்கப் போராட்டத்தில் இருந்து தள்ளி வைப்பதுவே.

நாற்றம்கண்ட மாஓவாதியான காதரினால் முன்வைக்கப்பட்டதும் மலையக மக்கள் முன்னணியின் அடிப்படையானதுமான இக்கோட்பாடு தோட்டத் தொழிலாளர்கள் ''தனியான தேசிய இனம்'' எனவும் சுதந்திர மலையக முன்நோக்கின் அடிப்படையில் அவர்கள் தேசியவாத ரீதியில் ஏனைய ஒடுக்கப்படும் மக்களில் இருந்து தனியாக ஓரணி திரள வேண்டும் என்றது, இந்நிலைப்பாடு தோட்டத் தொழிலாளர்களின் அபிலாசைகளையன்றி தமிழ் பேசும் முதலாளி வர்க்கத்தின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் இந்த முன்னோக்கினை அடியோடு வெறுத்து ஒதுக்க வேண்டும்.

பிணையில் விடுதலை ஆனதுதான் தாமதம் சந்திரசேகரன் இன்று யூ என் பியின் நேரடி ஏஜன்டாகச் செயற்படும் இ தொ கா பொதுச் செயலாளர் எம், எஸ்.செல்லச்சாமியுடன் குசுகுசு பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றதோடு தோட்டத் தொழிலாளர்களின் வம்ம எதிரியான சிங்கள இனவாத சிலசுக தலைவர்களுடன் அணிசேர்ந்துள்ளார். இவரது தேசியவாதம் தமிழ் பேசும் வர்த்தகர்களுக்கும் மற்றும் முதலாளிகளுக்கும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் சலுகைகளுக்காக கதவுதட்டும் ஆயுதமாகும். தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமான அதன் பணி: அவர்களை ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்குப் பலிகடாக்களாக்குவதே.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த முதலாளித்துவ தேசியவாத அரசியலை நிராகரிக்க வேண்டும். யூ என் பி அரசாங்கத்தினால் சிறைவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யத் தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை அமைப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசரகாலச் சட்டம் உட்பட்ட சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் தோற்கடிக்கும் பொருட்டு புகக ஜூன் 19ம் திகதி நடாத்தும் தொழிலாளர் பேராளர் மகாநாட்டினைக் கட்டி எழுப்ப முன்வாருங்கள்.

## ஐ.நா. ருவாண்டா படைகளுக்கு ஆதரவு

ஐ.நா. பாதுகாப்புச் சபை மே 17ம் திகதி ருவாண்டாவுக்கு ஒரு அகில ஆபிரிக்க இராணுவப் படையை அனுப்பவும், ஒரு சிறிய மத்திய ஆபிரிக்க நாட்டின் மீது ஒரு முழு அளவிலான ஆயுதத் தடையைத் திணிக்கவும் வாக்களித்தது. கடந்த மாதத்தில் இங்கு அரசியல், போட்டி கணக்குமு படுகொலைகள் காரணமாக 200,000 அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ''மனிதாபிமான பிராந்தியங்களின் உத்தரவாதத்துக்கு'' சுமார் 5500 படைகள் ருவாண்டாவின் தலைநகரான கிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. தலைநகரம் கைப்பற்றப்பட்டதும் ஐ. நா. படைகள் நாட்டுப்புறத்துக்கு பரந்து செல்லும்.

இந்த வாக்களிப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கிளின்டன் நிர்வாகம் இராணுவ நடவடிக்கைகளை 'நடைமுறைக்கிட முடியாது' என வருணித்ததைத் தொடர்ந்தே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஐ. நா வுக்கான அமெரிக்க ஸ்தானிகர் மெடிலின் அல்பிரைட் இதற்கு பதிலாக தன்சானியா, புருண்டி மற்றும் அயல்நாடுகளின் எல்லைகளில் ஒரு கண்காணிப்பு வலயத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகள் அனைத்தும் ருவாண்டா சமாதானப் படைக்கு துருப்புக்களை வழங்க மறுத்து விட்டன. அவை பல்வேறு ஆபிரிக்க முதலாளித்துவ ஆட்சியாளர்களில் சார்ந்து கொண்டு தமது நாற்றம் கண்ட வேலையைத் தொடர எண்ணின. படைகள் ஒருங்கமைக்கப்பட்டதும் தமது படைகளை அனுப்ப நைஜீரியாவும், கானாவும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன. சிம்பாபே, கொங்கோ, தன்சானியாவும் இதில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 500 கானாப் படைகள் உடனடியாக கிகாரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இதே சமயம் ருவாண்டா அகதிகளின் நிலைமை மோசமடைந்து கொண்டுள்ளது. மே மாத முற்பகுதியில் ருவாண்டா–தன்சானியா எல்லையில் சிருஷ்டிக்கப்பட்ட பெனாகோ அகதி முகாமில் ருவாண்டாவில் இருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 350,000 ஆகியுள்ளது. இது தன்சானியாவின் இரண்டாவது பெரும் நகரமாகும். இங்கு சுகாதார, ஆஸ்பத்திரி, தண்ணீர் வசதிகள் கிடையாது. அகதிகளில் அரைப்பங்கினர் 15 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள்—படுகொலைகள் காரணமாக அநாதைகளாக்கப்பட்டுள்ளவர்கள். இங்கு பேதி, நெருப்புக் காய்சல் போன்ற நோய்களின் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது;

## கொழும்பு வாழ் தமிழ் மக்கள்...

பழைய யூகோசலாவியாவினையும் சோவியத்யூனியனையும் உடைத்து தகர்த்து திணித்த அரசுகளதும், உலகின் ஏனைய பாகங்களில் வெடிதுள்ள இனவாத மோதுதல்களதும் வேர் இங்குதான் உள்ளது. ஒடுக்கப்படும் தேசிய இனத்தினர் ஏகாதிபத்தியத்தினதும் ஏகாதிபத்திய சார்பான ஆட்சியின் கீழும் அடையக் கூடிய விமோசனம் கிடையாது. ஒரு நூற்றாண்டு காலத்தின் முக்கிய அனுபவமும் படிப்பினையும் அதுதான். ஏகாதிபத்தியத்தினையும், பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய சார்பு ஆட்சிகளையும் தூக்கிவீசி, அனைத்துலக சோசலிசத்தினை அமைப்பதன் மூலம் மட்டுமே ஒடுக்கப்படும் தேசிய இனமும் ஒடுக்கும் தேசிய இனத்தின் தொழிலாளர்களும், ஏழைகளும் விமோசனம் அடைய முடியும். இதன் காரணமாக உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இலங்கை-தமிழ் ஈழம் ஐக்கிய சோசலிச குடியரசினை நிறுவும் வேலைத் திட்டத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கின்றது. தமிழ் தேசிய ஜனநாயக உரிமைகளையும் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் பெறுவது முதலாளி வர்க்கத்தினை தூக்கி வீசி தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தினை நிறுவுவதுடன் இணைந்து கொண்டுள்ளது. வேறு எந்தவிதமான முதலாளித்துவ தீர்வுக்கும் மார்க்கம் இடையாது.

படிப்பகம்

www.padippakam.com



# வர்க்கப் போராட்டத்தின் புதிய கட்டம்...

போராட்டங்களாலும், கிளர்ச்சிகளாலும் நரசிம்மராவ் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதல்களின் மூலமாக ஏகாதிபத்திய நெருக்கடி உள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி உக்கிரம் கண்டு வருகின்றது. இவ்வாரத்தில் ஜேர்மன் அரசாங்கம் வெளியிட்ட புள்ளி விபரங்களின்படி இவ்வாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் 0 54 ஆகியுள்ளது: முழு ஆண்டினதும் வளர்ச்சி நூற்றுக்கு 1% ஆக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலாப வீதத்தின் வீழ்ச்சியைத் தவிர்க்கும் பொருட்டு உலகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் மேல் சுரண்டலையும், பகற்கொள்ளையையும் கட்டவிழ்த்து விடுவது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமாக உள்ளது.

ஓ. ஈ. சீ. டி. அமைப்பின் பொருளாதார நிறுவனத்தின் தலைவர் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைப்பின் சகல அங்கத்துவ நாடுகளிலும் தொழிலாளர் சட்டதிட்டங்களை அகற்ற வேண்டும் எனச் சிபார்சு செய்துள்ளார். இதன்படி சம்பளம், சேவை நிலைமைகள் தொடர்பாக இதுகாறும் இருந்து வந்த சட்டங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு. ''குறைந்தபட்ச'' சம்பளம் என்ற பேரில் இருந்துவரும் சட்டவிதிகளும் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்த ஏகாதிபத்திய அமைப்புக்கள் அழுங்குப் பிடியாக உள்ளன.

அரசாங்க, தனியார் துறைகளிலும் சுதந்திர வர்த்தக வலயங்களிலும் போராட்டத்தில் இன்று இறங்கும் தொழிலாளர்களுக்கு புதிய மூலோபாயமும் புதிய புரட்சிசரத் தலைமையும் அவசியம். எதிர்ப்புக் காட்டுவதன் மூலம் அல்லது பேரம் பேசுவதன் மூலம் தன்னியல்பான இப்போராட்டங்களினுள் எந்த விதமான அடிப்படை வெற்றிகளையும் ஈட்டிக் கொள்ள முடியாது. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நாளை மேலும் மேலும் மோசமான நிலைமைக்குள் தள்ளப்படுவர். இன்று வெடித்துள்ள போராட்டங்கள், பிரச்சாரங்களினுள் தொழிற்சங்கங்களின் செயற்பாடு புதிய புரட்சிகர வேலைத்திட்டத்தினதும், தலைமையினதும் அவசியத்தினை தீர்க்கமான முறையில் சுட்டிக்காட்டுகின்றன. தொழிற் சங்கங்களும் அவற்றின் தலைமைகளும் தமது கோபரேட்வாத பரிணாமத்தை இப்போராட்டங்களுள் அம்பலமாக்கிக் கொண்டன. ''வேலைநிறுத்தம் எமது அனுமதியில்லாமலேயே ஆரம்பமாகியது. தொழிலாளர்களை திருப்பி அனுப்ப எம்மால் முடியும்'' என கொழும்பு துறைமுக வேலைநிறுத்தம் பற்றி கருத்து வெளியிட்ட சீ. எம். யூ— யூ. என். பி. தலைமைகளின் அறிக்கை இதனை அம்பலமாக்கியது.

இன்று தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமான்களதும், அரசினதும் உதவி கோபரேட்வாத ஏஜன்சியாகியுள்ளது. சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. அமைப்புக்கள் ஏகாதிபத்தியச் சார்பு அரசாங்கங்களுடன் கலந்துறவாடும் அரசியலை முன்னெடுக்கின்றன. இந்த தொழிற் சங்கங்களும் கட்சிகளும் வங்குரோத்தடைந்து விட்டது மட்டுமன்றி தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள், பெரும் வங்கிகள், முதலாளித்துவ எஜமானர்களின் சார்பில் தொழிற்படுகின்றன. இதற்கிடையே மத்திய வங்கி ஊழியர் சங்கம் தமது கோரிக்கைகளின் பேரிலான பிரச்சாரத்திற்கு மற்றும் தொழிலாளர்களின் ஆதரவையும் அணிதிரட்டத் திரும்பியுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டம் சோசலிச வேலைத்திட்டத்தினைத் நடைமுறைக்கிடும் தொழிலாளர்–விவசாயிகள் அரசாங்கத்தினை - இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை —நிறுவுவதுடன் இணைந்து கொண்டுள்ளது. அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஐக்கியத்தினை ஊர்ஜிதம் செய்வதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தினுள் போராட வேண்டும். இலங்கையினுள் இப்போராட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே முன்னெடுக்கின்றது. இந்த விதத்தில் ஜூன் 19ம் திகதி பு. க. க. கொழும்பில் நடத்தும் தொழிலாளர் பேராளர் மாநாடு சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. அதில் சகல தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், மாணவர் போராளிகளை கலந்து கொள்ளும்படி தொழிலாளர் பாதை வேண்டுகின்றது.

# யேமனில் உள்நாட்டு யுத்தம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றிணைந்து நாட்டை அமைத்த இரண்டு ஆட்சியாளர்களின் இராணுவ பிரிவுகளுக்கு இடையே யேமனில் கடும் போர் நடைபெற்று வருகின்றது. வடக்கில் உள்ள முன்னைய யேமன் அரபு குடியரசின் படைகள் முன்னைய தென் யேமனின் தலைநகரான ஏடனை நோக்கி முன்னேறியுள்ளன. ஆயினும் கடும் தாக்குதலுக்கு முகம் கொடுத்துக் கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. வடக்கின் தலைநகரான சனாவுக்கு மே 11ல் பாய்ச்சப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 53 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர்: ஏடனுக்குச் சமீபமாகவுள்ள அல்கோப்ட் அகதிகள் முகாமில் வட—தென் யேமன் டாங்கிகளின் தாக்குதலுக்குள் அகப்பட்ட 175 சோமாலிய அகதிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இதுகாறும் இந்த யுத்தத்தில் இடம்பெற்ற படுமோசமான பயங்கரம் இதுவாகும்.

யேமனும் தென் யேமனும் 1990 மேயில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டன. 1993 ஆகஸ்டில் தென் யேமனின் மாஜித் தலைவரும் இணைந்து கொண்ட யேமனின் உப—ஜனாதிபதியுமான அலி சலீம் அல்பிட் சனாவில் இருந்து வெளியேறி, ஏடனுக்குத் திரும்பினார். அவர் தென் யேமன் சிவில் அதிகாரிகளில் பெரும் பகுதியினரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அன்று தொடக்கம் இரு சாராரும் தமது ராணுவ ஆயுதக் கையிருப்பை அதிகரிப்பதிலும் யுத்தத் தயாரிப்புக்களிலும் ஈடுபட்டிருந்தனர். மே 5ம் திகதி இரண்டு தலைநகரங்களிலும் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள் முழு அளவிலான எதிர்த் தாக்குதலின் ஆரம்பமாக விளங்கியது.

தென் யேமன் ஆட்சியாளர்கள் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் 'மார்க்சிஸ்டுகள்' என அழைக்கப்படுவது வழக்கமாக இருந்த போதிலும் இதற்கும் சோசலிசத்துக்கோ அல்லது தொழிலாளர் வர்க்கத்துக்கோ எந்த விதமான தொடர்பும் கிடையாது. தென் யேமன் ஒரு முதலாளித்துவ தேசியவாத ஆட்சியாளர்களைக் கொண்டிருந்ததோடு அது இராஜதந்திர முறையில் ஈராக், லிபியா, சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துடனும் கூட்டு வைத்திருந்தது. இதைக் கொண்டே அதன் இராணுவ சர்வாதிகாரிகள் 'சோசலிச' வாயடிப்புக்களில் ஈடுபட்டனர். வட யேமன் இராணுவ சர்வாதிகாரியான ஜெனரல் அலி அப்துல்லா சாலி தலைமையில் 1979ல் எகிப்து, சவூதி அரேபியா, அமெரிக்காவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருந்தது. இதனால் இந்த அரைநிலமானித்துவ சமுதாயம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள ஊது குழல்களினால் 'சுதந்திர உலகின்' ஒரு பாகமாக அழைக்கப்பட்டது.

இவ்விரு யேமன்களுக்கும் இடையேயான பிரிகோட்டின் வரலாற்று மூலங்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியம் தென் பாகத்தினைக் கைப்பற்றி ஏடன் காலனியை அமைத்த ஐரோப்பிய காலனித்துவக் காலப்பகுதிக்கு நீண்டு செல்கின்றது. யேமனின் வடபாகம் ஓட்டோமன் பேரரசினால் ஆளப்பட்டு வந்ததோடு 1918ல் ஒரு முழு அளவிலான சவூதி தண்காணிப்பு வலயத்தின் கீழ் பேரளவிலான சுதந்திரம் பெற்றது.

1989ல் சோவியத் அதிகாரத்துவம் சகல உதவிகளையும் வாபஸ் பெற்றுக் கொண்டதன் பின்னர் தென் யேமன் சனாவில் உள்ள ஜனத்தொகை மிகுந்த ஆட்சியாளர்களுடன் இணைந்து கொள்ள இணங்கியது. ஆனால் இவ்விரு அரசுகளும் தமது படைகளையோ அல்லது அரசாங்க கருவிகளையோ ஒரு போதும் கலந்து கொண்டதில்லை. மாறாக மோதுதல்கள் ஆதிக்குடிகள், கணக் குழுக்களுக்கிடையே தொடர்ந்து இடம் பெற்றன. இது அருகேயுள்ள சோமாலியாவில் வெடித்த மோதுதலை ஒத்திருந்தது. இருந்த போதிலும் தெற்கில் கணிசமான அளவு எண்ணெய் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது ஏடனை மையமாகக் கொண்ட ஆட்சிக்கு உரிமை கொண்டாடச் செய்தது.


சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ......................................................

முகவரி: ......................................................

......................................................

......................................................

தொலைபேசி இலக்கம்: ..............................


இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.



வாசியுங்கள்:

**இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?**



''தொழிலாளர் பாதை'' வெளியீடு

ரூபா. 7=00


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com




# தொழிலாளர் பாதை

மாதமிரு இதழ் — 448 ● 1994 மே 13 வெள்ளிக்கிழமை


**தொழிலாளர் பேராளர் மாநாடு**

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத் துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

**கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்**

**ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

## தென் ஆபிரிக்க ஜனநாயகமயமாக்க் மோசடியின் கீழ்

# மண்டேலா ஆட்சி யாரின் நலனுக்காக?

நெல்சன் மண்டேலாவினதும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசினதும் தேர்தல் வெற்றியை இலட்சோப இலட்சம் தென் ஆபிரிக்க கறுப்பு இன தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் மகிழ்ச்சி ததும்ப வரவேற்றுள்ளார்கள். அதே சமயம் அவர்களின் ஒடுக்குவோர் கூட ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் தலைமையிலான அரசாங்கத்தினை வரவேற்றுள்ளார்கள். அனைத்துலக மூலதனத்தின் மாபெரும் ஊதுகுழல்களில் ஒன்றான 'பினான்சியல் டைம்ஸ்' ''தென் ஆபிரிக்கா சிறுபான்மை ஆட்சியில் இருந்து ஜனநாயகத்துக்கு பரிணாமம் அடைவது வரவேற்புக்குரிய ஒன்றாகும்'' எனப் பிரகடனம் செய்தது. ''தென் ஆபிரிக்காவில் ஒரு தீய கனவாக விளங்கியது ஜனநாயகத்தின் அமைதியான திருவிழாவாகியுள்ளது'' என நியூயோக் டைம்ஸ் பிரகடனம் செய்துள்ளது.

வெள்ளையர் இன ஆளும் வர்க்கமும் ஏகாதிபத்தியமும் சமூகப் புரட்சியையே ஒரு 'தீயகனவாக' கண்டு அஞ்சியது. இன்று அவர்கள் இந்த அச்சுறுத்தலைப் போக்கவும் தமது சொத்துக்களையும் இலாபப் பொதியையும் பேணவும் ஆ.தே.கா. உதவியில் நம்பிக்கை வைத்துள்ளார்கள். தென் ஆபிரிக்காவில் இன்று கரைபுரண்டோடும் நிகழ்வுகளில் துயரத்தின் பாரிய அம்சங்கள் அடங்கியுள்ளன. மண்டேலா வெற்றி விழாக் கூட்டத்தில் மரணமான ஆ.தே.கா. தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வாசித்தார். இவர்களில் பெரும்பான்மையானோர் இனஒதுக்கல் ஆட்சியாளர்களால் கொலையுண்டவர்கள். இவர்கள் தென் ஆபிரிக்க ஆட்சியாளர்களால் கொலைசெய்யப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும், சிறையில் தள்ளப்பட்ட இலட்சக் கணக்கான தொழிலாளர், விவசாயிகள், ஏழைகளுள் மிகவும் பிரபல்யமானவர்கள் மட்டுமே. இனஒதுக்கல் ஆட்சியாளர்கள் அங்கோலாவிலும் மொசாம்பிக்கிலும் நடாத்திய கடைகெட்ட யுத்தத்தில் இன்னும் பல இலட்சக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

அரசின் கண்காணிப்புடனும் தென்னாபிரிக்க அனைத்துலக நிதிமூலதனத்தின் அங்கீகாரத்துடனும் இடம்பெற்ற இந்த 'ஜனநாயகத்தின் திருவிழா'வுக்காகவா இத்தனை பேர் கொலையுண்டனர்? வெகுஜனத் தொடர்புச் சாதனங்களாலும் ஆ.தே.கா. இனாலும் தட்டியெழுப்பப்பட்ட ஜனநாயக நப்பாசைகளைக் களைந்து எறிந்துவிட்டு, இந்தத் தேர்தல் வெற்றி கறுப்பு இன மக்களுக்கு எதையும் வழங்கப் போவதில்லை என்ற உண்மை அம்பலமாகியுள்ளது.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் நிறவெறியின் ஸ்தாபகர்களான தேசியக் கட்சியுடன் ஒரு கூட்டரசாங்கத்தில் சேர்வதன் மூலம் தான் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்ளும் தென் ஆபிரிக்க வெகுஜனங்களின் பொருளாதாரச் சுரண்டலையும், அரசியல் ஒடுக்குமுறையையும் மேற்பார்வை செய்யும் பணியை ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஒரு காலத்தில் 'தேசிய விடுதலை'யே தமது பாதையெனக் கூறிக் கொண்ட உலகம் பூராவுமுள்ள இயக்கங்களின்—பீ.எல்.ஓ. தொடக்கம் சன்டினிஸ்டா வரை—பாதையில் பயணம் செய்து கொண்டுள்ளது.

உலகளாவிய பொருளாதார, அரசியல் உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இந்த முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களை ஏகாதிபத்தியததினை எதிர்க்க இலாயக்கற்றவையாக்கியுள்ளது. வறுமையில் இருந்தும் வெளிநாட்டு ஆதிக்கத்தில் இருந்தும் விடுபடுவதற்கு வெகுஜனங்களுக்கு வழிகாட்டுவதற்கு மாறாக இவை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் வங்கிகளதும் நேரடி ஏஜன்சிகளாகியுள்ளன. இவை ஜனநாயகத்துக்கான கோரிக்கையை வேலையின்மைக்கும் வறுமைக்கும், பொருளாதார கொடுங்கோன்மைக்கும் எதிரான எந்தவொரு தீர்க்கமான சமூக நடவடிக்கையில் இருந்தும் விவாகரத்துச் செய்துள்ளன. அதன் மூலம் சுதந்திரத்துக்கான போராட்டத்தினை அர்த்தமற்றதும் கொடியதுமான ஒன்றாக்குகின்றனர்.

இந்தத் திசையில் ஆ.தே. காங்கிரஸ் சண்டுள்ள பரிணாமம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும். சனத்தொகையில் 14 வீதத்தினரான வெள்ளையர்கள் நாட்டின் 90 வீதமான நிலம், செல்வங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு இது கறுப்பர்களினதைக் காட்டிலும் 10 மடங்கு அதிகமாகும். இந்த அமைப்பினை உதறித்தள்ளுவதை அடியோடு கைகழுவி விட்ட நிலையிலேயே நெல்சன் மண்டேலாவின் ஆ.தே.கா. ஆட்சிக்கு வந்துள்ளது. இதனை தேசிய கட்சியின் தலைவரும் நிறவெறி ஆட்சியாளருமான F. W. டிகிளார்க்கின் பேச்சு அம்பலமாக்கியுள்ளது. ''நாம் ஆ.தே.கா.வினதும் அதன் ஆதரவாளர்களதும் ஆதரவு இல்லாமல் தென் ஆபிரிக்காவை சக்திவாய்ந்த முறையில் நாம் எங்ஙனம் ஆட்சி செய்ய முடியவில்லையோ அப்படியே எனதும், நான் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களதும் ஆதரவு இல்லாமல் எந்தவொரு அரசாங்கமும் தென் ஆபிரிக்காவை ஆட்சி செய்ய முடியாது''

இந்த மாஜி நிறவெறி ஆட்சியின் ஜனாதிபதி ஒரு வெளியேற்றப்பட்ட சிறுபான்மை வெள்ளையரின் பிரதிநிதியாக உரையாற்றவில்லை. அவர் தனது ஆட்சியின் உள்ளடக்கத்தை அல்லாது அதன் உருவத்தினை மாற்றிக் கொண்டுள்ள ஒரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாகப் பேசியுள்ளார். நிறவெறி ஆட்சியின் பரந்த அளவிலான சிவில் சேவை மாற்றமின்றி இருந்து வருவதோடு, மிகவும் பிரச்சினைக்குரிய தென் ஆபிரிக்கப் பாதுகாப்பு படைகள் அதன் பழைய தளபதிகளின் கீழேயே தொடர்ந்தும் இருந்து வரும். மண்டேலா தனது வெற்றிவிழாவில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சமயத்தில் கூட ஆ.தே.கா. தலைவர்களின் மீது சல்வீச்சில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான மாஜி கெரில்லா போராளிகளை அடக்குவதற்கென தென் ஆபிரிக்கப் படைகள் அழைக்கப்பட்டன.



நெல்சன் மண்டேலா

இந்த இலட்சணத்திலேயே 'ஜனநாயகத்தின் அதிசயம்' தலைநீட்டுகின்றது. ஆ.தே.கா. கிளர்ச்சியில் இறங்கும் கறுப்பு இன விடுதலைப் போராளிகளை சுட்டுத்தள்ள இப்போது தென் ஆபிரிக்க படைகளை அழைக்கிறது!

தென் ஆபிரிக்கத் தேர்தல் கிட்டத்தட்ட ஒரு தசாப்த

(16-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்ட் திடீர் மறைவு



லியோ பிரேஸ்ட்

அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கர்ஸ் லீக்கின் நீண்டகால அங்கத்தவரான லியோ பிரெஸ்ட் கடந்த 11ம் திகதி திடீர் மாரடைப்பினால் மரணமானார். 40 வயதான தோழர். லியோ தமது பதினாறு வயதில் வேர்க்கர்ஸ் லீக்கில் சேர்ந்தார். வேர்க்கர்ஸ் லீக்கின் பத்திரிகையான இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீனின் உற்பத்தியில் மதிப்புவாய்ந்த சேவையாற்றிய ஒரு தோழராக லியோ விளங்கினார்.

லியோ பிரெஸ்ட், ட்ரொட்ஸ்கிச போராளிகளாக 50 ஆண்டுகளுக்கும் அதிகமான கால வரலாறு படைத்த வேர்க்கர்ஸ் லீக் ஸ்தாபக உறுப்பினர்களான பில் பிரெஸ்ட், ஜீன் பிரெஸ்டின் மூத்த மகனாவார். ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினுள் 53 ஆண்டு கால போராட்ட வரலாற்றின் பின் பில் பிரெஸ்ட் 1991ல் மரணமானார். வேர்க்கர்ஸ் லீக் மத்திய குழு உறுப்பினரான தோழி ஜீன் பிரெஸ்ட் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினுள் 55 ஆண்டுகால அரசியல் போராட்ட வரலாற்றின் பின்னரும் தொடர்ந்தும் நான்காம் அகிலத்தினை கட்டியெழுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தோழர். லியோ பிரெஸ்டின் திடீர் மறைவையிட்டு வேர்க்கர்ஸ் லீக்குக்கும் தோழி. ஜீனுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தெரிவித்துக் கொண்டுள்ளது.

**வடக்கு— கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்


www.padippakam.com



# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மே தினம் - 1994



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மே தின ஊர்வலம்



மே தினக் கூட்டத்தில் பங்கு கொண்டோரில் ஒரு பகுதியினர்

## "முதலாளித்துவம் சிருஷ்டித்துள்ள பேரழிவுக்கு முகம் கொடுக்கும் சக்தியும், நிலைமையும் தொழிலாள வர்க்கத்திடம் உண்டு. இன்றைய பிரச்சினை தலைமை."

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் இவ்வாண்டு மே தினத்தினை சோசலிச அனைத்துலகவாத முன்நோக்கினதும் வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில் அணிதிரட்டப்பட்ட பலம் வாய்ந்த ஊர்வலத்தையும், கூட்டத்தினையும் நடாத்துவதில் வெற்றி கண்டன. அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையென்ற முறையில் பு. க. க. நடாத்திய இந்த ஊர்வலத்திலும் கூட்டத்திலும் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்", "சோசலிச அனைத்துலகவாதத்துக்காகப் போராடு", "நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்பு", "சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நோக்கி முன்னேறு", "வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று" முதலான சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன.

கொட்டாஞ்சேனை நியூ ஹாம் சதுக்கத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ரத்னம் மைதானத்தை அடைந்ததைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமாகியது. 17 ஆண்டு கால ஆட்சியைத் தொடர்ந்து யூ. என். பி. அரசாங்கம் முகம் கொடுத்துள்ள அரசியல் நெருக்கடியின் ஒரு வெளிப்பாடாக இத்தடவை அதனால் மே தினக் கூட்டத்தையோ அல்லது ஊர்வலத்தையோ நடாத்த முடியாது போய்விட்டது. முதலாளித்துவ சி. ல. சு. க. தலைமையிலான முதலாளித்துவக் கட்சிகளாகப் பரிணாமம் கண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏகாதிபத்திய ஏஜன்டாக தமது ஆட்சியை கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்தினை பொதுமக்களின் தலையில் கட்டி அடிக்கும் பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. இந்த விதத்தில் மே தினத்தினை 'அரசாங்க மாற்றம்' என்ற கோதாவில் நடாத்தின.

சி. ல. சு. க.-சமசமாஜ—கம்யூனிச மக்கள் ஐக்கிய முன்னணியைக் கொண்ட முதலாளித்துவ பொதுஜன முன்னணி மே தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டாது போனதன் காரணமாக 'தனியான' கூட்டமும், ஊர்வலமும் நடாத்திய நவசமசமாஜக் கட்சி அதனை அந்த முதலாளித்துவ முன்னணிக்கு வக்காலத்து வாங்கும் விதத்தில் நடாத்தியது. மே தினத்தில் இடம் பெற்ற இந்தச் சகல கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் முரணான விதத்தில் பு. க. க. நடாத்திய மேதினம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சக சிந்தனையாளர்களுடன் கூட்டாக அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தினை சோசலிச அடிப்படையில் புனர்வாழ்வு அளிக்கும் கோட்பாட்டு, அரசியல் போராட்டத்தினைத் தீவிரப்படுத்துவதாய் விளங்கியது.

பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ. ஏ. சுனில் தலைமையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பேசிய பு. க. க. மத்திய குழு உறுப்பினரும் 'கம்கறு மாவத்த' பிரதம ஆசிரியருமான தோழர். கே. ரதனாயக்கா மேதினத்தின் வரலாற்று சம்பிரதாயங்களையும், அடிப்படைக் கொள்கைகளையும் நினைவுபடுத்துகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"1889ல் மே தினம் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் விடுமுறை தினமாக இரண்டாம் அகிலத்தினால் தீர்மானிக்கப்பட்டதற்கு காரணமாக பெரும் முக்கியத்துவமான அடிப்படைக் கொள்கைகள் விளங்கின. மாபெரும் மார்க்சிஸ்டான லியோன் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போல் "அந்த விதத்தில் பேர் குறிப்பிட்டதன் நோக்கம் அந்நாள் அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்கள் ஒரேயடியாகப் பிரத்தியட்சமாக்கியது போல் ஒரே உலக நிலையத்திலும் ஒரே உலக அரசியல் அணுகுமுறை கொண்டதுமான புரட்சிகர நடைமுறையில் ஈடுபடும் தனி அனைத்துலகத் தொழிலாளர் வர்க்க அமைப்பினுள் அவர்களை கூட்டாக ஈர்த்துக்கொள்ளும் பின்னணியைத் தயார் செய்வதாகும்"

"அவ்வாறே மே தினத்திடம் ஒப்படைக்கப்பட்ட பணியினைப் பற்றிக் குறிப்பிடுகையில் ட்ரொட்ஸ்கி பின்வருமாறு கூறினார்; வார்த்தையின் சமூக விஞ்ஞான அர்த்தத்தில் பார்ப்பின் தொழிலாளர் வர்க்கம் பொருளாதார தரமாகும். தொழிலாளர் வர்க்கம் அந்த நிலையில் இருந்து அதனது வரலாற்றுத் தேவைகளையிட்டு முழு அளவில் நனவு கண்டு தனது சர்வாதிகாரத்தினை உறுதி செய்யவும் சோசலிசப் புரட்சியை நடாத்தவும் முயற்சி செய்யும் ஒரு வர்க்கமாக பரிணாமம் அடையும் செயல்முறையை சுலபமாக்குவது மே தினத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும்."

மே தினத்தின் மாபெரும் சம்பிரதாயங்களும் அடிப்படைக் கொள்கையும் அவை தான். பழைய தொழிலாளர் கட்சிகள்—இலங்கையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகள் உட்பட—இச் சம்பிரதாயங்களையும் அடிப்படைக் கொள்கைகளையும் காட்டிக் கொடுத்துள்ளன. இப்போது அவை இந்த அடிப்படைக் கொள்கைகளுக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் எதிராக பிற்போக்குச் சக்திகளை அபிவிருத்தி செய்து வழிநடாத்துவோராகச் செயற்படுகின்றனர்..."

இந்த மே தினத்தில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகளினை சுட்டிக் காட்டி மேற்சொன்ன கூற்றை நிரூபித்த ரத்னாயக்க "எனினும் தொழிலாளர் வர்க்கம் இந்த மாபெரும் அடிப்படைக் கொள்கைகள் மேல் காலூன்றி நிற்கும் காலம் வந்துவிட்டது" எனக் கூறினார். ஏகாதிபத்திய மையங்களில் ஆளும் வர்க்கங்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை தெளிவுபடுத்திய அவர் ஏகாதிபத்திய அமைப்பினுள் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ள முறையை தெளிவுபடுத்தினார்.

உற்பத்தி துறையில் இடம் பெற்றுள்ள முன்னொருபோதும் இல்லாத அளவிலான பூகோளமயமாக்கத்தினை தெளிவுபடுத்திய ரத்னாயக்க அந்தப் பூகோளமயமாக்கத்துக்கான பின்னணியை வழங்கிய "தொழில்நுட்பத்தின் புரட்சிகர மாற்றங்கள் மனித இனத்தின் சட, ஆத்மீக அபிவிருத்திக்கு பிரமாண்டமான நிலைமைகளை அபிவிருத்தி செய்துள்ளதை சுட்டிக்காட்டினார். இருப்பினும் பின்தங்கிய நாடுகளிலும் அவ்வாறே ஏகாதிபத்திய நாடுகளிலும் வேலையின்மை, போஷாக்கின்மை, பட்டினி, நோய்கள் பிரமாண்டமான முறையில் வளர்ச்சி காண்பதையும் இலாப விகிதம் வீழ்ச்சியடையும் முறைமையையும் அவர் புள்ளிவிபரங்களுடன் விபரித்தார்.

"இப்பிரச்சினைக்கு பதில் என்ன? ஏகாதிபத்திய நாடுகளில் ஆளும் வர்க்கங்கள் பாரதூரமான அரசியல் நெருக்கடிக்குள் மூழ்கியுள்ள நிலைமையில் உலகம் பூராவும் இராணுவவாதமும், பாசிசமும் வளர்ச்சி காண்கின்றன. இதனை அவர் இத்தாலியின் சமீபத்திய தேர்தல் முடிவுகளின் தரவுகளைக் கொண்டு நிரூபித்தார். அவ்வாறே இந்தியாவிலும் இலங்கையிலும் தேசிய முதலாளி வர்க்கங்களின் பரிணாமமும் சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் தேசியவாத வேலைத்திட்டங்கள் வீழ்ச்சி கண்டு போனதையும் அத்தகைய வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட பழைய தொழிலாளர் தலைமைகள் சிதறிச் சின்னாபின்னமாகியுள்ள இலட்சணத்தையும் தோழர். ரத்னாயக்கா தெளிவுபடுத்தினார்.

"தொழிலாளர் வர்க்கம் இந்நிலைமைக்கு முகம் கொடுப்பது எப்படி? தொழிலாளர் வர்க்கத்திடம் அதற்கான சக்தி உண்டு. மையப் பிரச்சினை தலைமை பற்றிய நெருக்கடி. பழைய தலைமைகளின் தசாப்தகணக்கான காட்டிக் கொடுப்பினால் தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்துவரும் ஸ்தம்பித நிலையை உடைத்து எறியும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்திலுள்ள மார்க்சிச கலாச்சாரங்களை புனருத்தாரணம் செய்ய வேண்டும். புரட்சிகர அனைத்துலகவாத தலைமையைக் கட்டி எழுப்ப வேண்டும்"

இலங்கையினுள் அபிவிருத்தி கண்டுவரும் அரசியல் நெருக்கடியை தெளிவுபடுத்திய ரத்னாயக்க, உலக ரீதியில் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர அனைத்துலகவாதத் தலைமையை கட்டியெழுப்பும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் முன்னெடுக்கும் கொள்கைப் பிடிப்பான வரலாற்றுப் போரா

(14 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



## ஆசிய சந்தைக்கான ஆதிக்கப் போட்டி உக்கிரம்

# அமெரிக்கா கொரியன் யுத்த பீதியை தூண்டுகிறது

*அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இதழான 'இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டினின்' (மார்ச் 28) தலைப்புச் செய்தியின் சுருக்கம்*

ஒரு சிறிய நாட்டை அமெரிக்க அரசாங்கத்தின் இலக்காகக் கொண்டு வாஷிங்டனில் மீண்டும் போர்ப் பறை ஒலித்துக்கொண்டுள்ளது. இது இந்த யுத்தத்துக்குச் சாதகமாகப் பொது ஜன அபிப்பராயத்தினை திரட்டுவதற்கான உலகளாவிய அச்சுறுத்தலையும் விபரீதத்தினையும் சுட்டிக் காட்டுகின்றது. பெரும் பத்திரிகை நிறுவனங்கள் ஒரே பாணியிலான அறிக்கைகளைப் பிரசுரிப்பதன் மூலம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினதும் பென்டகனதும் பணிப்புக்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. அமெரிக்க தொலைக்காட்சிச் சேவைகள் உலகின் 'நான்காவது பெரும் இராணுவம்' என வர்ணிக்கப்படுவதன் போர் வீரர்கள் பற்றிய திரைப்பட அடிக்குறிப்புக்களுடன் கூடிய விதத்தில் வடகொரியாவின் நியூக்கிளியர் ஆயுதத் தயாரிப்பு எனப்படுவது பற்றிய விபரங்களை ஒளிபரப்புகின்றன.

வடகொரியாவின் 81வயது ஸ்டாலினிச ஆட்சியாளர் கிம் இல் சுங் 'ரைம்', 'நியூஸ் வீக்' அட்டைப் படங்களில் ஆசியாவின் ஹிட்லர் ஆகக் காட்டப்படுவாராயின் எவரும் அதையிட்டு அதிர்ச்சி அடைந்து விடக்கூடாது. பொதுஜனத் தொடர்புச் சாதனங்களின் அறப்படித்த பண்டிதர்களும், பத்திரிகை நிருபர்களும் வடகொரியாவுக்கு ஒரு பாடம் புகட்டாது போனால் உலகெங்கிலும் உள்ள ''ஆக்கிரமிப்பாளர்கள்'' உற்சாகம் அடைந்து விடுவார்கள் என பிரகடனம் செய்வார்கள்.

இன்று அமெரிக்க ஜனத்தொகையில் பிரமாண்டமானோர் வடகொரியாவின் தலைநகரையோ அல்லது அதன் தலைவரின் பெயரையோ அடையாளம் காண மாட்டார்கள். ஆனால் இந்த வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் திடீர் தாக்குதல்கள் மிசிசிப்பி மாகாணத்தின் பரிமாணத்தினைக் கொண்ட ஒரு நாடான வடகொரியா ஒரு உயிராபத்தினைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் காட்டும் ஒரு பொதுஜன அபிப்பராயத்தை உற்பத்தி செய்ய முயலும். பியோங் யாங் அமெரிக்க அரசாங்கத்தின் பொய்களுக்கும் நாள் பூராவுமான குண்டு வீச்சுக்களுக்கும் பக்தாத், ஹனொய் மற்றும் இலக்குகளைப் போன்று பேர் பெற்றதாகும்.

அமெரிக்க மக்களுக்கு தெரியாமல் — எந்தவிதமான நிஜ ஜனநாயக விவாதமும் இல்லாமல் ஒரு சிறிய கும்பல் அரசாங்க அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும், வெகுஜனத் தொடர்புச் சாதனப் பேச்சாளர்களும் கொரியன், அமெரிக்கன் மக்களை பல்லாயிரக் கணக்கில் பலிக்கடாக்களாக்கும் ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு மோதுதலுக்கு ஒத்தூதுகின்றார்கள். நாம் இவை எல்லாவற்றையும் ஏற்கனவே கண்டுள்ளோம். 1990ல் ஈராக் ஒரு பிரமாண்டமான இராணுவ இயந்திரத்தினைக் கொண்டுள்ளதாயும் நியூக்கிளியர் குண்டினை உற்பத்தி செய்யும் தறுவாயில் உள்ளதாயும் கூறப்பட்டது. அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பினை நியாயப்படுத்தும் பொருட்டு வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் வெளிநாட்டுத் தலைவர்களை மதிப்பிறக்கம் செய்யும் தொழில் நுட்பங்களைக் கையாண்டது. இதன்படி அந்த ஆண்டின் ஹிட்லராக சதாம் ஹுசெயின் விளங்கினார். சதாம் ஹுசெயினுக்கு முன்னர் இது பனாமாவின் மனுவேல் நொறிகாவின் முறையாக விளங்கியது. கடந்த ஆண்டின் பிசாசாக சோமாலியாவின் 'யுத்தப் பிரபு' முகம்மது பாரா எயிட்டிட் விளங்கினார். இப்போது இவை எல்லாமே அடியோடு மறக்கப்பட்டு விட்டன.

பியாங்கொங் ஸ்டாலினிச ஆட்சியின் சாத்தியமான நியூக்கிளியர் ஆயுத அபிவிருத்தி பற்றிய அக்கறையே மோதுதலுக்கான சாரணம் என கிளிங்டன் நிர்வாகமும் பென்டசனும் கூறிக்கொள்கின்றது. அணு ஆயுதங்களைச் செய்வதற்கு வேண்டிய நியூகிளியர் வசதிகளையும் ஏவுகணை தொழில்நுட்பங்களையும் கொண்டுள்ள டசின் கணக்கான நாடுகளில் வடகொரியாவும் ஒன்று. அது இராணுவத் தாக்குதலுக்குப் போதுமான ஒரு சாதகமாக இருப்பின் அமெரிக்க அரசாங்கம் பாகிஸ்தான், இந்தியா, பிரேசில், இஸ்ரேல், ஈரான், தென் ஆபிரிக்காவில் இருந்து தொடங்கி யப்பான், ஜேர்மனி வரை பூகோளத்தின் அரைப்பங்குடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் இராணுவத்தின் போக்கினைப் பொறுத்தமட்டில் வாஷிங்டனுக்கும் பியாங்யாங்குக்கும் இடையே ஒரு ஒப்பீடு கிடையாது. 1953ல் கொரியன் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து வடகொரியா ஒரு தொகை இராணுவ மோதுதல்களில் ஈடுபடடிருந்ததில்லை. அதே வேளையில் இந்த 41 ஆண்டுகளில் அமெரிக்கா வியட்னாமிலும் பாரசிக வளைகுடாவிலும் பெரும் சண்டைகளில் ஈடுபட்டதோடு பனாமா, கிரனடா மற்றும் டொமினிக்கன் குடியரசு தொடக்கம் சோமாலியா, லிபியா, கம்போடியா வரை வேறுபட்டவகையிலான நாடுகளில் குண்டு வீச்சுக்களையும் ஆக்கிரமிப்புக்களையும் நடாத்தியது.

வடகொரியாவுக்கு எதிரான இந்தப் போர்க் கூச்சல் ஜப்பான் அல்லது தென் கொரியா போன்ற அருகேயுள்ள நாடுகளில் இருந்தன்றி பசுபிக் சமுத்திரத்தின் மறுபுறத்தில் — டோக்கியோவுக்கும் சியோலுக்கும் குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்படும் புராதன கால ஏவுகணையின் வீச்சுக்கு அப்பால் பாதுகாப்பாக உள்ள அமெரிக்காவிடம் — இருந்தே கிளம்பியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வடகொரிய அச்சுறுத்தல் எனப்படுவது தென் கொரியத் தலைநகரை 'தீக்கடலாக'த் திருப்ப முயல்வதாக அமெரிக்கச் செய்தித்தாள்கள் தூக்கிப்பிடித்துக் காட்டிவந்த அதே வேளையில் சியோலில் இருந்துவரும் செய்திகளின்படி அங்குள்ள உள்ளூர் பத்திரிகைகளின் முக்கிய தலைப்புச் செய்திகள் பணவீக்கம், பொருளாதாரத்தின் மீதான உலக வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் தாக்கம், எதிர்வரும் செழிப்பான காலம் பற்றியதாக உள்ளதேயன்றி நகரில் இருந்து வடக்கே 25 மைலுக்கு அப்பால் உள்ள இராணுவ நடமாட்டம் அல்லாத வலயத்தின் ஊடாக ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் பற்றியதாக இல்லை,

### நிஜ காரணம் என்ன?

அமெரிக்க ஏகாதிபத்தியம் வடகொரியாவை இலக்காக்குவதற்கு ஆழமான புறநிலைக் காரணங்கள் உள்ளன. இவை எவையுமே நியூகிளியர் ஆயுதங்களுடனோ அல்லது வெறிபிடித்த சர்வாதிகாரிகளுடனோ தொடர்பற்றவை, ஆனால் இவை எதுவும் பகிரங்கமாகக் கலந்துரையாடப்பட்டது கிடையாது. மார்ச் மாத கடைப்பகுதியில் கொனலூலுவில் நடைபெற்ற ஆசிய—பசுபிக் நிதி அமைச்சர்கள் மகாநாட்டில் பேசிய அமெரிக்க திறைசேரி செயலாளர் லொயிட் பென்ட்சன் உலகப் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சி காணும் பிராந்தியமான ஆசியாவில் அமெரிக்க ஆளும் வர்க்கம் வெளிச்சம் பாய்ச்ச முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். ஜேர்மனியில் ஸ்டாலினிச ஆட்சி வீழ்ச்சி கண்டு அது ஒருங்கிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இது ஆசியாவில் ஒரு புறத்தே தள்ளிவிடக்கூடிய விடயம் ஆகிவிடவில்லை.

கிளிங்டன் ஆட்சி இப்பிராந்தியத்தில் கிழக்கு ஆசியாவிலும் தென் ஆசியாவிலும் உள்ள மிக முக்கியமான சகல நாடுகளுடனும் போராட்டத்தில் குதித்துள்ளது; வர்த்தகம் பற்றி ஜப்பானுடனும், வர்த்தகம், 'மனித உரிமைகள்' பற்றி சீனாவுடனும், தொழிலாளர் விதிகள் பற்றி இந்தோனேசிய ஜுன்டா அரசாங்கத்துடனும், காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுடனும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

வட கொரியாவுடனான மோதுதல் அமெரிக்கா அதற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இரு நெருங்கிய அயலவரான சீனா, யப்பானுக்கு பெரும் விரகி முக்கியத்துவம் வாய்ந்த ஆசிய—பசுபிக் கரையில் ஒரு இராணுவ அதிகாரத் திட்டத்தினை உருவாக்கும் வாய்ப்பை வழங்குகின்றது. கொரிய தீபகற்பம் ருஷ்யாவை எல்லையில் கொண்டுள்ளதோடு — முக்கிய துறைமுகமான விளாடிவெஸ்டோக் வட கொரியாவில் இருந்து வடக்கே 80 மைல்கள் தூரத்திலேயே அமைந்துள்ளது. வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையேயான உறவுகளைப் புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் அமெரிக்காவினால் ஆத்திரமூட்டப்பட்ட இந்த நியூக்கிளியர் ஆயுத மோதுதலுக்கு முன்னர் அபிவிருத்தி கண்டு வந்தது. அத்தகைய ஒரு ஜேர்மன் பாணியிலான இணைப்பு,அமெரிக்கப் படைகளை வாபஸ்பெறக் கோரும் கோரிக்கைக்கு இட்டுச் சென்றிருக்கும். மறுபுறத்தில் இந்தத் தீபகற்பத்தில் வளர்ச்சி காண்பதானது தொடர்ந்தும் தூரகிழக்கில் 80,000 அமெரிக்கப் படைகளையும், தென் கொரியாவில் 37,000 படைகளையும், இதைக்காட்டிலும் கூடுதலான தரைப்படை, கடற்படையை ஜப்பானில் உள்ள தளங்களில் வைத்திருக்கவும் ஒரு பம்மாத்தாக விளங்கும்.

அமெரிக்காவுக்கும் வட கொரியாவுக்கும் இடையேயான மோதுதல் ஒரு ஆழமான வரலாற்றுப் போக்குடன் தொடர்புபட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முதல் அரை இறுதிக் காலத்தில் இரண்டு உலக யுத்தங்களைச் சிருஷ்டித்த உலக முதலாளித்துவத்தின் அதே அடிப்படை முரண்பாடுகள் மீண்டும் தலையெடுத்துள்ளன. இராணுவவாதத்தின் வெடிப்பானது உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியின் மிகப்படுகொடூரமான வெளிப்பாடாகும், பெரும் முதலாளித்துவச் சக்திகள் மலிவு உழைப்பு, வர்த்தகம், சந்தை, மூலப்பொருட்களின் மூலங்கள் தொடர்பாக அதிகரித்துவரும் மோதுதல்களை தீர்த்துக்கொள்ள வழியில்லாமல் இறுதியில் இராணுவ வழிகளில் இறங்குகின்றன.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னர் போன்று ஏற்கனவே ஒரு தொகை பிராந்திய மோதுதல்கள் — ஈராக், பொஸ்னியா, சோமாலியா, முன்னாள் சோவியத் யூனியனின் வேறுபட்ட குடியரசுகள் — வெடித்துள்ளன. இவற்றில் எவையேனும் ஒன்று — வடகொரிய மோதுதல் உட்பட — பரந்ததும், பயங்கரமுமான வெடிப்புக்கான சந்தர்ப்பமாகும். கொரியன் நெருக்கடியில் இருந்து பலனடைய முயன்றுவரும் ஏகாதிபத்திய சக்தி அமெரிக்கா மட்டுமல்ல. யப்பானிய பாதுகாப்பு அமைச்சர் கசுவோ ஆய்ச்சி குறிப்பிடுகையில்: ''நன்கு நிர்வகிக்கப்படின் இது ஒரு அதிசயமான தருணமாகும். யப்பானின் பாத்திரத்தினை விஸ்தரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்'' என்றுள்ளார்.

---

## லக்சம்பேர்க்,...

தலைவர்களதும் மரணத்துக்கும் அனைத்துலக தொழிலாளர் வர்க்கம் பாரிய விலை கொடுக்க நேரிட்டது என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாது. இதைத் தொடர்ந்து ஜேர்மனியை குலுக்கிய புரட்சிகர நிகழ்வுகளில் அவர்கள் இல்லாமல் போனமை, ஜேர்மன் தொழிலாள வர்க்கம் ஆட்சியை கைப்பற்றத் தவறியதற்கும் இறுதியாக நாசிசத்தின் கைகளில் அது தோல்வி கண்டதற்கும் ஒரு தீர்க்கமான காரணியாக நிரூபிக்கப்பட்டது.

இருப்பினும் சமூக ஜனநாயகத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் கரங்களில் தொழிலாளர் வர்க்கம் அனுபவித்த பல தசாப்த கால காட்டிக்கொடுப்புக்களின் வெளிச்சத்தில் அவர்களின் நினைவு நீண்டு வருவதோடு அவர்களின் உருவமும் உயர்ந்து நிற்கிறது. அவர்களின் புரட்சிகர மரபுகளை உள்ளீர்பதும்–குறிப்பாக றோசா லச்சம் பேர்க்கின் மார்க்சிச ஆக்கங்களை உள்ளீர்ப்பது — மார்க்சிஸ்டுகளுக்கு இன்று ஒரு முக்கிய பணியாக உள்ளது.

---


### வாசியுங்கள்!




விலை: 30-00


படிப்பகம்

www.padippakam.com



# நிஜ சுதந்திரமா? அல்லது போலி சுதந்திரமா?

இந்திய போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி 1948 பெப்ரவரி 4ல் வெளியிட்ட அறிக்கை

**பிரித்தானிய பதாகையின் கீழான போலி சுதந்திரத்துக்கு அல்ல, பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு வெளியேயான சுதந்திரத்துக்கு**

பெப்ரவரி 4ம் திகதியை மங்கள முரசொலியுடன் அறிமுகம் செய்து வைக்கிறார்கள். அதைத் தொடர்ந்து வரும் கூத்துக்கள், வாணவேடிக்கைகளுடன் அது நிறைவேறும். அக்காலப்பகுதிக்குஇடையே தேசாதிபதி மகாதேசாதிபதியாகி, இளவரசர் ஒருவர் வந்துபோய், எமது பணத்தில் இலட்சக் கணக்கில் நாசம் செய்யப்பட்டு, இலங்கைக்கு 'பிரித்தானிய பொதுநலவாய அரசுகளின் கூட்டினுள் முழுப்பொறுப்பு அந்தஸ்து' கிடைத்துள்ளது. இவை அனைத்திலும் இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சி ததும்ப அங்கீகரிக்கக் கூடியது ஏதும் உண்டா?

மேற்சொன்ன பிரச்சினைக்கு பீஎல்பீஐ கட்சியின் பதில் தெளிவானதும் சந்தேகத்துக்கு இடமில்லாததுமான 'இல்லை!' என்பதாகும். எம்மிடம் படைத் தளபதி — மன்ங் மேசன் மூர் கூட்டினால் கொணரப்பட்டுள்ள 'புதிய நிலைமையைப்' பற்றி பொதுமக்களை பூரிப்பிலாழ்த்த ஏதுவும் இல்லை, அவர்கள் முரசு கொட்டிப் பிரகடனம் செய்யும் 'சுதந்திரத்தில்' மக்கள் 'மகிழ்ச்சியடைய' எதுவும் கிடையாது. ஏனெனில் அவர்கள் பெற்றுக் கொள்ளும் புதிய நிலைமையானது சுதந்திரம் இல்லாதது மட்டுமல்ல; பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு இலங்கையில் அடிமைத் தளையைப் பொருத்தும் சங்கிலித் தொடுவையின் மோஸ்தரை மாற்றுவது மட்டுமே. அது இலங்கையின் உள்ளும் இலங்கை தொடர்பாகவும் பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு, அந்த ஆட்சியைச் செலுத்தக் கையாளும் விதிமுறையில் செய்யும் மாற்றமேயாகும்.

இந்த ஆட்சி தொடர்ந்து இடம்பெறுவது எப்படி? கூட்டாயமாக பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு இலங்கையைப் பொருளாதார ரீதியில் தொடர்ந்தும் சமுத்தை நெரிப்பதன் மூலம் இடம்பெறும். எமது வங்கி அமைப்பு, எமது பெருந்தோட்ட அமைப்பு, வெளியுலகுடன் எமது தொடர்புகளை நிர்வகிப்போர் ஆதலால் எமது பொருளாதார அமைப்பு முறையையும் நிர்வகிப்போராவர். மேலும் நாட்டின் பொருளாதார முறையை நிர்வகிப்பது யார்? இறுதி ஆய்வுகளின்படி அவரே இந்த அரசையும் நிர்வகிக்கின்றார். வேறு வார்த்தைகளில் சொன்னால் எமக்கு எமது கொடியை உயர்த்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும் எமது தேசிய கீதத்தினை இசைக்கவும் (பர்மாவைப் போல) பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு வெளியே சுதந்திர நாடு எனக் கூறிக்கொள்ள இடம் கிடைத்தாலும், அத்தோடு பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பினால் எமது பொருளாதார முறையின் குரல்வளையை நெரிப்பது மாற்றமில்லாமல் அப்படியே தொடர்ந்து வரின் நாம் பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பின் அடிமைகள் போல் இனியும் வாழ்பவர்களாவோம். இந்தப் பயங்கரமான குரல்வளை நெரிப்பினைத் தவிர்ப்பதில் மட்டுமே சுதந்திரத்தின் சாராம்சம் அடங்கியுள்ளது.

அத்தோடு என்னதான் இருந்தாலும் இந்தப் புதிய நிலைமை எமது அடிமைத் தளையைத் தொடர்ந்தும் அப்படியே வைத்திருப்பது மட்டுமன்றி அதன் மோஸ்தரை மட்டும் மாற்றுவதாகும் எனச் சிறப்பாகக் குறிப்பிட்டாக வேண்டும். இலங்கையின் 'நிலைமை'யில் 'மாற்றம் இல்லை' எனக் கூறுவோர் மூடர்கள். மாற்றம் உண்டுதான். ஆனால் இந்த மாற்றம் இலங்கை ஒரு காலனியின் நிலையில் இருந்து சுதந்திர நிலைமைக்கு மாறுவது அல்ல. இலங்கையின் பிரித்தானிய ஏகாதிபத்திய முறை நேரடி ஆட்சி செய்யும் பாதையில் இருந்து தற்காலிக நிர்வாகத்துக்கு மாறிச் சென்றுள்ளது.

இந்த மாற்றத்தின் அர்த்தம் என்ன? சரியாக இது தான்: இலங்கையினுள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் உரிமைகளைப் பேணிக் காக்கும் பணியை இலங்கையின் உள்நாட்டுச் சுரண்டல் வர்க்கங்களிடம் ஒப்படைப்பதாகும். பிரித்தானிய ஏகாதிபத்திய முறை எந்தவிதத்திலும் ஒழிந்து போகாவிடினும் அது பின்னடியில் நின்று கொண்டுள்ளது. ஒருவர் இப்படிக் கேட்க முடியும், எமது சுதேச சுரண்டலாளர்கள் அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது எஜமான்களுக்கு அடிவிழுவதை எப்படித் தவிர்க்கப் போகிறார்கள்? பதிலில் பல விடயங்கள் அடங்கும். முதலாவதாக பிரித்தானிய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்துக்கு பலாத்காரமாக வழங்கப்பட்ட 'ஒப்பந்தம்' ஆகும், அதன் மூலம் இராணுவம், வெளிநாட்டு விவகாரம் தொடர்பான அதிகாரங்களைப் பிரித்தானியர்கள் இலங்கையின் குரல்வளையை நெரிக்கும் விதத்திலேயே தமது பிடியில் என்றும் வைத்திருப்பதை உத்தரவாதம் செய்கிறது. மேலும் இலங்கையிலேயே வதியும் முதலாளிகளின் பிரித்தானிய, இலங்கைப் பிரிவினருக்கு உரித்தான பொருளாதார, அரசியல், நிதி உரிமைகள் ஒன்றாகப் பிணைந்துள்ளது. எனினும் இவை எல்லாவற்றிற்கும் மேலான முக்கியமான விஷயம் வருமாறு: இலங்கை முதலாளிகளின் பொதுத் தேவைகளும் சிறப்பாக இலங்கை



பிரித்தானிய ஏகாதிபத்தியப் பிடியைத் தொடர்ந்தும் பேணுவதில் அக்கறையாய் நின்ற இலங்கை முதலாளிகள்—டி.எஸ்.சேனநாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்க.

மக்களுக்கு எதிராகக் கொண்டுள்ள அவர்களின் உரிமைகளும் சார்ந்துள்ள அடிப்படை அத்திவாரம் — பிரித்தானிய ஏகாதிபத்திய முறையுடன்—அரசியல், பொருளாதார, பந்தோபஸ்து முறையுடனான அவர்களின் பிணைப்பாகும். எமது முதலாளிகள் இலங்கைக்குச் சுதந்திரத்தினை என்றுமே கேட்டது கிடையாது. அவர்கள் கேட்டது எது? பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு பாகமாகவும், அதன் பூதலாகவும், இலங்கையை மேற்பார்வை செய்யும் முழுப் பொறுப்பை மட்டுமே கேட்டனர். இப்போது அவர்களுக்கு அது கிடைத்துள்ளது.

இலங்கை மக்களுக்கும் அவர்களின் போராட்டத்துக்கும் இந்த நிர்வாக முறை மாற்றத்தினால் ஏற்படும் பெறுபேறு என்ன? இத்துடன் முதலாவதாகக் கேட்க வேண்டிய கேள்வி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் முற்றுப் பெற்றுவிட்டதா என்பதாகும். கேள்வி கேட்பது அதற்குப் பதில் அளிப்பது போன்றது. பொருளாதார முறை, பாதுகாப்பு நடவடிக்கைகள், வெளிநாட்டு உறவுகள் என்ற அனைத்தும் பிரித்தானிய ஏகாதிபத்திய முறை என்ற சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளதை விடுவிக்கும் போராட்டம் இப்போதும் நடைபெறுகிறது—நடைபெற்றாக வேண்டும். தமது எஜமானான சேர் ஹென்றி மன்க் மேச மூருடன் இலங்கையின் பேரில் திரு. டீ. எஸ். சேனநாயக்க கூட்டாக கையொப்பமிட்ட அடிமை உடன்படிக்கைக்கு எதிராக சிறப்பாக நாம் போராட வேண்டியுள்ளது. ஆதலால் இந்திய போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி மக்களுக்குப் பின்வருமாறு அழைப்பு விடுக்கின்றது:

**பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுங்கள்! பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் செய்து கொண்டுள்ள அடிமை ஒப்பந்தம் ஒழிக!**

ஏகாதிபத்திய அமைப்புக்கும் அடிமை ஒப்பந்தங்களுக்கும் எதிரான போராட்டம் முன்னேற்றம் கண்டதும் இலங்கை மக்கள் நேருக்கு நேர் எதிர்த்துப் போராடத் தோன்றும் எதிரி யார்? முதலாவதாக அவர்கள் முகம் கொடுக்க நேரிடுவது வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் துப்பாக்கிகளுக்கு அல்ல; சுதேச முதலாளிகளின் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கே. ஏகாதிபத்திய நிர்வாக முறையினுள் இலங்கைக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை காரணமாக பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்புக்களை நாம் எமது பரம எதிரியாகக் கொண்ட போதிலும் நாம் முகம் கொடுக்கும் எதிரி போல் சுதேச ஆளும் வர்க்கங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு பின்னணியில் நிற்கின்றது. இறுதித் தருணத்தில் மட்டும் பயன்படுத்த நேரடியாக வெளி வெளியாக தொழிற்படும் உரிமைகளை —அதாவது ஆட்சியில் தலையிடும் உரிமையை ஏகாதிபத்தியவாதிகள் தம் பிடியில் வைத்துக் கொண்டுள்ளனர். கிளர்ந்து எழுந்து வரும் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி, அடக்கும் நடவடிக்கைக்கான முதல் பொறுப்பு இலங்கை முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கும், சுதேச முதலாளிகளுக்கும் இடையே புதிதாக ஏற்பட்டுள்ள பிணைப்பில் இருந்து தோன்றும் வேலைப் பகுப்பு பின்வரும் முறையில் இடம் பெற்றுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஏகாதிபத்திய ஆட்சியை உடைத்தெறியும் வழியில் இங்ஙனம் தோன்றும் முதல் போராட்டம் எமது முதலாளிகளுக்கு எதிராக நடாத்தும் போராட்டமாகும். அதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியம் ஒழிக என்ற வசனத்தின் பொருள் முதலாவது இப்போது சிக்னல் தருவது, ஏகாதிபத்திய—முதலாளித்துவப் பிணைப்பு ஒழிக என்ற கருத்தையேயாகும், இந்தப் பிணைப்பின் முக்கிய ஆயுதமாக சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டம் இருப்பதால் (இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் உட்பட அரசாங்க சேவை ஆணைக் குழுவுடன்) சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்துக்கும் அதனுடன் இணைந்த பிரிவுகளுக்கும் எதிராக எமது போராட்டத்தினைத் தொடர்ந்து நடாத்த வேண்டியுள்ளது. ஆதலால் போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு குரலெழுப்புகின்றது: ஏகாதிபத்திய — முதலாளித்துவ பிணைப்புக்கு எதிராக போராடு! சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டமும் அதனுடன் தொடர்புடைய பிரிவுகளும் ஒழிக!

இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் முறையான அமைப்புக்களுக்குள் அணிதிரண்டால் மட்டுமே ஏகாதிபத்திய அமைப்புக்களுக்கும் ஏகாதிபத்திய — முதலாளித்துவ சுமைகளுக்கும் எதிராகப் போராடமுடியும். தொழிலாளர்களின் உழைக்கும் மக்கள் இயக்கம் முன் நோக்கிச் சென்றதோடு பொருளாதார முன்னணியில் வளர்ச்சி கண்ட தொழிற்சங்க இயக்கம் இன்று பலவீனம் கண்டுள்ளது. இந்த தொழிற் சங்கங்களை மீண்டும் சீர்திருத்திக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. பரந்த அமைப்புக்களுள் அணிதிரண்டு உறுதியான வேலைத் திட்டத்தில் இறங்குவதற்கு கிராமப்புற மக்கள் ஆரம்பித்ததோடு, ஜூன் வேலைநிறுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியில் இருந்து உழைக்கும் மக்கள் இயக்கம் பின்வாங்கியதால் கிராமப்புற மக்களின் அந்த முன்னணிப் பயணமும் சற்று நின்று போயிற்று. அந்த முயற்சிக்குத் திரும்பவும் உயிரூட்ட வேண்டியுள்ளது. பொதுஜன பாதுகாப்பு மசோதா, அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்க உரிமைகளை மறுக்கும் சட்டங்கள் முதலானவற்றில் வெளிப்பாடாகும் ஏகாதிபத்திய — முதலாளித்துவ பிடிகளின் மூலம் உழைக்கும் மக்களுக்கு தாக்குதல் தொடுப்பதை அதன் மூலமே தவிர்க்க முடியும். ஆதலால் போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு தெரிவிக்கின்றது:

**ஏகாதிபத்திய—முதலாளித்துவப் பிடிகளுக்கு முகம் கொடுக்க உழைக்கும் மக்கள் அமைப்புக்களை மீண்டும் கட்டியெழுப்பு! பொதுஜன பாதுகாப்பு மசோதா, மற்றும் ஒடுக்குமுறைச் சட்டங்கள் ஒழிக! பேச்சு, எழுத்து, கூட்டம், அமைப்புக்கு பூரண சுதந்திரம் வேண்டும்! உழைக்கும் மக்கள் அமைப்புக்களை**

மீண்டும் கட்டியெழுப்பவும் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவற்றை அகற்ற நடாத்தும், முன்னர் உழைக்கும் மக்கள் நடாத்திய—நடாத்த வேண்டிய

(20 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தென் மாகாண சபைத் தேர்தல் முடிவ

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை— 1994 ஏப்ரல் 07

மார்ச் 24ம் திகதி நடைபெற்ற தென்மாகாண மாகாண சபைத் தேர்தலில் யூ.என்.பி. அரசாங்கத்துக்கு 17 ஆண்டுகளின் பின்னர் கிட்டிய படுதோல்வி, இலங்கையின் வர்க்க உறவுகளில் ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றங்களைச் சமிக்கை செய்துள்ளது. இது வெறுமனே யூ. என். பி. ஆட்சியின் நெருக்கடி மட்டுமன்றி, நான்கரைத் தசாப்தங்களாக இருந்துவந்த முதலாளித்துவ ஆட்சிமுறை முகம் கொடுத்துள்ள நெருக்கடியினது வெளிப்பாடுமாகும்.

எனினும் தேர்தல் பெறுபேறுகள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ விதிமுறைகளை — யூ. என். பி. வேலைத் திட்டங்களையே தோளில் சுமந்துகொண்டுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிபோல் காட்டப்பட்டது ஏன்? தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் நனவான பகுதியினர் இப்பிரச்சினைக்கு முகம் கொடுத்தே தீரவேண்டும். அதற்கான காரணம், தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடி பற்றிய பிரச்சினையுடன் இணைந்து கொண்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத சோசலிசத் தலைமையை ஸ்தாபிதம் செய்யப் போராடி வரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தென்மாகாண சபைத் தேர்தல் பெறுபேறு பற்றிய இந்த ஆய்வினை புரட்சித் தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள நனவான தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களிடையே அவர்கள் முகம் கொடுத்துள்ள அரசியல் சவாலை தெளிவுபடுத்தும் இலக்கிலேயே முன்வைக்கின்றது.

1. தென்மாகாண சபையை பலாத்காரமான முறையில் தூக்கி வீசி, தேர்தல் நடாத்தியதன் மூலம் யூ. என். பி. அரசாங்கம் வாக்குச் சீட்டுக்களை பெருவாரியாகப் கறப்பதன் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் வங்கியாளர்களதும் சார்பில் தாம் நடாத்தி வரும் பொலிஸ் ஆட்சிக்கு பொதுஜன அங்கீகாரம் இருப்பதாகக் காட்டவும், இந்த மிலேச்ச நிலைமைகளுக்கு பொது ஜனங்களை மேலும் மேலும் அடிமைப்படுத்தவும் எதிர்பார்த்தது. இந்த ஆண்டு இறுதியில் நடாத்தவுள்ள ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களில் தமது மிலேச்ச நிழலை மேலும் மேலும் பலப்படுத்திக் கொள்ளலாம் என யூ. என். பி. முதலாளிகள் எதிர்பார்த்தனர், யூ. என். பி. அரசாங்கத்தில் ஜனாதிபதி தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினர் வரையும், இராணுவ —பொலிஸ் அரச இயந்திரம் தொடக்கம் குண்டர் படைகள் வரையிலுமான அனைத்து பிரிவினரதும் அரசியல், சாதைத்தனங்கள் இந்த இலக்கினை அடையும் பொருட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டது. இருப்பினும். வாக்காளர்களில் மிகப் பெரும்பான்மையினர் யூ. என. பி. க்கு எதிராக வாக்களித்ததன் மூலம் அரசாங்கத்தின் காட்டுமிராண்டி ஆட்சி தொடர்பான தமது எதிர்ப்பினைக் காட்டினர். தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் பார்ப்பின் ஒரு சிறு பெரும்பான்மை வாக்குகளால் வென்ற பலப்பிட்டி தேர்தல் தொகுதி தவிர்ந்த ஏனைய சகல தொகுதிகளிலும் யூ. என். பி. தோல்வியடைந்துள்ளது. இது கடந்த 17 ஆண்டுகளினுள் யூ. என். பி. அரசாங்கம் முகம் கொடுத்த பாரதூரமான ஒரு தேர்தல் தோல்வியாகும்.

2. ஆனால் பொதுஜன எதிர்ப்பின் பெறுபேறுகளை சுரண்டிக் கொண்டோர் 'பொதுஜன முன்னணி' என்ற பேரில் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளால் தோள் கொடுக்கப்பட்ட முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியேயாகும். இந்த முதலாளித்துவக் கட்சிக்கு வாக்குக்களை கறக்கும் பொருட்டு நவசமசமாஜக் கட்சி இந்த முன்னணிக்கு வெளியே 'இருந்துகொண்டு கயிறிழுப்பில் ஈடுபட்டது. சி. ல. சு. க. தேர்தலில் வெற்றி பெற்றமை 'மக்கள் வெற்றி', 'ஜனநாயகத்தின் வெற்றி', 'பொதுமக்களின் சுயாதீனமான எழுச்சி' என்ற கோதாவில் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும், இளைஞர்களையும் குழப்பியடிக்க முதலாளித்துவ எழுத்தாளர்களும், சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. கட்சிகளும் தொழிற்சங்கங்களும் செய்யும் பிரயத்தனங்களை அடியோடு கண்டனம் செய்ய வேண்டும். இவர்கள் சி. ல. சு. க. தலைமைக்கு பந்தயம் பிடித்துள்ள சந்திரிகா குமாரணதுங்கவின் 'திறமையான தலைமை', 'அமைப்பு வல்லமை', 'கிராமத்தில் இருந்து அமைப்பு நடாத்தியமை' முதலான கதைகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் முதலாளித்துவ, நிலமானித்துவ அம்மணிக்கு வாய்ச் சாமரம் வீசுகின்றனர். இந்த கேவலம் முயற்சிகளின் அர்த்தம் இதுதான்: யூ.என்.பி. மிலேச்ச ஆட்சி நெருக்கடிக்கு உள்ளாகும் நிலைமையின் கீழ் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் வங்கிகளதும் சார்பில் அரசியல் நிலைமையை சிருஷ்டித்துக் கொடுக்கச் சபதம் பூண்ட மற்றுமோர் பிற்போக்கு தலைமையையும் கட்சியையும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் மேல் துள்ளிப் பாய்ந்து விழச் செய்வதே.

3. யூ. என். பி. அரசாங்கத்தின் 17 ஆண்டு ஆட்சிக்காலம், யுத்தத்தின் பின்னைய முதலாளித்துவ ஆட்சியின் மிலேச்ச காலப் பகுதியாகக் குறிக்கப்படுகின்றது. சமசமாஜ—ஸ்டாலினிச கட்சிகளும் தொழிற்சங்கங்களும் முதலாளித்துவ சி. ல. சு. க. வுடன் கூட்டரசாங்கத்தில் நுழைந்துகொண்டு முதலாளித்துவ நெருக்கடிக்குள் மூழ்கடிக்க நடாத்திய கொடிய தாக்குதல்களாலும், காட்டிக் கொடுப்புக்களாலும் மனமுடைந்து குழம்பிப்போன பொதுமக்களின் ஆத்திரத்தினை சுரண்டிக்கொண்டே யூ. என். பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இக் காட்டிக் கொடுப்புக்களை மேலும் நன்கு பயன்படுத்திக்கொண்ட ஜயவர்தனவின் யூ. என். பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் புதிய மட்டத்தில் உலகினை வட்டமிட்டுவந்த ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் தேவைகளுக்கு ஏற்ப கொடிய சுரண்டலை நிலைநாட்டும் பொருளாதார மறுசீரமைப்பு எனப்படுவதில் ஈடுபட்டது. அரச நிறுவனங்கள் இன்று ஒன்றில் இழுத்து மூடப்பட்டுள்ளன. அல்லது தனியார் துறைக்கு விற்றுத் தள்ளியதன் மூலம் பெரும் தொழில் அழிவினை உருவாக்கி உள்ளது. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு தொழிலாளர்களை விற்றுத் தள்ளும் உழைப்பு அடிமை முகாம்களாக சுதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவுவது ஆரம்பமாகியது. ஆடைக் கைத்தொழிலின் 'வளர்ச்சி' நாட்டின் பல்வேறு இடங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் உழைப்பு அடிமை முகாம்களை அமைப்பதுடன் இணைந்து கொண்டது. மக்கள் நீண்டகாலமாக வென்றெடுத்து அனுபவித்து வந்த இலவசக் கல்வி, சௌக்கிய சேவைகளை அடியோடு ஒழித்துவிட யூ. என். பி. அரசாங்கம் கங்கணம் கட்டியுள்ளது.

4. ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளும் வங்கிகளும் பிரமாண்டமான இலாபத்தையும் வட்டியையும் உறிஞ்சிக் குடிக்கும் அதே வேளையில் இந்த வெளிநாட்டு மூலதனத்தின் ஏஜன்டுகள் செல்வத்தை குவித்து வருவதால் சமூகத் துருவப்படுத்தல் ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடைப்பட்டதாகியுள்ளது. அரசாங்கத்தின் 'மூளைச் சபை' என கருதப்படும் கொள்கை கல்வி நிறுவனத்தின் ஒரு ஆய்வாளரின்படி 1973ல் சமூகத்தில் உயர்ந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 10 பேர், 1973ல் தேசிய வருமானத்தில் நூற்றுகக்கு 30 வீதத்தினை நுகர்ந்தனர். 1985/86ல் அந்த அளவு நூற்றுக்கு 49.3வீதம் வரை —அதாவது தேசிய வருமானத்தில் சரி அரைப் பங்கினை நுகர்ந்தனர். குறைந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 40 வீதத்தினருக்கு 1973 தேசிய வருமானத்தில் இருந்து நூற்றுக்கு 15.1 வீதமே கிடைத்தது. 1985/86ல் இது நூற்றுக்கு 7.1 வீதமாக—சரிஅரைவாசியாக வீழ்ச்சி கண்டது. கடந்த 8 ஆண்டுகளில் இந்த வேறுபாடு மேலும் விரிவடைந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. யுத்தச் செலவுகள், ரூபா மதிப்பிறக்கம், சந்தைச் சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் இக்கொடிய பேரழிவுகளுக்கு முகம் கொடுத்து வந்த மக்களின் வாழ்க்கைத் தரம் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது. 1982ல் கொழும்பு நுகர்வோர் சுட்டெண் 415.1 ஆக இருந்தது. 1994 பெப்ரவரியில் இது 1535.1க்கு உயர்ந்தது. 1990ல் ரூபா. 3000/-ஐ சம்பளமாக பெற்ற தொழிலாளி அல்லது வருமானம் பெற்ற விவசாயி 1994 அளவில் அது 2000/— ஆக வீழ்ச்சி கண்டதை கண்டான். என்னும் அரசாங்கத்தின் கணக்கீட்டின்படி ஜனத்தொகையில் சரி அரைவாசிப் பங்கினர் மாதாந்தம் ரூபா. 750/—க்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களில் ஜீவிக்கின்றனர். அந்த விதத்தில் பொதுஜனங்களில் பெரும்பான்மையினர் படுமோசமான சமூக அழிவில் தலைமூழ்கிப் போயுள்ளனர்.

5. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கும் உள்நாட்டுக் கம்பனிகளுக்கும் நிலம் வழங்கும் நிலைமையின் கீழும் முதலாளிகளின் கைகளில் நிலம் கைமாறிக் கொண்டுள்ள நிலைமையிலும் ஏழை விவசாயிகள் கடன் பழுலனுள் தள்ளப்பட்டுள்ளனர், விவசாயக் கடனை திருப்பிச் செலுத்த முடியாமலும் அன்றன்றாடம் வாழ்க்கையை ஓட்டிக்கொள்ள முடியாமலும் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். கடந்த ஆண்டில் மரக்கறி பயிரிட்ட தம் கிராமத்தைச் சேர்ந்த பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதோடு பெரும்போக விளைச்சல் அழிந்து விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது போனதால் பொலனறுவை பகுதியில் கடந்த வாரம் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை பதினொன்று.

உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின்படி வேலையில்லாத சனத்தொகையினர் உழைக்கும் திறன் கொண்ட படையில் நூற்றுக்கு 12 வீதத்தினர் அவர். ஏதோவொரு விதத்தில் உயிரைப் பிடித்துக் கொண்ட அரைகு
ளோரின் எண்ணிக்கை ந
களும், குழந்தைகளும் ச
பாதாளத்தினுள் தள்ள
அழித்துக் கொண்டுள்ள
கொண்டு போகும் ப
எனப்படுபவற்றில் இருந்
கானோர் இந்த வறுமை
ளப்பட்டு வருகின்றனர்.
நாடுகளைப் போலவே
வேலையின்மையையும்
மேலும் மேலும் உக்கிரம
அவசியமாக உள்ளது. ட்
களின் தேசிய ஏஜன்டுக
வும் குறைந்த மட்ட அ
ளர்களை விற்றுத் தள்
அதனைச் சிறந்த ஒரு

6. சமூக முரண்பா
துச் சிதறும் நிலைமைக
டுள்ளது. யூ. என். பி.
களில் சமசமாஜ, கம்யூன
மற்றும் தொழிற் சங்க
கொடுப்பைப் பயன்படுத்
டுத்த சமூக வெடிப்புக்க
கடிப்பதில் ஈடுபட்டிருந்த
மான முறையில் உக்கிரப்
கள இனவாத யுத்தம்,
காரர் ஒரு இலட்சம் ே
தோட்டத் தொழிலாள
பயங்கரவாத ஒடுக்குமுறை
படிக்கையும் இந்திய இ
வித்தமையும், 1988 – 9
இளைஞர்கள் படுகொலை
பல்லாயிரக் கணக்கானே
தள்ளப்பட்டமை, பல்க
களிலும் மாணவர் ஒடுக்
பினை நசுக்குவதற்கு
கொலைகார யுத்தத்தின்
பி. அரசாங்கம் அவசர
அன்றன்றாடைய சட்
ஒடுக்குமுறை இயந்திரத்
லாத விதத்தில் அபிவிரு
டுள்ளது. 1977ல் 10,
பொலிஸ் படை இன்று
பேரைக் கொண்டிருந்த
இலட்சம் பேரைக் கொ
செலவினம் 2500/- 3000
உள்ளது. தென் மாகாண
படும் மக்களை நசுக்கி
ழர் விரோத இனவாத
ஆக்கப்பட்டுள்ளது. யுத்
கப்பட்டுள்ள மக்களின்
தாண்டியுள்ளது. 1983
பட்ட தமிழ் மக்களின்
சம். வாழ்க்கைக்கு மா
இராணுவத்திற்கு கலைச்
துப்பாக்கிகளாக்கப்பட்டு

7. தென் மாகாண
அழிவுகளின் ஆழத்தினை
மையின் புதிய திருப்பு
தென்மாகாண சபைத்
கத்திற்கு எதிராகப் பய
ஆழத்தினைச் சுட்டிக் க
திகதி அரசாங்கம் அமுல
சரகாலச் சட்ட விதிகள்
றும் நிலைமையயிட்டு
டிக் காட்டியது. முத
தொழிலாளர் ஒடுக்கப்ப
கப் போராட்டங்களை
முன்னொருபோதும் இல்
பொலிஸ் அரசின் சர்வா
வொரு எதிர்ப்பினையும்
'அரசியல் உறுதிப்பாட்டி
னல் கம்பனிகளுக்கு அர
டுள்ளது. அரச வங்கிகள
மயமாக்கமும் எஞ்சியுள்
மயமாக்கமும் அரசாங்க
சமூக வெடிப்போ அ
களை குறைப்பதோ இட
நஷனல் கம்பனிகளின்
என முதலாளிகள் அஞ்ச
யாளர் சங்கத்தின் தை
தொழில்கள் முகம் கொ
கள் பற்றி சமீபத்தில்
குறிப்பிட்டார்:

படிப்பகம்

www.padippakam.com



# ன அர்த்தமும் / புரட்சிகரப் பணிகளும்

வேலைகளில் ஈடுபட்டுள்
கு 15 வீதமாகும். பெண்
ளாதை நிலையின் ஆதாள
ள்ளனர். தொழில்களை
க்கத் துறையிலும், ஒழிந்து
தேசிய கைத்தொழில்கள்
ன்னும் பல்லாயிரக் கணக்
ப்பு சமுத்திரத்தினுள் தள்
அரைக் காலனித்துவ
யிலும் வறுமையையும்,
அவஸ்தை நிலையையும்
து முதலாளி வர்க்கத்துக்கு
நஷனல் கூட்டுத்தாபனங்
முதலாளிகள் அதனை மிக
சம்பளத்துக்கு தொழிலா
முதலீடுகளை ஈர்க்கவும்
மயாகக் காண்கின்றனர்.

மீண்டும் மீண்டும் வெடித்
ன் மூலம் சிருஷ்டிக்கப்பட்
ங்கம் கடந்த 17 ஆண்டு
சமசமாஜ, இ. தொ. கா.
மைப்புக்களின் காட்டிக்
ண்டும் மீண்டும் தலையெ
ரத்த வெள்ளத்தில் மூழ்
983 தொடக்கம் நிரந்தர
தமிழர் விரோத சிங்
லை வேலை நிறுத்தக்
வேலைநீக்கம் செய்தமை,
எதிரான இனவாத,
இந்திய—இலங்கை உடன்
ஆக்கிரமிப்பைத் தரு
இலட்சம் கிராமப்புற
ய்யப்பட்டமை, இன்னும்
திரவதை முகாம்களுக்குள்
மூகங்களிலும் பாடசாலை
என்பன சமூக வெடிப்
ளி வர்க்கம் நடாத்திய
கோட் ஆகும். யூ. என்.
சட்டத்தினை நாட்டின்
கியுள்ளது. அரசாங்கம்
முன்னொரு போதும் இல்
சய்து, கட்டவிழ்த்து விட்
பேரைக் கொண்டிருந்த
0 எட்டியுள்ளது. 25,000
ணுவம் இப்போது ஒரு
ாது. வருடாந்த யுத்தச்
டிக்கு இடைப்பட்டதாய்
தொழிலாளர்—ஒடுக்கப்
ம் முக்கிய ஆயுதமாக தமி
மூட்டல்களும் யுத்தமும்
நாசத்தினால் அகதிகளாக்
க்கை 10 இலட்சத்தைத்
க்கம் கொலை செய்யப்
க்கை சுமார் ஒரு இலட்
இல்லாத இளைஞர்கள்
டு முதலாளி வர்க்கத்தின்
ன்றனர்.

தேர்தல், இந்தச் சமூக
ரமாக்கிய வர்க்க நிலை
ல் இடம் பெற்றுள்ளது.
பெறுபேறுகள் அரசாங்
செய்தமை இந்த வர்க்க
ன்றது. 1993 டிசம்பர் 20ம்
கொணர்ந்த மிலேச்ச அவ
விருத்தி கண்டுவரும் குழு
ங்கத்தின் பீதியைச் சுட்
வர்க்கத்துக்கு எதிராகத்
களை வழிநடாத்தும் வர்க்
செய்வதாகக் குறிப்பிட்ட
அவசரகாலச் சட்டங்கள்
ச் சட்டங்களாகும். எந்த
ச் சப்பாத்தினால் நசுக்கி
காப்பதாக ட்ரான்ஸ்நஷ
வாக்குறுதியளிக்க நேரிட்
நாட்டங்களதும் தனியார்
நிறுவனங்களின் தனியார்
ஒப்படைக்கப்பட்டுள்ளது.
தொடர்ச்சியாக சம்பளங்
ாது போகின் ட்ரான்ஸ்
ள் ஓட்டம் எடுத்துவிடும்
கள். ஆடைகள் ஏற்றுமதி
லின் பெர்னாந்து, கைத்
ன அத்தகைய பிரச்சினை
பிடுகையில் பின்வருமாறு

''நெறிப்படுத்தப்பட்ட தொழிலாளர் படையும் டாலர் 20-25க்கு இடையிலான சம்பளமும் கொண்ட வியட்னாமின் பிரமாண்டமான உழைப்புச் சக்தியைப் பற்றி சிந்தியுங்கள். அமெரிக்க வர்த்தகத் தடை அகற்றப்படுமானால் (இது இப்போது அகற்றப்பட்டுள்ளது-தொ.பா) அமெரிக்க சந்தையின் ஏதேனும் ஒரு பகுதியினர் அவர்களை வாரிக் கொண்டு போகமாட்டார்களா'' (த ஐலன்ட் - 1994 மார்ச் 02)

8. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஊடுருவலும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்காக பொருளாதாரத்தினை மறுசீரமைத்தலும் முதலாளித்துவ ஆட்சியை உக்கிரமான நெருக்கடியினுள் மூழ்கடித்துள்ளது. யூ. என். பி. அரசாங்கம் தனது கையைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தென்மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றது. ஆனால் அது நெருக்கடியை உக்கிரமாக்குவதில் முற்றுப் பெற்றுள்ளது. 1990ல் யூ. என். பி. அரசாங்கத்தின் அமைச்சர்களான காமினி திசாநாயக்கவும் லலித் அத்துலத்முதலியும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டினை கொணர்ந்ததைத் தொடர்ந்து யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தக் குத்துவெட்டு, லலித் அத்துலத்முதலியின் படுகொலையிலும் ஜனாதிபதி பிரமேதாசவின் கொலை மூலமும் உச்சக் கட்டத்தை அடைந்தது. இதைத் தொடர்ந்து சி. ல. சு. க, ல. ச. ச. க, க. க, ந. ச. ச. க. தோள்களின் மேலாக நீடித்து நின்ற விஜேதுங்க அரசாங்கம் அநுர பண்டாரநாயக்க, ரொனி டி மெல் ஆகியோரை உள்ளே இழுத்துக் கொள்வதன் மூலம் உறுதிப்பட்டு நிற்கப் பார்த்தது. 1950பதுகளில் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு பொறிக் கிடங்காக யூ. என். பி.யில் இருந்து வெளியேறிய பண்டாரநாயக்காவினால் திணிக்கப்பட்ட சி, ல. சு. க.யின் முதலாளித்துவ மாற்று வேலைத்திட்டங்கள் அழியுண்டு போன நிலையில் அதன் கோஷ்டிகள் யூ. என். பி.க்கு மாறத் தொடங்கியுள்ளனர். எனினும் இப்போது யூ. என். பி. நெருக்கடிக்குள் சென்றுள்ள நிலைமையில் சி. ல. சு. க. சந்திரிகா குமாரணதுங்க உள்பட்ட 'புதிய தலைமை'யின் கீழ் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் முதலாளி வர்க்கத்தினதும் தேவைகளின் பேரில் சேவை செய்ய முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினர் அணிதிரளத் தொடங்கியுள்ளனர். யுத்தத்தின் பின்னைய அமைப்பின் ஒரு பாகமாக இலங்கை முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை நடாத்த 1948ல் திணிக்கப்பட்ட அரச அமைப்பு இன்று சிதறுண்டு போயுள்ளது. அத்தகைய வர்க்க ஆட்சிக்காக திணிக்கப்பட்ட முதலாளித்துவக் கட்சிகளும் வெடித்துச் சிதறியதன் மூலம் முதலாளி வர்க்க நிர்வாகத்தின் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்கி உள்ளன.

9. இது ஒரு உலகளாவிய தோற்றப்பாடாகும். தொழில்நுட்பத்தின் புதிய புரட்சிகர மாற்றங்களுடன் முதலாளித்துவ உற்பத்தி விதிமுறைகள், ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் கீழ் உற்பத்தியை ஒழுங்கு செய்யும பூகோளமயமாக்கத்துக்கு ஆட்பட்டுள்ளது. இலாப விகிதாசாரத்தைக் காக்கும் பொருட்டு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் இலாபமான உழைப்பையும் மூலப் பொருட்களையும் தேடி உலகத்தை வட்டமிட்டுக் கொண்டுள்ளன. ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே வர்த்தக யுத்தம் உள்ளடங்கலான ஏகாதிபத்திய பகைமை வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது. அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகள் இதன பெறுபேறாக இடைநடுவில் முறிந்து கொட்டியது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தாம் இழந்த பொருளாதார பலத்தினைத் திரும்பவும் கைப்பற்றும் பொருட்டு இராணுவ பலத்தினை பாவிக்கும் தீர்மானத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். ஏகாதிபத்திய நாடுகளின் உள்ளே சமூக சேவை வேலைத்திட்டத்தினை துடைத்துக்கட்டுவதன் மூலம் இலாப வீதத்தினை அதிகரித்துக்கொள்ளச் செயற்பட்டு வரும் ஆளும் வர்க்கம் மறுபுறத்தில் போட்டியாளருக்கு எதிராக யுத்தம் தவிர்க்க முடியாததாகும் நிலைமையின் கீழ் யுத்தத்தில் ஈடுபடவும் தயாராகி வருகின்றது. விரும்பிய விதத்தில் சுரண்டலுக்கு கதவுகளைத் திறத்தல், இலாபமான உழைப்பை திரட்டுதல் மூலப்பொருட்களுக்கு ஊற்றுவாயைத் திறத்தல் என்பனவற்றை ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் அரைக் காலனித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கத்திடம் இருந்து வேண்டி நிற்கின்றன. வர்த்தக யுத்தத்திற்கும் யுத்தவெறி தேவைகளுக்கும் சேவை செய்யக் கூடிய ஆட்சியாளர்களையும் கட்சிகளையும் அமைப்பதில் ஏகாதிபத்திய நாடுகளின் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சொந்தக்காரர்களும் வங்கியாளர்களும் செய்யும் முயற்சிகள் பாரம்பரியமான முதலாளித்துவக் கட்சிகளை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. யப்பானில் யுத்தத்தின் பின்னர் நான்கு தசாப்தங்கள் ஆட்சி புரிந்த எல். டீ. டீ. கட்சியின் வீழ்ச்சியும் இதன் பின்னர் பிரதமரான மொரிஹிரோ ஹொசாகா அரசாங்கத்தின் நெருக்கடியும், இத்தாலியில் புதிய வலது சாரி, பாசிச குழுக்கள் முன்னணிக்கு வந்துள்ளமையும் இதையே சுட்டிக்காட்டுகின்றன.

10. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு அரைக்காலனித்துவ நாடுகளில் என்றாலும் சரி இன்று அவசியப்படுவது சுரண்டலுக்கான உழைப்பு அடிமை முகாம்களை சிருஷ்டிக்கும் பகுதியாகும். இதற்கிடையே வெளிநாட்டு மூலதனங்களை தத்தமது பிராந்தியங்களுக்கு ஈர்த்துக் கொள்ளும் முகமாக 'தனியான அரசுகள்' அல்லது பகுதிகளை ஒதுக்கும் பொருட்டு அரைக் காலனித்துவ நாடுகளில் பல்வேறு பிராந்திய, தேசிய, இனப்பகுதியினரின் முதலாளித்துவ வர்க்கத்தின் மோதல்கள் அபிவிருத்தி காணத் தொடங்கியுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் இந்த ஆளும் கும்பல்களின் பக்கம் சேர்ந்து கொண்டு தத்தமது ஆளுமையை ஸ்தாபிதம் செய்ய முயற்சிக்கிறார்கள். பழைய யூகோசலாவிய பிராந்தியத்திலும் மத்திய கிழக்கு, ஆசியாவில் பழைய சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை இத்தகைய தீப்பிளம்பினுள் இழுப்பது வளர்ச்சி கண்டு வருகின்றது. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளை மகிழ்விக்கும் இம்மிலேச்ச நடவடிக்கையும் அதனால் உருவாகியுள்ள சமூக-அரசியல் நெருக்கடியும் ஆளும் வர்க்கத்தின் நெருக்கடியின் பின்னணியாக உள்ளன. ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கும் அவற்றின் கொம்பிரதோர் (தரகு முதலாளிகள்) ஏஜன்டுகளுக்கும் தமது அவசியங்களை இட்டுநிரப்பும் புதிய ஆட்சியாளர்களும், கட்சிகளும், சர்வாதிகார ஆட்சிகளும் அவசியப்படுகின்றது.

யூ. என். பி.யினுள் செய்யப்படும் மாற்றங்களையும் இப்போது சி. ல. சு. க.வை முன்னணிக்குக் கொணரச் செய்யப்படும் முயற்சிகளையும் இந்த அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினுள் செய்யப்படும் இம் மாற்றங்கள், மோதுதல்கள், நெருக்கடிகளை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் புரிந்துகொள்ளாவிடின் அவர்கள் இரவில் வீழ்ந்த படுகுழியில் பகலிலும் விழுந்துகொள்ள நேரிடும். எதிர்வரும் மாதங்கள் யூ. என். பி – சி. ல. சு. க. தலைவர்கள் இந்த அரசியல் கச்சை கட்டல்களில் இறங்குவதற்கான காலமாகவுள்ளது.

11. சந்திரிகா குமாரணதுங்க உட்பட்ட சி, ல. சு. க. தலைவர்கள் சமசமாஜ—கம்யூனிச தலைவர்களின் உதவியுடன் தேர்தல் நாட்களிலும் அது முடிந்ததன் பின்னரும் முன்வைத்துள்ள வேலைத்திட்டமானது ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் வங்கிகளதும் கைத்தேங்காயாக ஊர்ஜிதம் செய்துகொள்ள சி. ல. சு. க. செய்யும் பிரயத்தனங்களை சரியான விதத்தில் எடுத்துக் காட்டுகின்றது. சந்திரிகா குமாரணதுங்க தனது வேலைத்திட்டத்தில் இரண்டு அடிப்படை விடயங்களை அம்பலமாக்கியுள்ளார்: (அ) சமூகப் பதட்ட நிலையைக் கைப்பிடிக்குள் கொணரும பொருட்டு—உண்மையில் அதை நசுக்குவதற்கு — தமது கைக்கு ஆட்சி அதிகாரம் கிட்ட வேண்டும் என்றுள்ளார்: ''...நாட்டிற்கு ஜனநாயகப் பாதையில் செல்ல முடியும் என்பதை நாட்டுக்கு நிரூபிப்பதற்காக — சிறப்பாக இளைஞர்களுக்கு நிரூபிக்கும் பொருட்டு இந்தத் தேர்தல் தீர்க்கமானது. இத் தேர்தலில் ஜனநாயகம் அல்லாத எதையேனும் அரசாங்கம் செய்யுமாயின் அது பிரமாண்டமான ஒரு பின்வாங்கல் ஆகும் என நினைக்கின்றேன். பெரிதும் செல்வாக்கிழந்து போன அரசாங்கத்தினை தோற்கடிக்கும் வேறு வழிகளைப் பற்றி இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள்'' (சன்டே ஐலன்ட்'-மார்ச், 1994 சந்திரிகா குமாரணதுங்காவின் பேட்டி) (ஆ) தமது வேலைத்திட்டம் யூ. என். பி. வேலைத்திட்டமே என்பதை அவர் வலியுறுத்தினார். ''கேள்வி: சி. ல. சு. க. ஆட்சிக்கு வரின் யூ. என். பி.யின் பொருளாதாரக் கொள்கையை மாற்ற நீங்கள் கருதுகின்றீர்களா? பதில்: நாம் அதனை தலைகீழாக்க மாட்டோம். நாம் அதனை மக்களாதரவு பெற்றதாக்குவோம். சிங்கப்பூரிலும் யப்பானிலும் தாய்வானிலும் செய்வதுபோல் இந்த அரசாங்கம் திறந்த சந்தைப் பொருளாதாரத்தினைக் கடைப்பிடிக்கின்றது என எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.'' (சந்திரிகா குமாரணதுங்காவின் பேட்டி-1994 மார்ச் 20 'சன்டே டைம்ஸ்')

12. சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா குமாரணதுங்க உட்பட்ட சி. ல. சு. க. தலைவர்களின் முக்கிய பணி என்னவெனில் இலங்கை முதலாளி வர்க்கத்தின் பகுதியினரை தம்பக்கம் ஈர்த்துக்கொண்டு, யூ. என். பி.யை மாற்றி தம்மை ஆட்சிக்கு கொணரும் தகுதியை ஏகாதிபத்தியவாதிகளுக்கு நிரூபிப்பதே. முன்னர் வாச்குறுதி அளித்தபடி குமாரணதுங்க, சீ. வி. குணரத் கிங்ஸ்லி விக்கிரமரத்ன முதலான எம். பீ. க்களு சேர்ந்து மார்ச் 29ம் திகதி கொழும்பு பிரபல ஹே டல் ஒன்றில் 200 வர்த்தகர்களுடன் கூட்டம் தா நடாத்தினார். ''அவளின் கட்சி திறந்த பொருளாதாரத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளதாயும் ...பாக்கம் அர்த்தமுள்ள விதத்தில் அதை மிகவும் ...ர்க்க)

(6–ம் பக்கம் பக்...

படிப்பகம்

www.padippakam.com



# தென் மாகாண சபைத் தேர்தல் முடிவின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதாயும் குமாரணதுங்க உத்தரவாதம் அளித்துள்ளார்.'' ('த ஐலன்ட்'-1994 ஏப்ரல் 01) அதே கலந்துரையாடலில் சி. ல. சு. க. தினமும் நாட்டின் வர்த்தகர்களுடனும் வெளிநாட்டுத் தூதுவர்களுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபாட்டு வருவது அம்பலமாகியது: ''தமது பொருளாதாரக் கொள்கைகளை விளக்கும் பொருட்டு வர்த்தக, ராஜதந்திரிகளுடன் தினமும் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமென எதிர்க்கட்சி கருதுகின்றது. 'கவலைப்பட எதுவும் இல்லை' என திரு. குணரத்ன தெரிவித்தார்.'' (அதே பத்திரிகை) யூ. என், பி. நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டுள்ள ஒரு தருணத்தில் அவ்விடத்தைப் பிடிக்கவுள்ள முதலாளித்துவ சி ல. சு. க. இந்த இலட்சணத்திலேயே தயாராகிக் கொண்டுள்ளது.

13, ஆட்சிக்கு அழைக்கப்படும் ஒரு நிலையில் ட்ரான்ஸ்நஷனல் சம்பனிகளின் தேவையின் பேரில் தொழிற்பட சி, ல. சு. க. எந்த விதத்தில் ஆயத்தமாகின்றது? ''யூ. என். பி. இன்றைய சகாப்தத்தின் முடிவின் ஆரம்பம்'', ''ஜனநாயகத்தை திரும்பவும் சிருஷ்டித்தல்'', ''வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்'' முதலிய ஜனரஞ்சகப் பேச்சுக்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை மூழ்கடிக்கச் செய்யும் தூண்டில் புழுக்கள். இளைஞர்கள் பற்றிய முதலைக் கண்ணீரும் அத்தகையதே. யூ, என். பி. அரசாங்கத்தினை நீக்கும் எந்தவொரு அரசாங்கமும் அது நிறுத்திய இடத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கும். முதலாளி வர்க்கத்தின் வேலைத்திட்டம் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளாலும் பெரும் வங்கிகளாலுமே தீர்மானிக்கப்படுகின்றது. அரசாங்கம் அமைக்கத் தள்ளப்படின் அது பெரிதும் சூடேறிய ஆதாளபாதாளத்தினுள் இடம்பெற நேரிடும் என்பதை சி. ல, சு. க. அறியும். அதனால் யூ, என். பி. அரசாங்கத்தின் 17 ஆண்டுகால ஒடுக்குமுறை ஆட்சியின் அநுபவங்களையும் ஏனைய நாடுகளின் ஒடுக்குமுறை இயக்கங்களையும் முன்மாதிரியாகக் கொண்டு அரச இயந்திரத்துக்குச் சமாந்தரமான ஒரு ஒடுக்குமுறை இயந்திரத்தினை அமைத்துக் கொள்ளச் செய்யும் முயற்சிகள் தென்மாகாண தேர்தலில் வெளிப்பாடாகின. வெளிவந்த அறிக்கைகளின்படி கேர்ணல் அனுருத்த ரத்வத்தவினதும் மாஜி விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகவினதும், மாஜி, பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத்தினதும் தலைமையில் இந்த 'வேலைத் திட்டம்' தயாரிக்கப்பட்டுள்ளது, ஆயுதப்படையில் இருந்து ஓய்வு பெற்றோர் இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர். இது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலையில் அரச இயந்தரத்துக்குச் சமாந்தரமாகப் பயன்படுத்தும் பொருட்டு குண்டர் படைகளைத் தயார் செய்யும் ஒரு முயற்சியாகும்.

14. யூ. என். பி.யினதும், சி. ல. சு க- சமசமாஜ—கம்யூனிச பொதுஜன முன்னணியினதும், நவசமசமாஜக் கட்சியினதும் தேர்தல் பிரச்சாரத்தினதும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் பிரச்சாரத்தினதும் அடிநாதமாக விளங்குவது பிராந்திய வாதத்தினைத் தூண்டிவிடுவதே. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கீழ் இடம்பெறும் உறுகுண 'அபிவிருத்திக்கு' யூ. என். பி குரல் கொடுத்தது. உறுகுண மக்களின் 'அபிவிருத்தி' சி. ல. சு. க.வின் அடிநாதமாக விளங்கியது. நவசமசமாஜ கட்சியின் விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார, பத்தேகம சமித உட்பட்ட பேர்வழிகள் 'உறுகுண மக்களுக்கே' அழைப்பு விடுத்தனர் இதன் உச்சக் கட்டமாக, இனவாதத்தையும், பிராந்திய வாதத்தினையும் தூண்டிய சிங்கள பூமிபுத்திர கட்சியின் அழைப்பு விளங்கியது. சில மாதங்களுக்கு முன்னர் அம்பாந்தோட்ட மாவட்ட எம். பி.யான மகிந்த ராஜபக்ச உட்பட்ட சி. ல. சு. க. தலைவர்களுடன் சேர்ந்து நவசமசமாஜ தலைவர்கள் 'உறுகுண மக்களுக்கு இடம்பெறும் அநீதி'க்கு எதிராகப் போராடும் பொருட்டு 'உறுகுண மக்களை வழி நடாத்தும்' பேரில் அம்பாந்தோட்டையில் பேரியல் நடாத்தினர் இதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னரே 'வடக்கு-கிழக்குக்கு தனியான அரசு கோருதல் நியாயமானால் மலைநாட்டுக்கும் தனியான அரசு கோருதல் அதைக் காட்டிலும் நியாயமானது' என மத்திய மாகாண சபை யூ. என். பி. தலைவர்களும் பிராந்திய முதலாளிகளும் கூச்சலிட்டனர். உறுகுண மக்கள் பற்றிய அக்கறையின் பின்னியில் இருப்பது என்ன? ட்ரான்ஸ்நஷனல் கம்பனிக... தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை விற்றுத் தள்... பிரிவுகளை ஏற்படுத்தவும் அவர்களை நசுக்கித் தள்... இருந்துவரும் அக்கறையே. இலங்கையின் ஏனை... மாகாணங்களின் மக்களைப் போலவே படுமோசமான ... கள் பற்றினுள் தள்ளப்பட்டுள்ள தென்மாகாண மக்கட்சிகளும் அக்கறை அல்ல இவ்விரு முதலாளித்துவக் ... ளின் முன்ரமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ தலைவர்க... ப... இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் ... ல் சு. டு. எண்ண இளைஞர்களையும் ஆயிரக் கணக் ... தமிழர் விராத கடலில் வீசி அதிக நாட்கள் இல்லை. இரத்தக் களரியான இனவாதத்தினைத் தூண்டி மேலும் மேலும் மோசமாக்க முயற்சிக்கும் முதலாளிகள் தள்ளிவிட தயாராக...ான திப்பிளம்பினுள் மக்களைத் ...ர்.

15. கடந்த 17 ஆண்டுகளின் சகல தீர்க்கமான கட்டங்களிலும் யூ. என். பி. அரசாங்கத்தின் அப்பட்டமானதும் மறைமுகமானதுமான சகபாடியாக செயற்பட்டது சி. ல. சு. க. மட்டும் அல்ல. தோட்டத் தொழிலாளர்களை முழுமனே காட்டிக் கொடுத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்கள் மட்டும் அல்ல, சமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுமாவர். சமசமாஜ-ஸ்டாலினிச கட்சிகளின் நாற்றமெடுப்பு இத்தேர்தலில் மீண்டும் அம்பலமாகியது. அவர்கள் கூறிக்கொள்ளும் மக்கள் வெற்றி எனப்படுவதில் சமசமாஜ-கம்யூனிச கட்சிகளின் கோட்டையாக விளங்கிய இம்மாகாணத்தின் தேர்தலில் சமசமாஜக் கட்சி ஒரு இடத்தையே கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. ஸ்டாலினிஸ்டுகள் இரண்டு இடம். இவ்விரு கட்சிகளும் இன்று கூட்டாக முயற்சிப்பது என்ன? 1970ல் அமைக்கப்பட்ட கூட்டரசாங்கத்தினையும் தாண்டும்-ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சர்வாதிகாரமாக முதலாளித்துவ சி. ல. சு. க. அரசாங்கத்தை திணிப்பதே. இக்கட்சிகள் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் தேவைகளை பூர்த்தி செய்யச் செயற்படும் முதலாளித்துவக் கட்சிகளாகி உள்ளன.

16. தென் மாகாண சபைத் தேர்தலில் சி. ல. சு. க வுக்கு பின்னால் இருந்து முண்டு கொடுத்து வந்த நவசமசமாஜக் கட்சி இப்போது அதன் ஆளுமையை மக்கள் மேல் திணிக்க கேடுகெட்ட விதத்தில் தொழிற்பட்டு வருகின்றது. சி. ல. சு. க.யின் தேர்தல் வெற்றி ''ஒரு மக்கள் வெற்றி'' எனவும் 'அது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்' எனவும் 'ஹரய' பத்திரிகை குரலெழுப்புகின்றது. சி. ல. சு. க.வுக்கு வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பதில் தாம் அனுபவிக்க நேரிட்ட கஷ்டங்கள் பற்றி நவசமசமாஜக் கட்சி இங்ஙனம் அறிக்கை செய்கின்றது: ''அநேக தருணங்களில் அரசாங்க எதிர்ப்பு வாக்குகளைக் காப்பதற்கு தாமும் தலையிட நேரிட்டதாக ந.ச.ச.க. பேச்சாளர் ஒருவர் 'ஹரய' பத்திரிகைக்கு தெரிவித்தார். ('ஹரய' 1994 மார்ச் 25) இதைத் தொடர்ந்து ந. ச.ச.க. பின்வருமாறு கேள்வியெழுப்பி தாமே பதிலளிக்கின்றது: ''அடுத்தது என்ன? இந்த வெற்றியை முன்னெடுத்துச் செல்லுவதற்கு தென்பகுதி மக்களை உற்சாகப்படுத்தும். இந்தத் தேர்தல் ஆண்டில் முழு நாட்டு மக்களதும் அவாவும் அதுவே. அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை மாற்றும் பொருட்டு தென்பகுதி மக்கள் பொது முன்னணியிலும் அதன் தலைவியான முதலமைச்சர் சந்திரிகா மதும நம்பிக்கை வைத்துள்ளனர்'' (ஹரய) நவசமசமாஜக் கட்சி இப்போது துடிப்பது முதலாளித்துவ சி. ல. சு. க. அரசாங்கத்துக்காகவே. சந்திரிகா குமாரணதுங்கவை முதலாளித்துவ தலைவியாக சுத்தப்படுத்தி அரவணைத்துக் கொள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியினர் எடுக்கும் முயற்சியில் முன்னணியில் நின்று செயற்பட ந. ச. ச. க. தலைவர்கள் துடிக்கிறார்கள். மேலே குறிப்பிட்ட இதே 'ஹரய' பத்திரிகை சு. ல. சு. க, தென்மாகாண சபைத் தேர்தலில் வெற்றி கண்டதோடு 'வர்த்தகர்கள் நாட்டிலிருந்து ஓட்டம்' என்று கொட்டை எழுத்துக்களில் தலையங்கங்கள் தீட்டினர். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை எருமை மாடுகள் என்ற நினைப்பிலேயே இவற்றை எழுதியுள்ளனர். குமாரணதுங்க தலைமை வழங்கும் முதலாளித்துவ முன்னணியின் 'திறமையின்மை' பற்றி முனகிக் கொள்ளும் ந. ச. ச. க, தலைவர்கள், அரசாங்க அதிகாரத்துக்குப் பந்தயம் பிடிக்க முதலாளித்துவ வர்த்தகர்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தகுதியைக் காட்டிக் கொள்ள குமாரணதுங்க வெளிவெளியாக முன்வந்திருப்பதன் மூலம் அவள் பொது மக்கள் முன்னிலையில் அம்பலமாகிவிட நேரிடுமோ என அஞ்சிக்கொண்டுள்ளார்கள்.

17. இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கீழ் திணிக்கப்பட்ட பிற்போக்குப் பொறிக்கிடங்கான மாகாண சபைத் திட்டத்தினை ஏற்றுக் கொண்ட நவ சமசமாஜ கட்சியினர் ஒரு நிஜ முதலாளித்துவக் கட்சியினராக தேர்தலில் போட்டியிட்டனர். இக் கட்சி தேர்தலுக்கு நிறுத்திய வேட்பாளர்களிடையே இக் கட்சி அங்கத்தவர் மட்டுமன்றி யூ. என். பி. காரர்கள், சிறிலங்கா காரர்கள் இன்னும் பல பிற்போக்காளர்களும் அடங்குவர். இக்கட்சி ஏனைய முதலாளித்துவக் கட்சிகளுடன் தோளோடு தோள் சேர்ந்து 'உறுகுணவாத'த்தினை தூண்டியது. அவர்களின் பிரச்சாரத்தின முக்கிய நாதமாக விளங்கியதும் அதுவே. கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் பிராந்தியத்தில் அதற்கென்றே வரையறுக்கப்பட்ட ஒரு அபிவிருத்தியை உண்டுபண்ண முடியும் என்ற பிற்போக்கு பிரச்சாரத்தினை முன்னெடுத்தனர். கட்சிக் குழுவின் தலைவராக பத்தேகம சுமித தேரோவை நிறுத்தியமை இந்த பிற்போக்கு சிங்கள பௌத்த இனவாதத்தினை தூண்டுவதற்கே. இக்கட்சி அனைத்துலக பப்லோவாதிகளின் இலங்கைக் கிளையென்ற முறையில் ஏகாதிபத்தியவாதிகளின் நலனின் பேரில் நன்கு நனவாகச் செயற்படும் ஒரு ஏஜன்சியாகும். யூ. என். பி. ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சி தீர்க்கமான நெருக்கடிக்குள்ளான சகல வேளைகளிலும் அதைக் காப்பதற்கு-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து-

13-ம் பக்கம் பார்க்க)

## இந்திய வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

மே 11ம் திகதி இந்திய வங்கி ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தினால் அகில இந்தியா பூராராவும் வங்கித் துறை ஸ்தம்பித்தது. வங்கிகள் தனியார்மயமாக்கத்தை எதிர்த்தும், சம்பள உயர்வு கோரியும் இந்த வேலைநிறுத்தம் இடம் பெற்றது:

இந்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் சமீபத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் இந்தியாவினுள் பரந்த அளவிலான முதலீடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு மிகவும் குறைந்த மட்டச் சம்பளத்தில் உழைப்பைச் சுரண்டுவதற்கான வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக வங்கிகள் தனியார்மயமாக்கத்தில் நரசிம்மராவ் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தினை உலகச் சந்தைக்குத் திறந்து விடுவதானது தேசியக் கைத்தொழில்களில் வேலை செய்யும் இலட்சோப லட்சம் தொழிலாளர்களை வேலையற்றோர் படையில் தள்ளும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நெய்யப்பட்ட நூல் இறக்குமதி மீதான சுங்க வரி தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து குஜராத், டட்ரா, நாகாகாஸ் போன்ற இடங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மார்ச் 3ம் திகதியில் இருந்து காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் இறங்கியது தெரிந்ததே.

---

வாசியுங்கள்:

## இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?



''தொழிலாளர் பாதை'' வெளியீடு

ரூபா. 7-00

படிப்பகம்

www.padippakam.com



## காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை மூடப்படுவதை எதிர்த்து

# சீ - நோர் தொழிலாளர் பிரச்சாரம்

யாழ்ப்பாணம் சீ—நோர் தொழிலாளர்கள் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையின் சகோதர தொழிலாளர்களதும் தமதும் தொழில் உரிமை காக்கும் கூட்டுப் பிரச்சாரத்தினை ஆரம்பித்துள்ளார்கள்.

யூ என். பி அரசாங்கம் காரைநகர், குருநகர் சீ—நோர் வேலைத்தலங்களை அடியோடு மூடியதன் மூலம் தொழிலாளர்களின் தொழில்களை நாசமாக்கியுள்ளது. இந்த தொழில் அழிப்பு ரூபா. 20,000/- நஷ்டஈடு வழங்கும் பம்மாத்தின் கீழ் இடம்பெற்றது. தற்சமயம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் 1/4 பங்கு—சொற்ப தொகை வழங்கி வந்த யூ. என். பி. அரசாங்கம் அதையும் நிறுத்தி 600 தொழிலாளர்களின் தொழில்களை அழிக்கத் தயாராகியுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தின் இந்த திட்டத்தினைத் தெளிவுபடுத்துகையில் வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளர் ஒரு தடவை பின்வருமாறு குறிப்பிட்டார். ''காலி, புத்தளத்தில் இயங்கும் சீமெந்து தொழிற்சாலைகள் மக்கள்மயமாக்கப்பட்டு விட்டால் காங்கேசன் தொழிற்சாலையும் மக்கள் மயமாக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லை என்பதனால் தொழிற்சாலையை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை.''

இந்நிலைமையில் தொழில் காக்கும் பிரச்சாரத்தினை ஆரம்பித்துள்ள சீ—நோர் தொழிலாளர்கள், சீ—நோர் தொழிலாளர்களதும் காங்கேசன் சீமெந்து பக்டரி தொழிலாளர்களதும் ஒன்றிணைந்த போராட்டத்தின் அவசியத்தினை வலியுறுத்தி சீமெந்து தொழிலாளர்களிடையே விநியோகித்துள்ள துண்டுப் பிரசுரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ''யூ. என். பி. அரசாங்கத்தின் தொழில் அழிப்பு வேலைத் திட்டத்தினால் தொழில் இழந்துள்ள சீ-நோர் தொழிலாளர்கள் என்ற முறையில் இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டத்துக்கு துணைபோன சக்திகளை யிட்டு எச்சரிக்கை செய்வதும், இந்த நிலைமையை இன்னும் ஒரு சில தினங்களில் முகம் கொடுக்க உள்ள காங்கேசன் சீமெந்து தொழிலாளர்கள். பரந்தன் இரசாயன ஆலைத் தொழிலாளர்கள், ஆனையிறவு உப்பளத் தொழிலாளர்கள் பாதுகாப்புக் கமிட்டியை நிறுவுவதன் மூலம் தொழில் உரிமை காக்கும் போராட்டத்தில் குதிப்பதும் அவசியம் எனக் கருதுகின்றோம்.

''இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு சீ—நோர் தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிட்டமைக்கு சீ. எம். யூ. தலைமையின் துரோகமே காரணம். தொழில் உரிமை காக்கும் போராட்டத்துக்கான எந்தவொரு வேலைத் திட்டத்தினையும் முன்வைக்காத பாலாதம்பு தலைமை, அரசாங்க அதிகாரிகளுடன் சேர்ந்து தொழிற்சாலையை மூடும் நடவடிக்கைகளை சுலபமாக்கும் கைங்கரியத்துக்கே கைகொடுத்தது. இதன் காரணமாகவே யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யும் கடிதங்களை விநியோகித்ததோடு 'பொல்முல்லைத் திட்டம்' எனப்படுவதன் கீழ் ஒரு சொற்ப தொகையை நஷ்டஈடாக வழங்கி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றுள்ளது...இத்துரோக ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு முதலாளித்துவ இனவாத அரசாங்கம் ஒரு கால் நூற்றாண்டு கால பக்டரியை எந்தவிதமான ஆர்ப்பரிப்பும் இல்லாமல் இழுத்து மூட வாய்ப்பு ஏற்பட்டிராது.''

சீ. எம். யூ. வின் இந்த துரோகப் பாத்திரத்தினுள் நிதர்சனமாகும் தொழிற்சங்கங்களின் பிற்போக்குப் பரிணாமத்தினை தெளிவுபடுத்துகையில் இத்துண்டுப் பிரசுரம் மேலும் கூறுவதாவது: ''...கடந்த காலத்தில் தொழிலாளர்களின் தொழில், சேவை நிலைமைகளுக்காக வரையறுக்கப்பட்ட முறையில் தன்னும் போராடிய தொழிற்சங்க அமைப்புக்கள் இன்றைய ஏகாதிபத்திய உலக நெருக்கடியின் முன்நிலையில் அரசுடன் இணைந்த 'கோர்ப்பிரேட்' அமைப்புகளாக மாறியுள்ளன. எனவேதான் அவை யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களைத் தோற்கடிக்கும் எந்தவொரு வேலைத் திட்டத்தினையும் வழங்குவதற்கு மாறாக யூ. என். பி. அரசாங்கத்தின் நஷ்டஈட்டு அட்டவணைகளைத் தயாரிப்பதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டுள்ளன. காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை தொழிற்சங்கம் இதிலிருந்து மாறுபட்டதல்ல.''

அரசாங்கத் துறை பக்டரிகளை மூடுதல், தனியார்மயமாக்கம், இலாபகரமான உழைப்பு, மூலப்பொருள் ஆகியவற்றைத் தேடி உலகமெல்லாம் அலையும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சுரண்டலுக்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவே இவை இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டும் இத்துண்டுப் பிரசுரம் முடிவுரையில் பின்வருமாறு கூறுகின்றது: ''...இப்படிப்பினைகளின் அடிப்படையில் துரோகத் தலைமைகளின் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்துக்குத் துணைபோகும் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த மூடுவிழாவை எதிர்த்து தொழில் காக்கும் போராட்டத்தினை பரந்த அளவில் முன்னெடுக்க வேண்டும். இதனை காங்கேசன்துறை தொடக்கம் காலி வரை விஸ்தரிக்க வேண்டும்... இப் பிரச்சினையைப் பரந்த அளவில் கலந்துரையாடுவதும் தொழிலாளர் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுவதும் அவசியம்.''

# தென் மாகாண சபைத் தேர்தல் முடிவின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்சி ஆதரவு அளித்தது. ஜே. ஆர். ஜயவர்தனவின் வட்டமேசை பேச்சுவார்த்தைகள், 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கை, இந்திய ஆக்கிரமிப்பு, 1990ல் பிரேமதாச மீண்டும் ஆரம்பித்த இனவாத யுத்தம், 1988-90 கிராமப்புற படுகொலைகளுக்கு அரசாங்கத்துடன் அணிதிரண்ட இக்கட்சி, ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கியுடன் உறவுகளை அபிவிருத்தி செய்துகொண்டுள்ளது. இப்போது நவசமசமாஜக் கட்சி தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களிடையே பொங்கிக் கொண்டுள்ள குமுறலை நசுக்கும் பொருட்டு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் புதியதொரு ஏஜன்சியை நிலைநாட்ட சந்திரிகா குமாரணதுங்கவுக்கு முண்டுகொடுக்கப் போகின்றது. கடந்த மார்ச் 25ம் திகதி வாசுதேவ நாணயக்காரவின் பேரில் பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்ட இக்கட்சி ''பலம் வாய்ந்த அரசாங்க எதிர்ப்புப் பிரச்சாரத்தினை தொடுக்க'' தம்மைச் சேர்த்துக் கொள்ளுமபடி கேட்டுக் கொண்டுள்ளது.

18. தென்மாகாண சபைத் தேர்தல் முடிவின் மூலம் இனவாதம் நிராகரிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்படுகின்றது என்ற ஒரு கதையளப்பினையும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்கள் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். பிறப்பிலேயே தமிழர் விரோதியான சி. ல. சு. க.வும் அதனையொத்த இனவாதியான மக்கள் ஐக்கிய முன்னணியினதும் ஆதரவைப் பெற்றுக் கொண்ட ஒரு வெற்றியின் மூலம் அது சுட்டிக்காட்டப்படுவது எப்படி என்பதை இத் துரோகிகள் விளக்குவதாய் இல்லை அவ்வாறே இக்கதையளப்பு மக்களுக்கு எதிராக நீட்டப்படும் இருபுறமும் கூரான கிறிஸ் கத்திக் குத்தாகும். 1970பதுகளின் கடைப்பகுதியில் இருந்து யூ. என். பி. க்கும் பின்னர் ஓரளவுக்கு ஜே. வி. பி. க்கும் ஆதரவு வழங்கியதன் மூலம் தென்மாகாண தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இனவாதத்தினை அரவணைத்துக் கொண்டிருந்தனர் என்ற முறைப்பாடும் கேட்கிறது. மறுபுறத்தில் சி. ல. சு. க.வின் கீழ் இனவாதத்தில் இருந்து தலையெடுப்பது தெரிகிறது என்ற பிரபந்தமும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இவையிரண்டும் பிற்போக்குப் பொய்களாகும். சமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ தலைவர்கள் 1964-77வரை நடாத்திய மக்கள் முன்னணிவாத கடைகெட்ட துரோகத்தினால் கதியற்றுப்போன மக்கள் யூ. என். பி, ஜே. வி. பி. மூலம் 1970பதுகளின் கடைப் பகுதியிலும் 1980பதுகளிலும் சலுகைகளை நாடியது அழிவுமிக்க ஏமாற்றமாகத் தோன்றின, சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் திரும்பவும் ஒரு தடவை ஏகாதிபத்தியச் சார்பு இனவாத சி. ல. சு. க. அரசியலின் ஆளுமையை அம்மக்கள் மீது திணித்ததை விட வேறொன்றும் இன்று இடம்பெறவில்லை. இந்தத் தீர்க்கமானதும் ஆனால் கசப்பானதுமான அரசியல் யதார்த்தத்தினை தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரதும் நலவான சகல பகுதியினரும் புரிந்து கொள்வது திண்ணம். இனவாதத்தினை நிராகரிப்பது தென் உறுகுணையில் பிராந்திய வாதத்தினை அரவணைத்துக் கொள்வதால் இடம் பெற்றுவிடாததோடு, அதைவிட ஆழமான பிராந்தியவாதப் பாதாளத்துக்கான பாதைகள் வெட்டப்பட்டுள்ளதை அது சுட்டிக்காட்டுகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்ததற்கு அது வெறுமனே ஏகாதிபத்தியத் திட்டத்தினை இந்திய முதலாளித்துவ அரசாங்கத்தின் ஊடாக 1987ல் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் சுமத்த முயன்றது மட்டும் காரணம் அல்ல. பூகோளமயமாக்கப்பட்ட முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் அவசியங்களுக்குப் பொருத்தமான முறையில் பிராந்தியவாதத்தினைத் தூண்டி இந்நாட்டுத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே மேலும் மேலும் மோதுதல்களை சுடர்விட்டு எரியச் செய்யவும், பிற்போக்கு இராணுவ-பாசிச சர்வாதிகாரத்துக்கு வழிசமைக்கவும் மாகாண சபை பிரச்சாரம் உதவுகின்றது என்பதைப் புரிந்துகொண்டு நாம் அத்தீர்மானத்தினை எடுத்தோம். அது சமசமாஜ-கம்யூனிச—நவசமசமாஜ-இ தொ. கா. தலைவர்கள் கூறிக்கொண்டபடி அதிகாரப் பரவலாக்கம் அல்ல. இப் பொய்யுக்கு முரணாக அது ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஆளுமைக்கு உள்ளாக்கி நாட்டைத் துண்டாடும் திட்டத்தின் ஒரு பாகமாகும் என்பது இப்போது நன்கு தெளிவாகியுள்ளது. ஒவ்வொரு பிராந்தியத்தினதும் முதலாளிகளை ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் பிடிக்குள் சுருண்டுபோகச் செய்யும் இந்தத் திட்டத்தின் முன்னணி பேரிகைக்காரர்களாக நின்றுவருவோர் நவசமசமாஜ கட்சித் தலைவர்களே. 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்கியதோடு நின்றுவிடாமல் அதன் தர்க்கரீதியான பிரிவினைவாத திட்டத்தினை முன்னெடுத்த அவர்கள், பிராந்தியவாதத்தினுள் சாதி கோத்திரங்களை தூண்டுவதிலும் ஈடுபட்டமை தென்மாகாண சபைத் தேர்தலில் மேலும் அம்பலமாகியது. நாம் இங்கு தொடர்ந்து அம்பலமாகுதல் என்ற பதத்தினை பயன்படுத்தக் காரணம், ந. ச. ச. ச. தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தமது மலைநாட்டு நிலமானித்துவ குடும்ப உரித்துக்களை-கொத்தலாவல, பசநாயக்க நிலாமை உரிமைகள்—கூறி வாக்குக் கறக்கும் முயற்சிகளில் இதற்கு முன்னரும் ஈடுபட்டவர் என்பதை அவரால் வெளியிடப்பட்டுள்ள எழுத்து மூலமான சாட்சிகள் நிரூபிப்பதேயாகும். பூமிபுத்திரா கட்சி அல்லது கோத்திர புத்திரா கட்சி இடையே வேறுபாட்டை இனங்காண முடியாத அளவுக்கு இது நுண்ணியது.

இந்தப் பிற்போக்கு பிரிவினைக்கார, ஒடுக்குமுறைப் பொறிக்கிடங்கில் இருந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் விடுபடுவது, பிராந்தியவாதத்துக்கு எதிராக தேசியவாதத்தினை கட்டியெழுப்புவதன் மூலம் அன்றி புறநிலையான உலகப் பொருளாதார, அரசியல் நிலைமையினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் காலூன்றுவதன் மூலமாகும். அது உலக சோசலிசப் புரட்சிக்கான முன்நோக்கின் அடிப்படையாகும்.

(14-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தென் மாகாண சபைத் தேர்தல் முடிவின்...

19. நெருக்கடிக்குள்ளாகியுள்ள யூ. என். பி. அரசாங்கத்தைப் போலவே ஏகாதிபத்தியத்தின் ஏஜன்சி என்ற முறையில் தம்மை ஆட்சியில் இருத்தும்படி கோரிவரும் சி. ல. சு. க. அதற்குத் தயாராகி வருகின்றது என்பதை தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் புரிந்துகொள்ள வேண்டும். பொதுஜன குமுறல் பற்றி அறிந்த இந்த முதலாளித்துவக் கட்சிகள் அரைச் சிறு [illegible] ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சுரண்டலை உறுதி செய்யும் பொருட்டு தத்தது புறத்தில் தயாராகி வருகின்றன. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் போலவே அரைக் காலனித்துவ நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்திகளதும் செல்வத்தைப் பெருக்கும் நிலைமைகளதும் கீழ் மேலும் மேலும் காட்டுமிராண்டி நிலைமைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். வேலை நீக்கங்கள், இளைஞர் வேலையின்மை, சமூக சேவைகள் ஒழிப்பு, வறுமை, பட்டினி என்பன ஏகாதிபத்தியத்தினால் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இதற்கு முகம் கொடுக்கக் கூடிய தேசியவாத விதிமுறைகள் கிடையாது. தேசியவாத சீர்திருத்தக் கூப்பாடுகளில் ஈடுபட்டிருந்த முதலாளித்துவ சி. ல. சு. க வும் அதன் பின்னால் வயிறளந்த சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, தொழிற்சங்கங்களும் இப்போது அந்த விதிமுறை வங்குரோத்தானதைத் தொடர்ந்து ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஏஜன்சிகளாக மாறியுள்ளன. இந்த விதிமுறை கடந்த காலத்தில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு மாட்டப்பட்ட விலங்காகியது. இன்று தொழிலாளர் வர்க்கத்தினைப் போலவே ஒடுக்கப்படும் மக்களும் ஒரே ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும், வங்கிகளதும் காட்டுமிராண்டிச் சுரண்டலுக்கும், அடக்குமுறைக்கும், பிளவுகளுக்கும், யுத்தத்துக்கும் முகம் கொடுத்துள்ளனர். அரைக் காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவக் கட்சிகளும் முதலாளித்துவ முகாம்களுள் நுழைந்து கொண்ட பழைய தொழிலாளர் கட்சிகளும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனி போன்ற முதலாளித்துவ அமைப்புகளின் கோபரேட்வாத அமைப்புகளாக மாறியுள்ள தொழிற்சங்கங்களும் அந்த அழிவினை திணிக்கும் ஏஜன்சியாக மாறியுள்ளன. முதலாளித்துவ வர்க்கம், ஏகாதிபத்தியத்தின் ஏஜன்சி என்ற முறையில் தமது உயர் வாழ்க்கையை காக்கும் பொருட்டு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஆளுமையின் கீழ் பூகோளமயமாக்கத்தில் இணைந்து கொள்வதன் அவசியம் பற்றி கூப்பாடு போடுகிறது. யூ. என். பி. அரசாங்கம் கி. பி. 2000 ஆண்டில் புதிய கைத்தொழில் நாடாக மாறுவது பற்றிப் பேசிக் கொள்கின்றது. இதன்படி ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் முழு சக்தியையும் கட்டவிழ்த்து விடுவது பற்றி பேசிக் கொள்கின்றது. சந்திரிகா குமாரணதுங்க 'உறவினர் உபசரணை முதலாளித்துவத்தை' அழித்து பரிசுத்தமான 'சந்தைப் பொருளாதாரத்தை' உருவாக்குவது பற்றிப் பேசுவதும் அதைப் பற்றியே.

20. தொழிலாளர் வர்க்கத்தினதும் அதன் நட்புச் சக்திகளான விவசாயிகள் உட்பட்ட ஒடுக்கப்படுவோரினதும் ஒடுக்கப்படும் இளைஞர்களதும் வேலைத்திட்டம் என்னவாக வேண்டும்? சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தொழிற்சங்கங்களதும் இளைஞர்களிடையே இடம்பிடித்துக் கொள்ள முயலும் ஜே. வி. பி., ஜனதா மித்துரோ போன்ற கும்பல்கள் கூறுவது போல் முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் வயிறளந்து ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் கொடிய சுரண்டலுக்கும் அழிவுக்கும் பலியாவதா? இச் சகல கட்சிகளும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் முன்னும் பின்னும் கத்தியால் குத்துவதன் மூலம் ஏகாதிபத்தியத் தேவைகளுக்குக் கீழ்ப்படுத்தச் செயல்படும் பொலிஸ் அமைப்புகளாகும்.

தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சுயாதீனமான விதிமுறை உண்டு. அது அனைத்துலகவாத தொழிலாளர் வர்க்கத்தின் விதிமுறையாகும். அது தொழிலாளர் வர்க்கத்தினை முதலாளி வர்க்கத்தில் இருந்தும் அதன் சகல கயிற்று இழைகளில் இருந்தும் சுயாதீனமான முறையில் அணிதிரட்டுவதன் மூலம், ஒடுக்கப்படுவோரின் தலைமையாக நின்று போராட வேண்டிய விதிமுறையாகும். ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஆளுமையின் கீழ் 'பூகோளமயமாகும்' முதலாளி வர்க்கத்தினதும் அதன் ஏஜன்டுகளதும் வேலைத் திட்டங்களுக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் வேலைத்திட்டம், 'தேசிய பொருளாதாரத்தை நிர்மாணிப்பது' அல்லது 'தேசிய சமூகத்தை சீர்திருத்துவது' போன்ற பிற்போக்குப் பாதையில் பின்னடித்துச் செல்வது அல்ல. அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தினை உறுதி செய்வதன் மூலம் ஏகாதிபத்தியத்தினையும் அதன் ஏஜன்சிகளையும் தூக்கி வீசி, அனைத்துலக சோசலிசப் பொருளாதாரத்தினை ஸ்தாபிதம் செய்வதை நோக்கி முன் செல்வதாகும்.

21. இந்த அடிப்படையில் இலங்கை தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியத்தினையும் அதன் ஏஜன்சிகளையும் தூக்கி வீசும் பொருட்டு இந்தியா உள்ளடங்கலான இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்திலும் ஆசியாக் கண்டத்திலும் அனைத்து நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்த ஐக்கியத்தினை கட்டியெழுப்பிக் கொண்டு, இந்தியத் துணைக் கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தினை நிறுவும் முன்நோக்கிற்குப் போராட வேண்டும். அதன் ஒரு பாகமாக இலங்கையில் முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, இலங்கை—தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை உருவாக்கப் போராட வேண்டும்.

22 தமிழ், சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களையும் பிளவுபடுத்த யூ. என். பி, சி. ல. சு. க. உட்பட்ட முதலாளித்துவ வர்க்கம் நடாத்தி வரும் இனவாத யுத்தத்தினையும் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளிகளின் பிரிவினைவாதத்தினையும் ஒழித்துக்கட்ட வேண்டும். தமிழ் ஈழம் இலங்கை மக்களின் ஒன்றிணைவு. ஜனநாயக சமத்துவத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு எனப்படுவதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் அழிப்புக்களையும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் உழைப்பு அடிமை முகாம்களாக சுதந்திர வர்த்தக வலயங்களை நிறுவுவதையும் தொடர்ந்து வீழ்ச்சியடையும் சம்பளத்துக்கு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு விற்பதையும் ஒழித்துக்கட்ட வேண்டும். சமூக நலன்புரிச் சேவை, இலவசக் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றைப் பேண வேண்டும். இளைஞர்களின் வேலையின்மையைத் தீர்ப்பதற்கு அத்திவாரமிட வேண்டும். மகளிருக்கு எதிரான சமூக வேறுபாடுகளையும், ஒடுக்குமுறைகளையும் நீக்க வேண்டும். சிறுவர் உழைப்புச் சுரண்டலை நிறுத்த வேண்டும். ஏழை விவசாயிகளின் மேல் திணிக்கப்பட்டுள்ள துன்பகரமான அழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏழை மீனவர் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் பிரச்சினையும் அவ்வாறே உக்கிரம் கண்டுள்ளது. இது தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்பதன் மூலம் தீர்த்து வைக்க வேண்டிய பணியின் ஒரு பாகமாகும். இப் பிரச்சினையைத் தீர்ப்பது முதலாளித்துவத்தின் அடிப்படையிலோ அல்லது தேசியவாதத்தின் அடிப்படையிலோ சாத்தியமானது அல்ல. இச் சகல பிரச்சினைகளும் முக்கியமாக முதலாளித்துவத்தினதும் தேசியவாதத்தினதும் பெறுபேறாக ஏற்பட்டவையாகும். பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் முதலாளித்துவத்தை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்தினை உறுதி செய்வதன் மூலம் மட்டுமே இவற்றைத் தீர்ப்பதற்கு அத்திவாரமிட முடியும். இப் பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பது அனைத்துலக சோசலிசப் புரட்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

23. தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை வென்றெடுப்பதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அரசியல் போராட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்றவும், யுத்தத்தினை நிறுத்தவும் தொழில் அழிவு, சம்பள வெட்டு, வாழ்க்கைத்தரம்_ சேவை நிலைமைகள் அழிப்பு, வேலை துரிதப்படுத்தலுக்கு எதிராகவும் வேலையின்மை, இலவசக் கல்வி, இலவச சௌக்கிய சேவை ஒழிப்புக்கு எதிராகவும், விவசாயிகளைக் காக்கவும், கிராமப்புற ஒடுக்குமுறைகளை நிறுத்தவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், மகளிர் ஒடுக்கு முறையை நிறுத்தவும் தொழிலாளர் வர்க்கம் அரசியல் ரீதியில் தலையிட வேண்டும். தொழிற்சங்கங்கள் மூலம் தொழிலாளர்களை ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு அடிமைப்படுத்துவதற்கு எதிராகவும் தொழிலாளர்கள் தமது போராட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கு போடும் கால்கட்டுக்களை உடைத்துக் கொண்டு ஒடுக்கப்படுவோர் இளைஞர்களுடன் சேர்ந்து தமது அரசியல் வேலைத் திட்டத்துக்காகப் போராட நடவடிக்கைக் குழுக்கள் அமைக்க வேண்டும்.

24. தென்மாகாண சபைத் தேர்தல் முதலாளித்துவத்தின் உக்கிரம் கண்டுவரும் நெருக்கடியையும் சமூக வெடிப்புக்கான நிலைமைகள் அபிவிருத்தி காண்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் அடிப்படைப் பிரச்சினை தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களிடையே பரந்துபட்டுள்ள குழப்பமாகும். யூ. என். பி. தாக்குதல்களின் பேரிலான பொதுமக்களின் எதிர்ப்பின் பெறுபேறுகளை சூறையாடி, மக்களின் கண்களில் மண் தூவுவதன் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் பெரும் வங்கிகளதும் வேலைத்திட்டங்களை நடைமுறைக்கிடும் முதலாளித்துவ சி. ல. சு. க. ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. தேர்தல் பெறுபேறுகளை முதலாளி வர்க்கமும், முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும், சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. அமைப்புக்களும் பொதுமக்களை மேலும் மேலும் குழப்பியடிக்கப் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

16-ம் பக்கம் பார்க்க)

அவுஸ்திரேலிய . . . .

நிலையத்துக்கு கொணரப்பட்ட 30 நிமிடங்களின் பின்னர் அவர் இறந்தார்'' என்றார்.

இந்த விசாரணை இடம் பெறுவதற்கு 10 நாட்களுக்கு முன்னர் உளவாழிகளும் பொலிஸ் படப்பிடிப்பாளர்களும் இந்த விசாரணைக் கமிட்டியின் ஆறு அங்கத்தவர்களை கடத்திச் செல்ல முயன்றனர். இதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் மாஜி லிபரல் கட்சி தலைவர் ஜோன் ஷெல்டன் தேசியக் கட்சித் தலைவரின் ஆதரவுடன் இந்த விசாரணையை நிறுத்தும்படி தொழிற்கட்சி அரசாங்கத்தைக் கோரினார். அத்தோடு எஸ். எல். எல். அங்கத்தவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும்படியும் கோரினார் ஆதிக்குடியைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத் தலைவர்களும் இந்த விசாரணையில் ஆதிக்குடி அங்கத்தவர்கள் பங்கு பற்றுவதையும் சாட்சியமளிப்பதையும் தடுக்கும் ஆத்திரமூட்டல்களில் ஈடுபட்டனர்.

சோசலிச லேபர் லீக்கின் இந்த தொழிலாளர் விசாரணை இந்தச் சகல சக்திகளினதும் இனவாத, பிற்போக்கு அரசியல்களுக்கு பலத்த தாக்குதல் தொடுத்தது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஒரு அரச கொலை பற்றிய உண்மை, தொழிலாளர் வர்க்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட ஒரு சுயாதீன விசாரணை மூலம் அம்பலப்படுத்தப்பட்டது இதுவே முதற்தடவை.

புரட்சிக் . . . .

ட்டத்தினை தெளிவுபடுத்தினார். அனைத்துலகவாத சோசலிச முன்நோக்குக்கும் வேலைத் திட்டத்துக்குமாக கடந்த 25 ஆண்டுகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னெடுத்த போராட்டத்தினை சுட்டிக்காட்டிய ரத்னாயக்க தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்பும் பொருட்டு பு. க. க. நடாத்திவரும் அப்போராட்டத்தில் இணையுமாறு கூட்டத்திற்கு வருகை தந்த தொழிலாளர் இளைஞர்களை வேண்டினார்.

www.padippakam.com



# இத்தாலியில் வலதுசாரிகளின் வெற்றி

# தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு எச்சரிக்கை

இத்தாலியில் மார்ச்சில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் வலதுசாரிகள் அமோக வெற்றியீட்டியமை, ஐரோப்பாவிலும் அத்தோடு உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களை நிலைமையை நிதானத்துடன் ஆய்வு செய்யும்படி வேண்டியுள்ளது. பத்திரிகைத் துறை கோடீஸ்வரனான சில்வியோ பேர்ளுஸ்கோனி தலைமையிலான வலதுசாரி கட்சிகளின் 'சுதந்திர முன்னணி' எனப்படுவது பிரமாண்டமான முரண்பாடுகளைக் கொண்டது. இது இத்தாலிய முதலாளி வர்க்கத்தின் உள்ளேயான பிளவுகளையும் நெருக்கடியையும் பிரதிபலிக்கின்றது.

'நொதேர்ண் லீக்' மத்திய தர வர்க்கத்தின் வரிச் சுமைகளில் இருந்து விடுபடுவதற்கு பொருளாதார ரீதியில் பெரிதும் பின்தங்கிய தென் இத்தாலியை வட இத்தாலியில் இருந்து பிரிக்க வேண்டும் என கோரி வருகின்றது. நஷனல் அலயன்சினதும், இத்தாலிய சமூக இயக்கத்தினதும் (M S I) கலப்பற்ற பாசிஸ்டுகள் தெற்கில் செல்வாக்குக் கொண்டுள்ளதோடு தனியார்மயமாக்கம், சமஷ்டி இரண்டையும் எதிர்க்கின்றனர். 'போர்ஷா இத்தாலியா' என்பது பேர்ளுஸ்கோனியின் வெகுஜனத் தொடர்புச் சாதன சாம்ராச்சியத்தையும் உதைபந்தாட்ட ரசிகர் களரிகளையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. இந்தச் சகல சக்திகளையும் தனது இறக்கைக்குள் வைத்திருப்பதன் மூலம் பேர்ளுஸ்கோனி ஒரு பொனபாட் பாத்திரத்தினை வகிக்க உள்ளார்.

புதிய அரசாங்கம் என்ன வடிவம் எடுக்கும் அல்லது அது நின்று பிடிக்குமா என்பது தெளிவாக இல்லை. இருப்பினும் இந்த இத்தாலிய வாக்களிப்பு ஒரு வரலாற்று மைற்கல்லினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. 1930பதுகளின் பின்னர் ஒரு பாசிசக் கட்சி ஒரு தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளும்படி அழைக்சப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இருந்து வந்த அரசியல் தடைகள் வீழ்ச்சிகண்டுள்ளன. ரோமில் பிளாசா சதுக்கத்தில் நடைபெற்ற தேசிய முன்னணி எம். எஸ். ஐ. வெற்றி விழாவில் பாசிச 'சல்லூட்டு'க்கள் அடிக்கப்பட்டதோடு பாசிச 'டூஸ் டூஸ்' கோசங்களும் எழுப்பப்பட்டன. தேர்தலின் பின்னர் பேசிய இம் முன்னணியின் தலைவரான கியன் பிராங்கோபினி, முசோலினி 'நாட்டின் மாபெரும் தலைவர்' எனப் பிரகடனம் செய்தார். புதிய எம். எஸ். ஐ. பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்களுள் முசோலினியின் பேத்தியும் ஒருவர். 1920, 1930பதுகளில் பாசிசம் எழுச்சி கண்டதற்கும் இன்றைய மறு எழுச்சிக்கும் இடையே ஒற்றுமைகளும் அவ்வாறே வேற்றுமைகளும் உள்ளன. எம். எஸ். ஐ. இன்னமும் மக்களை அணிதிரட்டவோ அல்லது முசோலினியின் கறுப்புச் சட்டை அதிரடிப் படைகளுடன் ஒப்பிடக் கூடிய படைகளைக் கொண்டோ இல்லை. ஆனால் முசோலினி தனது சர்வாதிகாரத்தை அடையப் பல வருடங்கள் எடுத்ததோடு இத்தாலியில் இன்னமும் ஒரு பாராளுமன்றம் இருந்து கொண்டிருந்த நிலையிலேயே அதிகாரத்துக்கு வந்தான்.

பாசிசம் புத்துயிர் பெறுவதன் புறநிலை முக்கியத்துவத்தினைப் புறக்கணித்துவிட முடியாது. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இது செய்தது போல்—முதலாளித்துவ ஜனநாயகத்தின் அமைப்புக்களின் வீழ்ச்சியில் இருந்து இது எழுந்துள்ளது. மேலும் இதுவோர் இத்தாலியத் தோற்றப்பாடு அன்று; ஐரோப்பா பூராவும் பாசிசப் போக்குகளின் புத்துயிர்ப்பின் ஒரு பாகமாகும். இத்தாலியில் கிடைத்த வாக்குக்கள் இத்தாலிய, அனைத்துலக முதலாளி வர்க்கத்தின் பிழையற்ற அங்கீகாரத்தின் வாக்குக்களாகும். வலதுசாரிகளின் அமோக வெற்றியின் பண்பு தெளிவாகியதும் மிலான் பங்குமுதல் சந்தையில் பங்கு விலைகள் அதிகரித்தன. லீரா (நாணயம்) உறுதி கண்டது. தொழில் அதிபர்கள் சம்மேளனம் இந்த வலதுசாரி வெற்றியை வரவேற்றதோடு இதனை ''நாட்டினை நவீனமயமாக்கும் திசையில் ஒரு முக்கிய காலடி'' எனப் பிரகடனம் செய்தது.

வாக்களிப்பின் பின்னர் அமெரிக்க இராஜாங்க செயலாளர் வாரன் கிறிஸ்தோபர் வழங்கிய ஒரு பேட்டியில் ''எந்தவொரு அரசாங்கம் அமைக்கப்படும் நிலையிலும் அதனுடன் அமெரிக்கா சேர்ந்து செயற்படுவது நிச்சயம்'' எனக் குறிப்பிட்டார். ஒரு பெரும் ஐரோப்பிய அரசாங்கத்தில் பாசிஸ்டுகள் பங்குபற்றுவதை அங்கீகரிக்கும் இதே தொனி ஏனைய ஏகாதிபத்திய சக்திகளின் அறிக்கைகளிலும் வெளிப்பட்டது. இத்தாலிய முதலாளி வர்க்கம், பாசிசத்தினை புனருத்தாரணம் செய்வது முழு அரசியல், பொருளாதார அமைப்பினதும் நீண்டகால நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரு அவசிய நடவடிக்கையாகக் காண்கின்றது. ஊழல்களும், அவதூறுகளும் முன்னைய ஆளும் கட்சிகளை கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, சமூக ஜனநாயகக் கட்சி— அடித்துச் சென்றுள்ளது. இவை இத்தாலியின் பிரமாண்டமான சமூகநல அரசினையும் பெரும் அரச கைத்தொழில்துறையையும் கொண்டிருந்த அரசியல் அடிப்படையை தகர்த்து எறியப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஆளும் வர்க்கம் இந்தப் பணியைப் பூர்த்தி செய்யும் சக்திகளை முன்னணிக்குச் கொணர்ந்து கொண்டுள்ளது.

பேர்ளுஸ்கோனியின் அரசாங்கம் பெரிதும் ஸ்திரமற்ற ஒன்றாக விளங்கும். ஆனால் இந்த ஸ்திரமற்ற நிலையில் இருந்தும் பாராளுமன்ற அமைப்பின் தொடர்ச்சியான தகர்வில் இருந்தும் தோன்றுவது என்ன? இன்றைய முதலாளித்துவ அரசினை தூக்கிப் பிடிக்க ஸ்டாலினிஸ்டுகளும் சீர்திருத்தவாதிகளும் என்னதான் செய்தாலும் முதலாளித்துவத்தின் சீரழிவில் இருந்து பாசிசப் போக்குக்கள் தொடர்ந்து வளர்ச்சி காணும். இத்தாலியத் தேர்தல் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களுக்கான ஒரு பெரும் எச்சரிக்கையாக விளங்கும். தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான தனது சுயாதீனமான அரசியல் அணிதிரள்வினை முன்வைப்பதற்கான வழியினை காணாது போகின் அது மீண்டும் ஒரு தடவை ஒரு பாசிசப் பேரழிவுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

தொழிலாளர் வர்க்கம் அதனது குறைந்தபட்ச நலன்களில் தன்னும் அக்கறையில்லாத கட்சிகளதும், அதிகாரத்துவங்களதும் ஆளுமையின் கீழ் தொடர்ந்தும் இருந்து வருவது ஒரு பேராபத்தாகும். தொழிலாள வர்க்கத்தின் ஒரு புதிய சுயாதீனமானதும் புரட்சிகரமானதுமான இயக்கத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே இந்த ஆபத்தை எதிர்கொள்ள முடியும். அது சோசலிச அனைத்துலகவாத முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

அவுஸ்திரேலியா :

## டானியல் யோக்கின் கொலை பற்றிய தொழிலாளர் விசாரணை:

## பொலிசாரே யோக்கை கொலை செய்தனர் என்பது நிரூபணம்

அவுஸ்திரேலிய நகரமான பிரிஸ்பேனில் பதினெட்டு வயது ஆதிக்குடி இளைஞனான டானியல் யோக் பொலிசாரால் கொல்லப்பட்டதை ஆராயவென நடாத்தப்பட்ட தொழிலாளர் விசாரணை உண்மையை அம்பலமாக்கியுள்ளது.



டானியல் யோக்

மார்ச் 19ம் திகதி நடைபெற்ற இந்த விசாரணை, வெகுஜனத் தொடர்பு சாதனங்களதும் தொழிற்கட்சி அரசாங்கத்தினதும் பொலிசாரினதும் குற்றவியல் நீதி ஆணைக்குழுவினதும் (C J.C) பொய்களையும் மூடிமறைப்புக்களையும் அம்பலமாக்கியதோடு, முடிவாகப் பொலிசாரே யோக்கினை கொலை செய்தனர் என்பதை நிலைநாட்டியது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலிய கிளையான சோசலிச லேபர் லீக்கினாலும் (S. L. L.) தொழிலாளர் விசாரணைக் கமிட்டியினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விசாரணை, ஏழு மணித்தியாலங்களுக்கு சாட்சிகளை விசாரணை செய்தது. பகிரங்கமாகச் சாட்சியமளிப்பின் தமது உயிருக்குக் கெடுதி விளையும் என அஞ்சியோரிடம் இருந்து இக் கமிட்டி பல அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டது.

எஸ். எல். எல். மத்திய குழுவினதும் அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியினதும் அங்கத்தவரான ரெறி குக்கின் தலைமையில் இடம்பெற்ற இந்த விசாரணைக் கமிட்டியில் அறுவர் இடம் பெற்றனர். இரண்டு ஆதிகுடி தொழிலாளர்களும், ஒரு வெளிநாட்டுத் தொழிலாளியும் இக் கமிட்டியில் இடம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையைக் காண வந்திருந்தோர் யோக்கின் மரணம், தினசரி பொலிஸ் அக்கிரமங்கள், ஆதிக்குடி தொழிலாளர்களும் இளைஞர்களும் முகம் கொடுக்கும் பயங்கரமான சமூக நிலைமைகள் பற்றி வழங்கப்பட்ட கண்கண்ட சாட்சியங்களைக் கேட்டு அதிர்ந்து போனதைக் காண முடிந்தது.

தொழிலாளர் விசாரணைக்கு முற்றுப்புள்ளி வைக்க குயின்ஸ்லன்ட் மாநில அரசாங்கமும் பொலிசாரின் உயர் மட்டத்தினரும் எடுத்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் விசாரணை நடைபெற்றது.

பிரித்தானியர் 1788ல் அவுஸ்திரேலியாவில் குடியேற்றங்களை ஆரம்பித்த வேளையில் இருந்த ஆதிவாசிகளின் பரம்பரையைச் சேர்ந்த வேலையற்ற இளைஞரே டானியல் யோக். கடந்த நவம்பர் 9ம் திகதி கொலை செய்யப்பட்ட இவரின் கொலை தொடர்பான தகவல்களை முன்வைத்து வேர்க்கர்ஸ் நியூஸ் பத்திரிகையாளரான பீட்டர் சைமன்ட்ஸ் சாட்சியமளித்தார். தமது இரண்டு மாத கால ஆய்வினை முன்வைத்து சாட்சியமளித்த சைமன்ட்ஸ் கூறியதாவது: ''... பொலிஸ் டானியல் யோக்கினைத் துரத்தி நிலத்தில் மடக்கிப் பிடித்ததோடு அவரை மூர்ச்சை இழக்கச் செய்தது. யோக் ஒன்றில் தலைக்கு தொடுக்கப்பட்ட அடியினால் வீழ்ந்தார்; அல்லது பொலிஸ் தாக்குதலின் பெறுபேறாக மயங்கி வீழ்ந்தார். யோக்கின் கரங்கள் பின்புறமாக கைவிலங்கிடப்பட்டது. இதனால் அவர் இலகுவான முறையில் சுவாசிக்க முடியவில்லை. இதன் விளைவாக பிரணவாயு இல்லாமல் அவர் மரணமானார், யோக்கின் நண்பர்கள் அவருக்கு உதவ எடுத்த முயற்சிகளை பொலிசார் தடுத்தனர். அத்தோடு வைத்திய உதவிக்கான கோரிக்கையையும் புறக்கணித்தனர். பொலிசார் யோக்கை சுயநனவில்லாமல் இழுத்தனர். ஒரு நெல் வானில் அவரை முகம் குப்புறக் கிடக்கப் போட்டனர். பிரிஸ்பேண் நகர பொலிஸ்

14 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பொலநறுவை மாவட்டத்தில் 13 விவசாயிகள் தற்கொலை

கடந்த பெரும் போகத்தில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது போனதால் விவசாயக் கடனைச் செலுத்தும் பிரச்சினைக்கு முகம் கொடுத்த பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 13 விவசாயிகள் கடந்த 3 மாதங்களுள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தச் சோகமயமான சம்பவம் ஏழை விவசாயிகளினதும் தொழிலாளர் வர்க்கத்தினதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டுள்ளதை அறிந்த யூ. என். பி. அரசாங்கமும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இத் தற்கொலைச் சம்பவங்கள் கடன் பிரச்சினையின் தாக்கத்தினால் ஏற்படவில்லை எனக் காட்டும் கையாலாகாத்தனமான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்த தற்கொலை செய்த விவசாயிகளின் மரணத்தின் உண்மை நிலையை மூடி மறைப்பதில் ஈடுபட்ட யூ. என். பி. விவசாய அமைச்சர் ஆர். எம். தர்மதாச "விவசாயிகளுக்கு இந்த கடன்களை செலுத்தப் போதுமான வருமான மார்க்கம் உண்டு." (திவயின ஏப்ரல் 12) என்றுள்ளார் இந்தச் சேறடிப்பை இன்னொரு படி முன்னெடுத்த வடமத்திய மாகாணசபை முதலமைச்சர் மஹிந்த சோம "பொலநறுவை விவசாயிகளுக்கு பிரச்சினை கிடையாது. அவர்களுக்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடத் தெரியாது" என்றுள்ளார். ஆனால் வங்கியினால் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிவித்தலில் "விவசாயக் கடனை தீர்க்க மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு அனுப்பும் ஆரம்ப நடவடிக்கையாக இணக்கச் சபைக்கு அனுப்புவது ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது 30/4/94க்கு முன்னர் மேற்காட்டிய கடனையும் வட்டியையும் செலுத்தி முடிக்காது விடின் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இணக்கச் சபைக்கு அனுப்பப்படும் என்பதை அறிவிக்கின்றேன்."

இந்த மரணங்கள் ஏகாதிபத்திய வங்கியாளர்களதும், ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் பாய்ச்சலினால் இடம்பெற்றுள்ளன என்ற உண்மையை மூடிமறைப்பதில் இறங்கிய முதலாளித்துவ பத்திரிகைகளில் ஒரு பிரிவினர் இவை 'பெருமழையினால்' ஏற்பட்ட அழிவின் விளைவு எனக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. பொலநறுவைச் சம்பவங்கள் விவசாயிகளின் கழுத்தை நெரித்துக் கொண்டுள்ள கடன்பளு வறுமையின் ஆதாளபாதாளத்தைக் காட்டுகின்றது. கிருமிநாசினி, பசளை, விவசாய உபகரணங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் வங்கிகளதும் பிடியில் இருந்து ஏழை விவசாயிகளை விடுதலை செய்யும் சோசலிச வேலைத்திட்டத்திற்கான போராட்டத்தின் அவசியத்தினை இது வலியுறுத்துகின்றது.

## தென் ஆபிரிக்க . . .

காலமாக நிறவெறி ஆட்சியாளர்களுக்கும் ஆ. தே. கா. தலைவர்களுக்கும் இடையே நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளின் ஒரு பெறுபேறாகும். 1980பதுகளின் நடுப்பகுதியில் தென் ஆபிரிக்க ஆளும் வர்க்கத்தின் செல்வாக்குள்ள மூலகங்கள், முதலாளித்துவ நலன்கள் பழைய நிறவெறி உருவில் தொடர்ந்தும் முன்வைக்கப்பட முடியாது என்ற முடிவுக்கு வந்தன. இந்த அமைப்பு, 'பெரும்பான்மை கறுப்பு இனத்தவரின் வாக்குரிமையையும் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் பறிமுதல் செய்ததோடு அதனைப் பட்டினிக் கூலிக்கு சுரண்டியது. இதன் மூலம் தென் ஆபிரிக்க முதலாளி வர்க்கம் உயர்மட்ட இலாபத்தை ஈட்டவும் உலக முதலாளித்துவத்தின் விவகாரங்களில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை நிலைநாட்டவும் முடிந்தது.

ஆனால் 1984 — 86களில் தென் ஆபிரிக்க ஆளும வர்க்கம் கறுப்பு இனத்தவரின் நகரங்களில் ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்கு முகம் கொடுத்தது. ஒவ்வொரு மாதமும் பிரமாண்டமான தொழிலாளர்களும் இளைஞர்களும நிறவெறி ஆட்சியாளர்களின் இராணுவத்துடன் போரிட்டனர். அத்தோடு தென் ஆபிரிக்க முதலாளித்துவமும் பாரதூரமான பின்னடைவுக்கு உள்ளானதோடு அது இன்னமும் தொடர்கின்றது. தங்கச் சந்தையில் ஏற்பட்ட ஒரு குறுகிய காலச் செழிப்பினைத் தவிர தென் ஆபிரிக்கப் பொருளாதாரம் கடந்த இரண்டு தசாப்தங்களாக ஒரு தேக்க நிலையை அடைந்தது. கடந்த 12 வருடங்களில் 11 ஆண்டுகளின் தலா வருமானம் வீழ்ச்சி கண்டது. 1980பதுகளில் அடிப்படைக் கைத்தொழில்களில் பெருமளவிலான வேலை நீக்கங்கள் இடம்பெற்றதோடு தென்னாபிரிக்க நதிப்பகுதி மேட்டு நிலங்களின் பெறுபதி 50 வீதத்தினால் தேய்ந்து போனதோடு ஆண்டுதோறும் இரட்டைப் புள்ளிப் பணவீக்கம் பதிவாகிற்று.

### பேச்சுவார்த்தை

நெல்சன் மண்டேலா இன்னமும் சிறையில் இருந்து வரும் நிலையிலும் தென் ஆபிரிக்க தங்கச் சுரங்கப் பிரமுகர் கவின் ரெலி தலைமையிலான தென் ஆபிரிக்க முதலாளிகள் தூதுக் குழு ஒன்று ஆ. தே. கா. தலைவர் நெல்சன் மண்டேலாவுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க 1985ல் லுசாகா சென்றது. 1986ல் நிறவெறி ஆட்சியாளர்களுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியதோடு 27 வருடகால சிறைவாசத்தின் பின்னர் 1990ல் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பொதுத் தேர்தலுக்கு இடமளித்தது.

இந்தப் போக்கினில் ஸ்டாலினிசம் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தது. முதலாளித்துவத்துக்கு எதுவிதமான கெடுதியும் ஏற்படா விதத்தில் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண்பதில் கொர்பச்சேவ் அதிகாரத்துவம் ஒரு தரகர் வேலையில் ஈடுபட்டது. ஒரு 'தேசிய ஐக்கிய' அரசாங்கத்தில் தேசியக் கட்சியுடன் இணைவதில் தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பலத்த ஆதரவாளராக விளங்கியது. இக்கொள்கை தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தினை முதலாளித்துவத் தேசியவாததுக்கு அடிபணியப்படுத்தும் ஸ்டாலினிசத்தின் நீண்டகால கொள்கையில் இருந்து ஊற்றெடுத்தது.

### மார்க்சிச எதிர்ப்பு

தென் ஆபிரிக்க முதலாளிகளதும், உலக முதலாளி வர்க்கத்தினதும் பொருளாதார நலன்கள் இப்போது ஆ. தே. கா. வேலைத்திட்டத்தில் வெளிப்பாடாகின்றன. சமீபத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய மண்டேலா "நாம் இடைவிடாது சந்தைப் பொருளாதாரத்தை சிபார்சு செய்து வந்துள்ளோம்" என்றுள்ளார். ஆ. தே. கா. பொருளாதார திட்டத்தினை சுட்டிக் காட்டிப் பேசிய அவர் "அந்தத் திட்டத்தில் தேசியமயம், மார்க்சிசம் பற்றி எதுவிதமான குறிப்பும் கிடையாது. எமது பிரச்சினைகளுக்கு மார்க்சிசம் தான் தீர்வு என விபரிக்கக் கூடிய எந்தவொரு வாக்கியத்தையும் சுட்டிக்காட்டுமாறு நாம் எவரையும் சவால் செய்கின்றோம்" என்றுள்ளார்.

இங்கு இடம்பெற்றிருப்பது நெல்சன் மண்டேலாவினதோ அல்லது அவரின் ஆ. தே. கா. ஆதரவாளர்களினதோ தனிப்பட்ட காட்டிக் கொடுப்பு அல்ல. மாறாக இது பழைய தேசியவாத இயக்கங்களதும் முதலாளித்துவ தேசியவாத ஆட்சிகளதும் நாற்றமெடுப்பாகும். பூகோளரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பொருளாதாரத்தின் கீழ் இவர்கள உலக ஒடுக்கப்படும் மக்களின் சார்பில் அவர்களின் விடுதலைக்காக நின்று பிடிக்கக்கூடிய ஒரு தேசியவாத வேலைத் திட்டத்தினை முன்வைக்க முடியாதுள்ளது. இவர்கள் அனைவரும் ஏகாதிபத்தியத்திடம் இறைந்து போயுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தினதும், பன்னாட்டுக் கம்பனிகளினதும் கட்டளைகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். புதிய 'தேசிய ஐக்கிய' அரசாங்கத்தின் கீழ் முதலாளித்துவ சுரண்டலாலும், இனவாத ஒடுக்குமுறையாலும் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமைகள் மோசமடையும். தென் ஆபிரிக்கத் தொழிலாளர்கள் திரும்பவும் வர்க்கப் போராட்டப் பாதையில் காலடி வைப்பர்.

இப் போராட்டத்தினை முன்னெடுக்க அவர்கள் முதலாளித்துவ தேசியவாதத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் அரசியல் பிடியிலிருந்து தம்மை விடுவிப்பதோடு பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தினையும் சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்ட தமது சொந்த சுயாதீன புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்பவும் வேண்டும்.

## வேலைப் பளு அதிகரிப்பை எதிர்த்து பென்மூர் தோட்டத் தொழிலாளர் போராட்டம்

அட்டன் ஸ்ரத்டன் தோட்டத்தின் பென்மூர் டிவிசனைச் சேர்ந்த 11 தொழிலாளர்கள் நிர்வாகத்தின் வேலைப்பளுவை அதிகரிக்கும் திட்டத்தினை எதிர்த்து வெளிநடப்புச் செய்தனர். இந்த வேலைச்சுமை அதிகரிக்கப்பட்டதையிட்டு எமது நிருபருடன் பேசிய தொழிலாளர் கூறியதாவது:

"ஒரு ஹெக்டேயருக்கு மருந்து அடிக்க 5 ஆட்கள் அமர்த்தப்படுவதே வழக்கம். ஆனால் இப்போது அதனை நான்கு பேர் செய்ய வேண்டும் என்ற கட்டளை வந்துள்ளது. இதை எதிர்த்து நாங்கள் வெளியேறினோம். இப்போது நிர்வாகம் தொழிற் சங்கத் தலைமைகளின் ஆதரவுடன் புதிய ஆட்களைக் கொண்டு மருந்து அடிக்கிறார்கள்" என்றனர்.

மருந்து அடிக்கும் போது அணிய எதுவிதமான பாதுகாப்புக் கவசமும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் உயிராபத்தான நிலையிலேயே தாம் வேலை செய்ய நேரிட்டுள்ளதாக தொழிலாளர்கள் தொழிலாளர் பாதையிடம் தெரிவித்தனர். இந்த எதிர்ப்புத் திட்டத்தின் கீழ் வேலையை நான்கு மணியுடன் முடித்துக் கொண்டு வெளிநடப்புச் செய்த தொழிலாளர்கள் அன்று பறித்த கொழுந்தையும் நிர்வாகம் ஏற்க மறுத்துவிட்டது. இதனால் ஆண், பெண் தொழிலாளர்கள் கொழுந்துக் கூடைகளை கைவிட்டு விட்டு வெளிநடப்புச் செய்தனர். இதனையடுத்து தொழிற் சங்கத் தலைவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதைத் தொடர்ந்து தோட்டத்தின் உதவி சுப்பிரின்டன்ட் தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இரவு 9 மணிக்கு பறிக்கப்பட்ட கொழுந்துகள் பாரமெடுக்கப்பட்டன.

அத்தோடு பெப்ரவரி 7ம் திகதி வேலைக்கு 5 நிமிடம் காலதாமதமாகி வந்த 16 தொழிலாளர்களுக்கு வேலை வழங்க நிர்வாகம் மறுத்துள்ளது. இவர்களுக்கு வேலை வழங்குமாறு கோரி 350 தொழிலாளர்கள் வெளிநடப்புச் செய்தனர். தொழிற் சங்கத் தலைமையின் பேச்சுவார்த்தையின் பேரில் வேலைக்கு திரும்பிய தொழிலாளர்களுக்கு அரைநாள சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டது. பெப்ரவரி 14ம் திகதியில் இருந்து இத் தோட்டத்தில் வேலை செய்யும ஆண் தொழிலாளர்களின் வேலை நேரம் 15 நிமிடத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தென் மாகாண சபைத் தேர்தல் முடிவின்...

தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலகவாத சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சுயாதீனமாக அணிதிரட்டப் போராடும் புரட்சிக் கட்சியினை கட்டியெழுப்பும் அவசியத்தினை தேர்தல் முடிவுகள் தீர்க்கமான அரசியல் அவசியமாகக் கொண்டுள்ளது. முன்னேற்றமான தொழிலாளர்கள்-இளைஞர்கள்-ஒடுக்கப்படுவோர் இவ்விடயத்தினை கவனத்தில் கொண்டாக வேண்டும். அந்தப் புரட்சிக் கட்சி அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலமாகும். அதன் இலங்கைக் கிளை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமாகும். அனைத்து நனவான தொழிலாளர்-ஒடுக்கப்படுவோர்-இளைஞர்களையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேரும்படியும் அதன் பத்திரிகைகளான தொழிலாளர் பாதை, 'கம்கறு மாவத்த'வை கட்டியெழுப்ப இணையும்படியும் நாம் வேண்டுகின்றோம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்ட்டுகள் இயக்கமும் எதிர்வரும் ஜூன் 19ம் திகதி நடாத்தவுள்ள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பேராளர் மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் இந்த வரலாற்று பணியை வெற்றிகொள்ள இணையும்படி நாம் வேண்டிக் கொள்கின்றோம்.

கொழும்பு - 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி, 61ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அரசுடன் கட்டுப்படுத்தப்பட்டு அதனது நலன்களைப் பாதுகாக்கும் திசையைக் கொண்டிருக்கின்றது. ஒரு நாட்டின் தொழிலாளர்களுக்கெதிராக இன்னுமொரு நாட்டின் தொழிலாளர்களை பாவிப்பதற்காக முழக்கப்படும் தேசியவாத மேளத்தினை மிகவும் சத்தமாக அடிப்பவர்கள் இந்த அதிகாரத்துவங்களேயாகும்.

தொழிலாளவர்க்க இயக்கங்கள் மீது பல பத்து வருடங்களாக இவர்கள் வைத்திருந்த ஆதிக்கமானது தொழிலாளவர்க்கத்தின் சோசலிச உணர்மையை குழிதோண்டிப் புதைத்துவிட்டது. தொழிலாளவர்க்க இய்க்கத்தின் பணி உடனடியான நடைமுறைப்பிரச்சினைகளுடன் காலத்தைக் கழிப்பதுடன் கட்டுப்படுத்தப்படுவதில்லை. இதனது இறுதி இலக்கு கூடிய சம்பளத்திற்கு போராடுவதல்ல. பதிலாக மனிதசமுதாயத்தை விடுதலை செய்வதற்காக கூலியுழைப்பு முறைக்கு முடிவுகட்டுவதாகும். இந்தக்கருத்தானது அதிகாரத்துவங்களினால் திட்டமிட்ட வகையில் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.

இதன்மூலமாக மட்டும்தான் ஐரோப்பாவில் வேலையில்லாத்திண்டாட்டத்தின் வளர்ச்சிக்கும், சமூகநெருக்கடிகளின் கூர்மையான அதிகரிப்பிற்கும் மத்தியில் முதலாளித்துவத்திற்கெதிரான மக்கள் இயக்கம் தோன்றுவதற்குப் பதிலாக வலதுசாரிப் பாசிசப்போக்குகள் உருவாகுவதற்கு வழிதிறந்துள்ளது, ஏன் என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

## இத்தாலியிலிருந்து பாடங்கள்.

இத்தாலியத்தேர்தலில் வலதுசாரிகளின் வெற்றியும், பாசிசவாதிகள் பாராளமன்றத்தில் குடியிருந்ததும் சர்வதேசத்தொழிலாளவர்க்கத்திற்கு விடுக்கப்பட்ட கடுமையான எச்சரிக்கையாகும். இதனை பல கலந்துரையாடல், பங்களிப்புக்கள் மகாநாட்டில் தெளிவாக்கின.

தனது முடிவுரையில் பீற்றர்சுவார்ட்ஸ் இதனை மொத்தமாகக் குறிப்பிடுகையில் "இத்தாலியின் நிகழ்வுகளின் எச்சரிக்கை பின்வருமாறு அமைகின்றது:- **தற்போதைய சமூகநெருக்கடியை தொழிலாளவர்க்கம் தீர்க்காத பட்சத்தில் முதலாளித்துவம் தனது தீர்வினைத் திணிக்கும்."** இந்தத் தீர்வு என்பது பாசிசமும், போருமாகும். சோசலிசம் அல்லது காட்டுமிராண்டித்தனம்தான் மாற்றீடாக இருக்கமுடியும்.

1926ல் இத்தாலியில் இருந்ததைப்போன்றோ அல்லது 1933ல் ஜேர்மனியைப் போன்றோ தற்போதைய இத்தாலிய அரசாங்கம் பாசிச அரசாங்கம் என்று நாங்கள் சொல்லவில்லை. பெருல்ஸ்கோனி (Berulsconi) யையும் அவரது பாசிச சகாக்களையும் பதவிக்கு கொண்டுவந்தது ஒரு வேரூன்றிவிட்ட பாசிச மக்கள் இயக்கமல்ல. ஆனால் இத்தாலிய முதலாளித்துவம் தனது வழியில் சமூகநெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சியில் முதலாவது வெற்றிகரமான அடியை எடுத்துவைத்துள்ளது. பாசிஸ்டுக்களை ஆட்சியில் இணைத்ததின் மூலமும், அரசாங்க உயர்பதவிகளில் அனுமதித்ததின் மூலமும் எதிர்காலத்தில் இந்தச்சக்திகள் வளர்வதற்கான சமூகமான நிலைமைகள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. பாசிஸ்டுக்கள் இதனைப் பாவிப்பதன்மூலம் அரசியலை முழுமையாக இன்னும் வலதுபக்கம் திருப்புவதற்கு முனைவார்கள். தொழிலாளவர்க்கம் தலையிடாத பட்சத்தில் வேறு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

இந்த எச்சரிக்கை இத்தாலியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. முதலாளித்துவ சமுதாயஅமைப்பின் சீரழிவானது எல்லாவிடங்களிலும் வலதுசாரிப் போக்குகளை வளர்த்துவிடுகின்றது. பெருல்ஸ்கோனி சமீபகாலம்வரை ஒரு புதியவர் என்ற வகையில் சந்தேகக் கண்களினால் அவதானிக்கப்பட்டவர் தற்போது சர்வதேச முதலாளித்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இதயபூர்வமாக இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றார்.

ஐக்கியஅமெரிக்காவின் ஜனாதிபதி கிளிங்ரன் ஒரு உத்தியோகபூர்வமான பயணத்தை மேற்கொண்டிருக்கின்றார். பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயரும், ஜெர்மனியின் கோலும் இவரைத்தொடர்ந்து விரைகின்றனர். இதன்மூலம்தான் மாக்டபேர்க்கில் (Magdeburg) நடந்த பாசிசத் தாக்குதலுக்கு கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியிலிருந்து (CDU) ஆதரவான குரல்கள் கிளம்பியதை விளங்கிக்கொள்ள முடியும். ஆனபடியால்தான் ஜோன்மேயர் பிச்சைக்காரர்களை சிறைச்சாலைகளில் பூட்டும்படி கோரிக்கை விடுக்கின்றார். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் பெருல்ஸ்கோனியை பதவிக்கு கொண்டுவந்த வலதுசாரித்தட்டுக்களை நோக்கி விடப்பட்டவையாகும்."

## குட்டிமுதலாளித்துவ தீவிரவாதிகள்.

இதன் தொடர்ச்சியாக குட்டிமுதலாளித்துவ தீவிரவாதிகளின் பங்குபற்றி பீற்றர்சுவார்ட்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

"ஐரோப்பா முழுவதும் இவர்கள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாகவே பிரகடனம் செய்கின்றனர்:- பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இறுதியில் இது ஒரு தேர்தல் தோல்வியைப்பற்றியதே தவிர வேறொன்றுமில்லை. இது ஒரு இடதுசாரித் திருப்பத்தினை வர்க்கப்போராட்டத்தில் ஏற்படுத்தும்- தொழிலாளர்கள் பாசிசவாதிகளுடன் அனுபவம் பெறுவதால் ஒன்றும் குறைந்து போகப்போவதில்லை. இதிலிருந்து தொழிலாளர்கள் பாடங்களைப் பெற்றுக்கொள்வார்கள். பெரிய போராட்டங்கள் இனித்தான் ஆரம்பமாகும்".

இப்படியான ஒரு நிலைப்பாடு மேலோட்டமாகப் பார்க்கையில் நம்பிக்கைக்குரியதாக தென்பட்டாலும் இது ஒரு பரிதவிப்பான நம்பிக்கையாகும். இந்த நிலைப்பாடு 1933ற்கு முன்னர் ஜேர்மன் கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர் தேல்மான் (Thälmann) முன்வைத்த புகழ்பெற்ற, "கிட்லருக்குப் பின்னால் நாங்கள் வருவோம்" என்பதனை ஞாபகப்படுத்துகின்றது.

எங்களைப் பொறுத்தவரையிலும் வரப்போகும் மாதங்களிலும், வருடங்களிலும் பல தொழில்துறைப் போராட்டங்கள் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. முழுப்பொருளாதார சமூகவளர்ச்சிப்போக்குகள் இந்த முடிவினை நோக்கி செல்கின்றது. ஆனால் இந்தப்போராட்டங்கள் தானாகவே தொழிலாளவர்க்க இயக்கத்தின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கமாட்டாது.

இந்தவகையில் இத்தாலியின் வரலாறு மிகவும் நிறைந்த படிப்பினைக்கொண்டது. 1920ல் இந்த நாடு பிரமாண்டமான வேலைநிறுத்தங்களையும், தொழிற்சாலை உள்ளிருப்பு வேலைநிறுத்தங்களையும் கண்டது. நூறாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதில் பங்குபற்றினர். இந்த நடவடிக்கைகளின் முன்னால் அரசாங்கம் சக்தியிழந்து மண்டியிட்டது.

சோசலிசக்கட்சியும் அதனுடைய இடது கன்னையும் பாரிய மக்கள் ஆதரவினைப் பெற்றன. ஆனால் இந்த புரட்சிகர தாக்குதலுக்கு ஒரு முன்னோக்கினை வழங்க சக்தியில்லாதவை என்பதை அவை நிரூபித்தன. இதன் விளைவாக வேலைநிறுத்தம், தொழிற்சாலை உள்ளிருத்த போராட்டங்கள் தானாகவே முடிவிற்கு வந்தன. இதன் தொடர்ச்சியாக பாசிசவாதிகள் முன்னணிக்கு வந்ததுடன் 1922ல் அரசன் முசோலினியை அரசாங்கத் தலைவராக எதுவித பாரிய தொழிலாளவர்க்கத்தின் எதிர்ப்புமில்லாமல் நியமிக்கமுடிந்தது.

இதிலிருந்து என்ன பாடத்தை படிக்கமுடியும்? தன்னிச்சையான போராட்டங்கள் சுயமாக தொழிலாளவர்க்கத்தின் தலைமைநெருக்கடியைத் தீர்க்க வழிதிறக்குமா அல்லது இந்த நெருக்கடி கூர்மையாகி தொழிலாளர்களின் மனோநிலையை சீரழிக்குமா என்பது நாங்கள் என்ன செய்கின்றோம், என்ன முன்னோக்கிற்காக போராடுகின்றோம் என்பதில் தங்கியிருக்கின்றது

எங்களுடைய புரட்சிகர நம்பிக்கையானது எதிர்காலப்போராட்டங்கள் தவிர்க்கமுடியாதது என்பதில் தங்கியிருக்கவில்லை பதிலாக எங்களது சிந்தனைகளதும், முன்னோக்கினதும் பலத்தின் மேலான நம்பிக்கையில் தங்கியிருக்கின்றது. அது விஞ்ஞானபூர்வமான அடித்தளத்தைக்கொண்ட மார்க்சிச வேலைத்திட்டமானது சக்திவாய்ந்த முறையில் பிரதிநிதிப்படுத்தப்பட்டால் மக்களை சென்றடைவதோடு பாரிய ஆதரவினையும் பெறும் என்பதில் தங்கியிருக்கின்றது.

## தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம்.

சுவார்ட்ஸ் தொடர்ந்து பேசுகையில் **"இந்தக்காரணத்திற்காகத்தான் எல்லா வடிவத்திலுமான மத்தியவாதத்திற்கும், சந்தர்ப்பவாதத்திற்குமெதிரான சமரசமற்ற அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். "அனைத்து இடதுசாரிகளையும் இணை" என்ற கோசத்தை நாங்கள் நிராகரிக்கின்றோம். நாங்கள் தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்தைக் கோருகின்றோம். இது தனியே வித்தியாசமானது மட்டுமில்லை மறுதலையுமானது.**

தொழிலாளர்களை ஒரு நாட்டில் ஐக்கியப்படுத்துவதற்கு அவர்கள் முகம்கொடுக்கும் குழப்பங்களையும், பிரமைகளையும் முடிவிற்கு கொண்டுவர வேண்டும். இவைகள் பல பத்துவருடக்கணக்கான சமூகஜனநாயகத்தினதும், ஸ்டாலினிசத்தினதும் அரசியலின் பெறுபேறுகளாக உருவாகியிருக்கின்றன. அத்துடன் தொழிலாளர்களை முடமாக்கியிருக்கும் தொழிற்சங்க அதிகாரத்துவத்தினது வெற்றுக்கோசத்திலிருந்தும், சம்பிரதாய போராட்டங்களிலிருந்தும் உடைக்கவேண்டும். இதன்மூலம் தொழிலாளர்களுக்கு அவர்கள் உண்மையில் எப்படி வெளிநாட்டுத்தொழிலாளர்களை பாதுகாக்க முன்வரவேண்டும் என்பதைக் காட்டவேண்டும்.

குட்டிமுதலாளித்துவத்தீவிரவாதிகள் இதற்கு மறுதலையாகவே தொழிற்படுகின்றனர். அவர்கள் தொழிற்சங்க அதிகாரத்துவத்தினை சுற்றி படையாகக் கூடுவதன்மூலம் அதுதான் இறுதிப்பாதுகாப்பு இயந்திரம் என பிரகடனம் செய்கின்றனர். ஸ்பெயின், இத்தாலி, பிரான்சில் நாங்கள் செய்த அரசியல் வேலைகளின் போது இதனை அவதானிக்க முடிந்தது. ஸ்பெயினில் இவர்கள் Izquierda Unida ( ஐக்கியஇடதுசாரிகள்) என்ற ஸ்பானிய

ஸ்டாலினிசவாதிகளின் இயக்கத்
கூடுகின்றார்கள் இந்த இயக்
வரலாறு முழுக்
தொழிலாளவர்க்கத்திற்கெ
குற்றச்செயல்களாலே
நிறைந்திருக்கின்றது. இத்தா
இவர்கள் Rifondayione Comu
என்ற முன்னாள் கம்யூனிஸ்ட்கட்
கன்னை ஒன்றுக்
அணிதிரள்கின்றனர்.
இவர்களுக்குள் முன்னணிப்பாத்தி
பப்லோவாத ஐக்கியசெயலக
ஆதரவாளர்கள் ஏர்ணஸ்ட் மண்டே
நெருங்கிய கூட்டாளியாகிய I
Maitan தலைமை
ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இந்த மகாநாட்டின் பிரதிநி
மகாநாட்டின் நான்கு தீர்மானங்க
நான்காவது அகிலத்
ஐரோப்பியஅறிக்கையையும் ஆதர
ஏகமனதாக வாக்களித்தனர்.
"இனவாதத்திற்கும், பாசிசத்தி
எதிரான போராட்டத்தை முன்
வெளிநாட்டுத்தொழிலாளர்கள
அகதிகளையும் பாதுகார்!
பிரதானமான தீர்மானமானது பாதுக
குழுக்களை தொழிற்சாலைகள
தொழிலாளர் வதிப்பிடங்க
உருவாக்குவ
அடித்தளமாகக்கொண்டது.
வெளிநாட்டுத்தொழிலாளர்களின
அகதிகளினதும் பாதுகாப்பிற்
அத்தியாவசியமான நடவடிக்கை
முன்வைக்கின்றது.
இத்தீர்மானம் "அரசை நோ
கூக்குரலுக்கும், அரசதடைகளை
பொலிசையும் பலப்படுத்து"
கோரிக்கைக்கு எதிர
முன்வைக்கப்பட்டதோடு, "இ
வலதுசாரிகளுக்கெதிர
நடவடிக்கைகளுக்கெ
உருவாக்கப்படும் சட்டங்கள் நா
தொழிலாளர் இயக்கங்க
அடக்கியொடுக்குவதற்காக அரசி
பயன்படுத்தப்படும்" என்ப
வலியுறுத்தியது.
இரண்டாவது தீர்மானமாகிய "பால்க
இரத்தக்களரியை நிறுத்து" எ
தீர்மானம் சேர்பிய, குரோசிய, பொஸ்
என்ற அனைத்
தேசியவாதவடிவங்களுக்குமெதி
பால்கன் தொழிலாளர்க
ஐக்கியத்திற்காகவும், ஐக்கியஐரோ
சோசலிசக்குடியரசுகளின் அடித்தளத்
பால்கன் சோசலிசக்குடியரசுக
அமைப்பதற்கா
வேலைத்திட்டத்திற்காக
முன்வைக்கப்பட்டது.

வாசியுங்கள்:

யூ. என். பி. தாக்குதலுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு

விலை; 7–50

www.padippakam.com



இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை [redacted]

மாதமிரு இதழ் — 446 ● 1994 பெப்ரவரி 25 வெள்ளிக்கிழமை

**தொழிலாளர் பேராளர் மாநாடு**

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத் துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்க்த்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

**கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்**

**ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

## ஏகாதிபத்திய எஜமானர்களின் எடுபிடிகளாக

# யூ.என்.பி.யும் விடுதலைப் புலிகளும் கொடுக்கல் வாங்கல்களுக்குத் தயார்!

விஜேதுங்க அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகப் போவது பற்றிய பேச்சுக்கள் பலமாக அடிபடத் தொடங்கியுள்ளது. இதன் பின்னணியில் ஏகாதிபத்தியப் பகற்கொள்ளைக்காரர்கள் பதுங்கிக் கொண்டுள்ளதோடு, இரு தரப்பினருடனும் பிற்போக்குக் கொடுக்கல் வாங்கல்களுக்குத் தலையிட்டுள்ளனர். இது தமிழ்ஈழம் — இலங்கை தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்திய சார்பு சிங்கள-தமிழ் முதலாளிகளதும் சதியின் புதிய கட்டத்தை குறிக்கின்றது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்யும் தரகர்களாக கத்தோலிக்க ஆங்கிலிக்கன் திருச்சபைகளும், சர்வோதயமும் தொழிற்பட்டு வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் ஆர்ச் பிஷப் நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்னாந்து கத்தோலிக்க திருச்சபையின் தூதுக்குழுவோடு யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுடன் — அன்டன் பாலசிங்கம் உட்பட — பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். ஒற்றையாட்சி முறையினுள்ளான 'தீர்வுக்காக' தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவும் விடுதலைப் புலிகள் தயாராக உள்ளதாக அன்டன் பாலசிங்கம் தெரிவித்ததாக ஆர்ச் பிஷப் மார்க்கஸ் பெர்னாந்து பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளதோடு, அவரும் அவருடன் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் ஏனைய பிரதிநிதிகளும் ஜனாதிபதி விஜேதுங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதற்கிடையே ஆங்கிலிக்கன் திருச்சபையின் பிஷப் கெனத் பெர்னாந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை சந்தித்தனர். அதைத் தொடர்ந்து கெனத் பெர்னாந்து சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னவுடன் சேர்ந்து விமானப்படை ஹெலிகொப்டரில் பலாலி சென்றுள்ளதோடு, யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். கொழும்பு திரும்பிய சர்வோதய தலைவர் எ,ரீ. ஆரியரத்ன விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெப்ரவரி 10ம் திகதி ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகத் தெரிகின்றது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரும்பும் பட்சத்தில் 'சமாதான பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் ஏ.ரி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏ. ரி. ஆரியரத்ன சந்தித்த ஏனையவர்களுள் நவசமசமாஜக் கட்சி தலைவர் வாசுதேவ நாணயக்கார, சி. ல. சு, க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க சி.ல.சு.க. பா.உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வாவும் அடங்குவர்.

அந்த விதத்தில் இந்தச் சதிகார முன்னணி, விஜேதுங்க அரசாங்கம் தொடக்கம் நவசமசமாஜ கட்சி வரை நீளத் தொடங்கியுள்ளது. இம் முன்னணி இந்தளவுக்கு நீண்டு கொண்டுள்ளதற்கு சமாதானம் பற்றிய திடீர் அக்கறையோ அல்லது ஆர்வமோ காரணம் அல்ல.

மாறாக இதற்கு இரண்டு முக்கிய காரணிகள் உண்டு. முதலாவதாக, இந்தப் பிராந்தியத்தினை ஒரு கொடிய இராணுவச் சுரண்டல் வலயமாக மாற்றும் அவசியம் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால் யூ.என்.பி அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அதற்குக் கைகொடுக்கவேண்டுமென அவை நெருக்கிக் கொண்டுள்ளன. இரண்டாவதாக, ஜனாதிபதி விஜேதுங்கவின் யூ.என்.பி. போன்ற சிங்கள முதலாளித்துவக் கும்பல்களுக்கும் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் வெடிக்குமோ என்ற பீதி ஏற்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகள் 'சமாதானம்', 'அரசியல் ஸ்திரப்பாடு', 'மனித உரிமைகள்' என்ற மோசடிப் பதாகைகளை ஏந்திய வண்ணம் இத் தலையீட்டில் இறங்கியுள்ளனர். மனித உரிமைகள்' பற்றிய கூச்சல் அவர்களின் ஒரு முக்கிய ஆயுதமாகும். சிறப்பாக அரைக் காலனித்துவ நாடுகளில் ஊடுருவும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் இந்த ஆயுதத்திளைப் பயன்படுத்துகின்றனர். இந்த பம்மாத்தின் கீழேயே ஈராக்,சோமாலியா,ஹையிட்டி,பனாமாவில் தலையிட்டனர். இன்று பொஸ்னியாவில் தலையீட்டுக்காக செய்யும் அத்தனை ஆயத்தங்களும் அந்த அடிப்படையிலேயே இடம் பெறுகின்றன. ஏன்? இந்தியாவுக்கு நெருக்குவாரம் கொடுக்கும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் காஷ்மீர் — பஞ்சாபில் 'மனித உரிமைகள் அழிக்கப்பட்டமை' பற்றிய பிரச்சினையை உருவாக்கி, அதன் பேரில் நரசிம்மராவ் அரசாங்கத்தை நெருக்கி வருகின்றனர்.

இலங்கையில் 1988 — 89ல் யூ.என்.பி அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட சிங்கள கிராமப்புற இளைஞர்களின் புதைகுளிகள் சூரியகந்தவில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சி.ல.சு.க ல.ச.ச.க, இ.க.க, ந.ச.ச.க தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டினை வேண்டி நின்ற வேளையில் அமெரிக்க ராஜாங்கத்திணைக்களம் ஜனவரி 15ம் திகதி ஒரு அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை சூரியகந்தவைப் பற்றி மட்டுமன்றி இனவாத யுத்தம் பற்றியும் குறிப்பிட்டது. அது கூறியது இதுதான்:

இலங்கையின் உள்நாட்டு யுத்தம்''அரசியல், இராணுவ சீரழிவு நிலைக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையில் அமைதியையும், இணக்கத்தையும் உருவாக்கும் ஒரு அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் நாம் மீண்டும் மீண்டும் வேண்டியுள்ளோம்''. இந்த வேண்டுகோளின் பின்னால் இருப்பது நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'சமாதானம்', 'மனித உரிகைகள்' 'ஜனநாயக உரிமை'களைக் காக்கும் கரிசனை அல்ல. உண்மையில் இந்நாட்டில் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை ஒரு முழு அளவிலான சர்வதிகார ஆட்சியினால் நசுக்கித் தள்ளி சுரண்டுவதற்கான ஒரு நிலைமையை உருவாக்கித் தந்தருளவேண்டும் என சிங்கள — தமிழ் முதலாளிகளுக்கு விடுக்கும் பணிப்பில் பதுங்கிக் கொண்டுள்ளது.

பெப்ரவரி 4ம் திகதி இலங்கை சுதந்திர தின வைபவங்களில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜோன் பீல்டின் பேச்சு, இந்த எதிர்பார்ப்புக்களை அப்பட்டமாக்கியுள்ளது. ''வெளி நாட்டு மூலதனத்தினைக் கொண்ட 100 கோடி டாலர் மதிப்புள்ள திட்டங்கள் வியாட்னாமுக்குச் செல்ல கியூவில் நிற்பதாகக் கூறும் செய்தி என்னை நேற்று அதிரவைத்தது. இது உறுதியான கடந்தகால சாதனைகளைக் கொண்ட இலங்கையின் எண்ணிக்கையை விடப் பன்மடங்கு அதிகமானது. இது ஏன் ஏற்பட்டுள்ளது?... நான் நினைக்கும் விதத்தில் போராட்டத்தினால் உருவர்கியுள்ள ஸ்திரமற்ற நிலையாகும். வெளிநாட்டவாகள் பங்குகளை வாங்குகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் உற்பத்தித் துறையில் பலமான முதலீடு — கோடிக் கணக்கான டாலர் மதிப்புள்ள மூலதனக் கருவிகள் அவசியப்படுகின்றது. நான் நினைப்பதன்படி நீங்கள் அது சம்பந்தமாக தாமதிக்க முடியாது.'' இத்துடன் நின்றுவிடாத பிரித்தானிய ஸ்தானிகர் ''சிறிய நாடு என்ற விதத்தில் இருபுறமும் இழுபடும் சுகபோகத்தை உங்களால் அனுபவிக்க முடியாது.'' எனவும் நேரடியாக கூறிவைத்தார். பிரித்தானிய, ஐரோப்பிய ஆட்சியாளர்கள் ஒரு தீர்வினை உருவாக்கும் படியும் அதற்கு உதவத் தயார் எனவும் ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த பிரித்தானிய தூதுவர் கூறுவது என்ன? வியாட்னாமில் வளர்ச்சி கண்டுவரும் கொம்பிரதோர் முதலாளிகள் தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து — ஒரு மாதத்துக்கு 18 டாலர் சம்பளத்துக்கு — சுரண்டுவது போலவும் மூலவள கொள்ளைக்கு இடமளிப்பது போலவும் இலங்கையிலும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும்! விடுதலைப் புலிகளுக்கும் விஜேதுங்க அரசாங்கத்துக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தையின் நிஜ பொருளாதார உள்ளடக்கம் இதுவே. சுருங்கச் சொன்னால் ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் பகற்கொள்ளைக்கான சர்வாதிகாரத்தைத் திணிப்பதாகும். இதன் பொருட்டு தமிழ் — சிங்கள முதலாளிகள் ஒன்றுபட வேண்டும் என்பதே ஏகாதிபத்தியவாதிகளின் பிரார்த்தனை. இருந்தபோதிலும் தமிழ், சிங்கள முதலாளித்துவ கும்பல்களை தமது கையாட்களாக வெவ்வேறு அவசியங்களின் பேரில் பயன்படுத்தும் அவசியம் இருப்பதாக ஏகாதிபத்தியவாதிகள் கருதுமிடத்து அவர்கள் அதற்காகவும் திரும்பவும் முன்னணியில் நிற்பர்.

(20'ம் பக்கம் பார்க்க )

**வடக்கு —கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# லக்சம்பேர்க், கார்ள் லீப்நேக்ட் படுகொலையின் 75 ஆண்டு நிறைவு


றோசா லக்சம்பேர்க்


கார்ள் லீப் நேக்ட்

அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இதழான 'இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டினில்' பில் வான் எழுதியது

ஜனவரி 15ம் திகதி, அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் இரு தலைசிறந்த பிரதிநிதிகள்—றோசா லக்சம்பேர்க், கார்ள் லீப்நேக்ட்—மிலேச்சமான முறையில் படுகொலை செய்யப்பட்ட 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது. இவ்விரு புரட்சிகரப் போராளிகளும் படுகொலைக்கென முதலாளித்துவப் பிற்போக்கினாலும் அதன் ஜேர்மன் சமூக ஜனநாயகக் கைக்கூலிகளாலும் பொறுக்கி எடுக்கப்பட்டதற்கு அவர்களது முழு வாழ்க்கையும் சோசலிச அனைத்துலகவாதத்துக்கான போராட்டத்தினால் நிறைந்திருந்ததே காரணம்.

1871ல் போலந்தில் பிறந்த றோசா லக்சம்பேர்க் இளம் யுவதியாகப் புரட்சிகர பணிகளில் சேர்ந்ததோடு, ஸார் அதிகாரிகளின் கைகளால் கொலையாவதில் இருந்து தப்பும் பொருட்டு பதினெட்டு வயதில் சுவிற்சலாந்தின் சூரிச் நகருக்கு புலம்பெயரத் தள்ளப்பட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் அவர் தமது தேசமான போலந்தில் மட்டுமன்றி ருஷ்ய, ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சிகளின் உள்ளும் ஒரு பிரபல்யமான பாத்திரத்தினை வகிக்க வேண்டியிருந்தது. றோசா லக்சம்பேர்க்கின் மரணத்தைத் தொடர்ந்து எழுதிய இரங்கலுரையில் லியொன் ட்ரொட்ஸ்கி அவரைப் பின்வருமாறு வருணித்தார்: 'கட்டையானஉருவமும் மெலிந்த, நோயாளித் தோற்றமும், பெருந்தன்மை ஜொலிக்கும் முகமும், அழகான கண்களும், பிரகாசிக்கும் அறிவும் கொண்ட அவர் தனது சிந்தனையின் பலத்தினால் எவரையும் அதிரச் செயதார். அவர் மார்க்சிச விதிமுறையை அவரின் உடம்பின் உறுப்புப்போல் நிபுணத்துவம் செய்திருந்தார், மார்க்சிசம் அவரின் உடம்பில் இரத்தமாய் ஓடியது என ஒருவர் குறிப்பிடலாம்.''

சந்தர்ப்பவாதத்துக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக போலந்துக் குட்டி முதலாளித்துவ தேசியவாதத்துக்கும் எதிரான சமரசமற்ற பகைமையினால் போராட்டங்களில் போலந்தில் பிரபல்யமான அவர், 1893ல் போலந்து சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவினார். லக்சம் பேர்க்கின் தேசியவாதத்துக்கு எதிரான பகைமை, ஒரு பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதியின் நோக்கில் உறுதியாக வேரோடியிருந்ததோடு அது அவரின் முழுப் புரட்சிகர வாழ்க்கையையும் நெறிப்படுத்தியது. 1897ல் ஜேர்மன் சோசலிச இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கியதோடு விரைவில் அதன் தீவிர இடதுசாரிக் கன்னையின் முன்னணிப் பேச்சாளராகவும் தோன்றினார். ஜேர்மன் மொழியைப் பூரணமாகக் கற்று அதில் பாண்டித்தியம் பெற்ற அவர், முதலாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் சீரழிவுக் காலப்பகுதியில் அதனுள் ஆதிக்கம் செலுத்திய சுயதிருப்தி கட்சி அதிகாரத்துவங்கள், தொழிற்சங்க அலுவலர்கள், சந்தர்ப்பவாதிகள், சமூக வெறியர்களின் இரக்கமற்ற எதிரியாக மாறினார். ஜேர்மன் சந்தர்ப்பவாதத்தின் மிகவும் பேர்போன பிரதிநிதியான எடுவார்ட் பேர்ண்ஸ்டினுக்கு எதிரான அவரின் திறமையான விவாதமான சீர்திருத்தமா அல்லது புரட்சியா ( Refom or Revolution ) என்ற நூலின் வெளியீட்டுடன் 1899ல் அவர் அனைத்துலக சமூக ஜனநாயகத்தின் கவனத்தை ஈர்த்தார். இப்பத்திரம், மார்க்சிசத்தின் புரட்சிகர அடிப்படையை காக்கும் காலோசிதமான ஒன்றாக இருந்துவருகின்றது.

1905ல் போலந்துக்குத் திரும்பிய றோசா, ஸார் ஆட்சியைக் குலுக்கிய புரட்சிகர எழுச்சிகளில் பங்குகொண்டார். ஒரு வார்ஷா சிறைக்கூடத்தில் இருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பீட்ரோகிராட்டுக்கு சட்டவிரோதமாகப் பயணம் செய்த அவர், ஒரு புனை பெயரைப் பாவித்து சிறைவைக்கப்பட்டிருந்த அவரின் பல தோழர்களைச் சந்தித்தார். பேர்ளினுக்குத் திரும்பியதைத் தொடர்ந்து அவர் அதிகாரத்துவத்தின் மீதான தனது தாக்குதலை இரட்டித்தார். இது ஜேர்மன் சமூக ஜனநாயகத்தையும் ஜேர்மன் தொழிலாளி வர்க்கத்தையும் திணறச் செய்தது. 1905 ருஷ்யப் புரட்சி ஐரோப்பா பூராவுமான புரட்சியின் ஒரு முன்னோடி என்பதைப் புரிந்து கொண்ட அவர் 'பரந்த வேலைநிறுத்தம். அரசியல் கட்சி, தொழிற்சங்கம் (மாஸ் ஸ்ரயிக். பொலிட்டிக்கல் பாட்டி அன் த ட்ரேட் யூனியன்ஸ்) என்ற தனது கட்டுரையைப் பிரசுரித்தார். அவரின் ஆய்வுகள், சமூக ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத்துக்கு முக்கிய அடிப்படையை வழங்கியதும், தொழிலாளர் வர்க்கத்தினை புரட்சிகரப் போராட்டத்துக்கு தயார் செய்யும் எந்தவொரு முயற்சியையும் மூர்க்கமாக எதிர்த்தவர்களுமான பழமைவாத ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சி அலுவலர்களுக்கு எதிரான விமர்சனங்களை உள்ளடக்கி இருந்தது.

இக்காலப் பகுதியில் அவர் ருஷ்யப் புரட்சியின் மிக முக்கியமான பிரச்சினைகளில் மென்ஷிவிக் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக லெனினின் போல்ஷிவிக் கட்சியோடு இணைந்து நின்ற அதே வேளையில் ஜனநாயக, சோசலிசப் புரட்சிகளின் உறவு பற்றிய முக்கிய பிரச்சினையில் அவரின் கருத்துக்கள் பெருமளவுக்கு ட்ரொட்ஸ்கியுடன் ஒத்துப்போயின. றோசா லக்சம்பேர்க் ஏகாதிபத்தியத்தின் மூர்க்கமான எதிரியாக விளங்கியதோடு முதலாம் உலகப் போரின் தறுவாயில் ஒரு அனைத்துலகவாதியின் நிலைப்பாட்டை வகித்தார். அவரின் 'ஜூனியஸ்'(Junius) பிரசுரத்தில் முதலாவது ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கான மிகவும் கூர்மையான விளக்கத்தை வழங்கினார். லெனின், ட்ரொஸ்கியைப் போலவே அவரும் ஒரு புதிய மூன்றாம் அகிலம் அமைக்கப்படவேண்டியுள்ளது என்ற முடிவுக்கு வந்தார், 1914 ஆகஸ்ட் 4ம் திகதி ஜேர்மன் சமூக ஜனநாயகம் யுத்தக் கடனுக்கு ஆதரவளித்ததன் மூலம் கட்சியை ஒரு 'துர்நாற்றம் வீசும் பிணம்' ஆக்கியுள்ளது என அழியாப் புகழ் பெற்ற வார்த்தைகளில் கூறி வைத்தவர் றோசா லக்சம் பேர்க்கே.

ஜேர்மன் ஆளும் வர்க்கத்துக்கும் அதன் யுத்த இலக்குகளுக்கும் எதிரான அவரின் சமரசமற்ற புரட்சிகர எதிர்ப்பு 1915 பெப்ரவரியில் அவரைக் கைது செய்ய வைத்தது. விரைவில் விடுதலை செய்யப்பட்ட போதிலும் அவர் ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் 1918 நவம்பர் புரட்சியால் விடுதலை செய்யப்படும் வரை மீண்டும் சிறைவைக்கப்பட்டார்,

லக்சம் பேர்க்கைப் போலவே கார்ள் லீப் நேக்டும் 1871ல் பிறந்தார். ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் ஸ்தாபகரான புகழ் பெற்ற வில்ஹெம் லீப்நேக்டின் மகனான இவரின் பெயர் இராணுவவாதத்துக்கு எதிரான போராட்டத்துடன் இனங்காணப்பட்டது. குறிப்பாக இவர் இளைஞர்களிடையே யுத்தத்துக்கு எதிரான பிரச்சாரத்தையும், கிளர்ச்சியையும் முன்னெடுப்பதில் ஊக்கமாக உழைத்தார். இராணுவவாதத்துக்கு எதிரான போராட்டம் பற்றிய இவரின் நூல் ஜேர்மன் தொழிலாளர் வர்க்க இளைஞர்களின் முன்னேற்றமான பகுதியினரிடையே புகழ் பெற்றது.

சமூக சோவினிச வேலைத்திட்டத்துக்கு அங்கீகாரமளித்ததோடு, யுத்தத்துக்கு தயார் செய்வதில் ஜேர்மன் ஆளும் வர்க்கத்துடன் கலந்துறவாடிய சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர்களுடன் லீப்நேக்ட் மோதிக்கொண்டார். 1914 டிசம்பரில் அவர் யுத்தக் கடன்களுக்கு அங்கீகாரம் அளிப்பதை எதிர்த்த சமூக ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்றக் கன்னையின் ஒரே அங்கத்தவராக விளங்கியதன் மூலம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார். 'எதிரி உங்கள் சொந்த நாட்டினுள் இருந்து கொண்டுள்ளான்' என்ற சுலோகத்தை முன்வைத்தவர் கார்ள் லீப்நேக்ட் 1915ல் அவர் சமூக ஜனநாயகத்தின் சமூக சோவினிசத் தலைவர்களுக்கு எதிராக ஸ்பாட்டகஸ் லீக்கை (SPARTACUS LEAGUE) அணி திரட்டினார்.

1916 மே தினத்தில் பேர்ளின் பொட்ஸ்டாம் சதுக்கத்தில் ஜேர்மன் ஆளும் வர்க்கத்தையும், இராணுவ இயந்திரத்தினையும் மீறி பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்தது ஐரோப்பியத் தொழிலாளர் வர்க்கத்தினை மின் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் 'யுத்தம் ஒழிக! அரசாங்கம் வீழ்க! என்ற கோரிக்கையை எழுப்பினார். லீப்நேக்ட் கைது செய்யப்பட்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். லக்சம் பேர்க்கைப் போலவே இவரும் 1918ல் ஜேர்மனியைக் குலுக்கிய தொழிலாளர்கள், படைவீரர்கள், கடற்படையாட்களின் புரட்சிகர எழுச்சியைத் தொடர்ந்தே சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டதற்கும் அவர்களின் துக்ககரமான மரணத்துக்கும் இடையேயான ஒரு சில வாரங்களில் லக்சம் பேர்க்கும் லீப்நேக்டும் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை (KPD) நிறுவும் புரட்சிகரப் பணியில் தம்மை ஈடுபடுத்தியதோடு, ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கிய ஜேர்மன் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு புரட்சித் தலைமையை வழங்கவும் முயன்றனர்.

அவர்கள் தலைமை தாங்கிய இந்த இளம் இயக்கத்துக்கு, இந்த பதட்டமான நிகழ்வுகளுக்குத் தயார் செய்ய சிறியவாய்ப்பே கிடைத்தது.

ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபிதம், 1919 புதுவருடப் பிறப்பன்றும், புரட்சி கெயிசரை ஓட்டமெடுக்க நெருக்கியதும், ஜேர்மன் ஆளும் வர்க்கத்தினை அரசின் தலைமைப் பதவியை சமூக ஜனநாயக வாதியான பிரெடரிக் ஈபேட்டின் கைகளில் ஒப்படைக்க இணங்கச் செய்த இரண்டு மாதங்களின் பின்னர் இடம்பெற்றது. ஈபேட்டும் சக சமூக ஜனநாயக வாதிகளான ஸ்கிட்மனும், நொஸ்கியும் புரட்சியை இரத்தத்தில் மூழ்கடிக்கும் முதலாளித்துவத்தைக் காக்கும் ஒரே காரணத்துக்காகவே அரசாங்கத்தில் சேர்ந்தனர். பல வருடங்களாக ஜேர்மன் சமூக ஜனநாயகத்தினுள்ளே லக்சம் பேர்க்கும், லீப்நேக்டும் சந்தர்ப்பவாதத்துக்கும், சமூக சோவினிசத்துக்கும் எதிராகத் தொடுத்த இடைவிடாத சவுக்கடிகளைச் சகித்துக் கொண்ட இவர்களும் இவ்விருவரும் ஆளும் வர்க்கத்துக்கு மிகவும் பேராபத்தினைக் கொண்டுள்ளனர் என்பதை நன்கு அறிந்திருந்தனர். கட்சி அதிகாரிகளதும், தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும், கட்சி தலைமையில் இருந்து வந்த மற்றும் குட்டி முதலாளித்துவ அயோக்கியர்களினதும் ஆதரவுடன் தமது புரட்சிகர எதிரிகளுடன் இறுதியாகக் கணக்குத் தீர்த்துக் கொள்ள ஆயத்தமாகினர்.

சமூக ஜனநாயகத் தலைவர்கள் லக்சம்பேர்க்கினதும் லீப்நேக்டினதும் தலைகளுக்கும் 50,000மார்க்குகள் விலை கூறியதோடு இந்த வேலையைச் செய்வதற்கு கேடுகெட்ட எதிர்ப்புரட்சி இராணுவத்தின் — பிலிகோர்ப்சின் முன்னாள் அதிகாரிகளையும் படையாட்களையும் அணிதிரட்டியது, இவ்விரு புரட்சியாளர்களும் ஜனவரி 15ம் திகதி ஒரு நண்பரின் வீட்டில் கைது செய்யப்பட்டதோடு சுயநினைவு இழக்கும் வரையில் அங்கு வைத்துத் தாக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கார்களுள் தூக்கி எறியப்பட்டு தொலைவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சுடப்பட்டனர். லீப்நேக்டின் உடல் ஒரு சவக்காலையில் அடையாளங்காணப்படாத பிரேதமாகப் போடப்பட்டது. லக்சம்பேர்கின் உடல், உறைந்த தண்ணீரில் இருந்து பல மாதங்களின் பின்னர் தோன்றும் விதத்தில் ஒரு கால்வாயில் வீசப்பட்டது.

இந்தக் கேடுகெட்ட குற்றங்களின் 75 ஆண்டுகளின் பின்னர்—இவ்விரு புரட்சிகரத்

(8ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய எஜமானர்களின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் ஒரு தொகை கட்டளைகளையும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து வைக்குமுகமாக விஜேதுங்க அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளினால் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்கள் வெடிக்கும் என்ற பீதி இலங்கை முதலாளி வர்க்கத்தினைப் பிடித்துக் கொண்டுள்ளது. அரசாங்கம் டிசம்பர் 20ம் திகதி அமுழுக்குக் கொணர்ந்த புதிய சர்வாதிகார அவசரகால விதிகள் இந்த இலக்கிலேயே இயற்றப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு ஊழியர்கள் தமது கோரிக்கைகளின் பேரில் பிரச்சார நடவடிக்கையில் இறங்கப் போகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டதுதான் தாமதம் அரசாங்கம் இந்த அவசரகால விதிகள் பயன்படுத்தப்படும் என மிரட்டியது. பிற்போக்கு முதலாளித்துவக் கும்பல்களை அணிதிரட்டி சமூக குமுறல்களுக்கு முகம் கொடுக்க விஜேதுங்க அரசாங்கம் தயாராகி வருகின்றது. கிராமப்புற ஏழைகள், வேலையற்றோர், இலவசக் கல்வி உரிமை அழிப்பு அனைத்துக்கும் முகம் கொடுத்துள்ளதோடு இளைஞர்களிடையே பதட்டம் அதிகரித்து வருகின்றது. பூநகரி யுத்த தோல்விகளை தொடர்ந்து அரசாங்கம் மேலும் அவஸ்தை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலைமை ஆளும் வர்க்கத்தினை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சி எழுச்சிகளை தவிடு பொடியாக்க தமிழ் முதலாளிகளின்—சிறப்பாக விடுதலைப் புலிகளின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இது எந்தவிதத்திலும் விஜேதுங்க அரசாங்கமோ அல்லது சிங்கள முதலாளிகளோ தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை கைகழுவிவிட்டதைக் குறிக்காது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கென கத்தோலிக்க குருமாரை வடக்கே அனுப்பும் அதே வேளையில் ஜனாதிபதி விஜேதுங்க 'சிங்கள பெரும்பான்மையினரின் ஆட்சி நிலவவேண்டும்' என கம்பளை, உடுநுவர கூட்டங்களில் கர்ச்சித்ததாக அரசாங்க ஊதுகுழலான 'ஒப்சேவர்' பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் நிலைமை என்ன? படுபயங்கரமான நெருக்கடியினுள் தலைமூழ்கியுள்ள விடுதலைப் புலிகள் தலைமை, இதிலிருந்து தலையெடுக்க ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளிகளதும் உதவியை நாடியுள்ளனர். கடந்த 11 ஆண்டுகால யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவ தலைவர்கள் தமிழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவத் தேசியவாதத்தின் ஊடாக முட்டுச் சுவருக்கு இட்டுச் சென்றுள்ளனர். கடந்த சில வருடங்களாக தமிழ் இனவாதத்தினைத் தூண்டுவதன் மூலம் விடுதலைப் புலிகள் சிங்கள — முஸ்லீம் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட போதிலும் யூ. என். பி அரசாங்கத்தின் படுமோசமான இரத்தக் களரி நிலைமையில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை ஏமாற்றுவது அவர்களுக்குச் சிரமமாகியுள்ளது.

எதிர்ப்பு இயக்கங்கள் மீதான தடையும், மாற்று அமைப்புக்களுள் விடுதலைப் புலிகளின் ஏஜன்ட் இருக்க வேண்டும் என்ற அறிவிப்பும் சிறிது சிறிதாக பொலிஸ், நீதிமன்றங்களின் ஆரம்பங்களும் ஆயிரக்கணக்கானோர் சிறைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளமையும், மரண தண்டனை விதிப்புக்களும் பொது மக்களிடையே கொதித்துக்கொண்டுள்ள வெறுப்பை அடக்கி வைக்க விடுதலைப் புலிகள் எடுக்கும் கொடிய முயற்சியை எடுத்துக் காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்க பிரதித் தலைவர் கோபாலசுவாமி மகேந்திரராஜா (மகத்தயா) வுடனான 'கருத்துவேறுபாடு' உண்மையில் இந்த பொதுஜன அதிருப்தியையும், வெறுப்பையும் கையாள்வது எப்படி என்பது தொடர்பாகத் தலைநீட்டியதேயாகும். யுத்தம் உக்கிரமாக்கிவிட்டுள்ள சமூக, பொருளாதார பிரச்சினைகளில் இருந்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு விடுதலைக்கான பாதை அவசியமாகியுள்ளது.

இந்திய முதலாளித்துவ அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான உறவுகளை இறுக்கமாக்கிக் கொண்டுள்ள நிலைமையில் விடுதலைப் புலிகள் தலைமை தமது உதவிக்கு பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கு இடைவிடாது அழைப்பு விடுத்துக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளுடனும் யூ.என்.பி அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகள் நடாத்திவரும் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் தமிழ் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் எந்தவொரு உரிமையும் கிடைக்காது. உண்மையில் அது தமிழ் ஈழம் — இலங்கை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் மீது ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் சர்வாதிகாரத்தினைத் திணிக்கும் சதியாகும்.

ஏகாதிபத்தியவாதிகளும், இலங்கை முதலாளிகளும் விடுதலைப் புலிகள் தலைமையும் கூட்டாக ஏற்பாடு செய்யும் இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம் தனது வேலைத்திட்டத்தினை முன்வைத்தாக வேண்டும். அனைத்துலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்ட சோசலிச ஐக்கிய குடியரசினை நிலவும் முன்நோக்கின் அடிப்படையில் இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை நிறுவப் போராட வேண்டும். தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் தமது தேசிய ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கு வேறு இடைநடு, குறுக்குவழிகள் இடையாது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இம் முன்நோக்கின் அடிப்படையில் போராடுகின்றது.

## நிஜசுதந்திரமா? அல்லது...

உயிராபத்தான போராட்டங்களுக்குத் தயாராக வேண்டியுள்ளது, அப் போராட்டம், உக்கிரம் அடையும் வேலையின்மைக்கும் வறுமைக்கும் எதிராக நடாத்தும் போராட்டமாகும், மாபெரும் வர்த்தக மந்தத்துக்கான அறிகுறிகள் எம்மிடையே காணப்படுகின்றது. வேலைநீக்கங்கள் படிப்படியாக அதிகரிப்பது போல் தெரிகின்றது. யுத்த காலத்தில் உருவான ஏமாற்று சௌபாக்கியம் அகன்று, வறுமை வளர்ச்சி காண்கின்றது. வேலை அல்லது பராமரிப்பினைப் பெறும் போராட்டத்தினை இக்காலத்தில் முன்னெடுக்கும் வழியாக போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு கோருகின்றது:

★ வேலைநீக்கம் செய்வதை நிறுத்து! ★ சம்பளத்தைக் குறைக்காமல் வேலைக் காலத்தைக் குறை! ★ உள்ள வேலையை சகல தொழிலாளர்களிடையேயும் பங்கிடு! ★ யுத்தத்துக்கு முன்னைய நிலைக்கு விலைவாசியைக் குறை! ★ ஏழைகளை வரிச் சுமையில் இருந்து விடுவிக்க செல்வந்தர்களிடம் அறவிடும் வரியைக் கூட்டு! ★ விலைவாசி உயர்வுக்கு ஏற்ப சம்பளத்தைக் கூட்டு!

முழு உழைக்கும் மக்களதும் போராட்டங்களை ஒழுங்கு செய்து முன்னெடுக்க ஒரு வர்க்கத்தினால் மட்டுமே முடியும். அதுதான் தொழிலாளர் வர்க்கம். எனினும் இன்று தொழிலாளர் வர்க்கம் கூட கருத்துக் குழம்பிப்போய் பிளவுபட்டுக் கிடக்கிறது. உடனடியாகவும் விரைவாகவும் செய்யவேண்டிய பணி, தொழிலாளர் வர்க்கத்தினை நடவடிக்கையில் ஐக்கியப்படுத்துவதே. அதன் மூலம் மட்டுமே வர்க்கத்தைப் பாதுகாக்கமுடியும். அதன் மூலம் மட்டுமே முழு உழைக்கும் மக்களையும் போராட்டத்துக்கு இழுக்க முடியும். உழைக்கும் மக்களை நடவடிக்கையில் ஐக்கியப்படுத்தும் பொருட்டு நடவடிக்கையில் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம். உழைக்கும் மக்கள் போராட்டத் தலைமை, தொழிலாளர் வர்க்கத் தலைமையாக வேண்டும்.

தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தை உருவாக்கும் வழி, தொழிலாளர் வர்க்க அரசியல் கட்சிகளிடையே நடவடிக்கையில் ஒன்றிணைவதாகும். வேலைத்திட்டம் நெறிமுறைகள் சம்பந்தமாக அக்கட்சிகளிடையே அவசியமான போராட்டம் உண்டு. எனினும் இக்கட்சிகளிடையேயான பிளவு, தொழிலாளர் வர்க்கத்துக்கு--தொழிற்பாட்டின் போது ஐக்கியப்படாதிருக்கக் காரணமாகக் கூடாது. இக்காலப் பகுதியிடையே போல்ஷிவிக்--சமசமாஜ—கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி உருவாகாது போகின் வளர்ச்சி கண்டுவரும் ஏகாதிபத்திய—முதலாளித்துவ தாக்குதல்களுக்கு எதிராக உருவாக வேண்டிய உழைக்கும் மக்கள் இயக்கம் பலவீனம் அடையும். ஆதலால் போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி பின்வருமாறு கூறுகின்றது;

போல்ஷிவிக்—சமசமாஜ — கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி வேண்டும்! முதலாளித்துவ ஐக்கிய தேசிய கட்சி ஒழிக! தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்க பாதையில் இறங்குவோம்!!! புரட்சி வாழ்க!!!!


**Abonniert jetzt die neue Arbeiter Presse**

14-tägige Zeitung des Bunds Sozialistischer Arbeiter

❑ Ich möchte die neue Arbeiterpresse ab Nr. ........ kennenlernen.
Für 4 Ausgaben zahle ich DM 10,- (BRD) DM 15,- (Europa) DM 20,- (Welt)

❑ Ich möchte die neue Arbeiterpresse ab Nr. ........ abonnieren
Für ein Jahr (24 Ausgaben) zahle ich
DM 65,- (BRD) DM 85,- (Europa) DM 125,- (Welt)
Für ein halbes Jahr (12 Ausgaben) zahle ich
DM 35,- (BRD) DM 45,- (Europa) DM 65,- (Welt)

Name, Vorname ____________________

Straße, Hausnummer ____________________

Postleitzahl, Ort ____________________

Unterschrift ____________________

Ich weiß, daß ich die Abonnement-Bestellung innerhalb von 7 Tagen gegenüber der neuen Arbeiterpresse widerrufen kann, und bestätige dies durch meine 2. Unterschrift. Zur Wahrung der Frist genügt die rechtzeitige Absendung des Widerrufs (Datum des Poststempels).

Datum, Unterschrift ____________________

❑ Ich habe DM ............ bar bezahlt am .............. an ..................
❑ Ich habe DM ............ auf Konto 21 185-431
bei der Postbank Essen überwiesen, Bankleitzahl 360 100 43
❑ Ich habe der Bestellung einen Scheck über DM ............ beigelegt

Bestellungen bitte richten an *neue Arbeiterpresse*, Postfach 100105, D-45001 Essen
Die Lieferung der *neuen Arbeiterpresse* beginnt sofort nach Zahlungseingang


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பிபிதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்